ஈழத்துச் சிதம்பரம்

# காரை ஒலி

# KARAI OLI

காரை அபிவிருத்திச் சபையின் வெளியீடு : கொழும்பு.

## கும்பாபிஷேக மலர்

10-7-1970

"எம்கை உமக்கல்லாது எப்பணியும் செய்யற்க"

"மக்கள் பணியே மகேஸ்வரன் பணி"

MAHOPADHYAYA
SWAMINATHA IYER LIBRARY
MADRAS
MYLAPORE



திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.



# கணேசன் ஸ்ரோர்ஸ்

Grams: KANESANTEX
Phone: 7169

78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

கிளை : 63, கே. கே. எஸ். ரோட்.

அகரம் முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தேன் பருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பி தனக்காக வனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள் கைக் கனியோனே
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானை முகப் பெருமாளே.



ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

உ
சிவமயம்

# காரைநகர் சிவன்கோயில் திருப்பணிச்சபை
## KARAINAGAR SIVAN KOVIL THIRUPPANI SABAI

இ. வே. கார்த்திகேசு
தலைவர்

க. ஆறுமுகம்
பிரதித் தலைவர்

அ. நாகலிங்கம்
அ. கனகசபை J.P.
இணைக் காரியதரிசிகள்.

ந. சுப்பிரமணியம்
தனாதிகாரி

சோ. அம்பலவாணர்
கு. இராசையா
உதவித் தனாதிகாரிகள்

KARAINAGAR
12.8.1970

காரை அபிவிருத்திச் சபை,
கொழும்பு.

அன்புடையீர் !

காரை அபிவிருத்திச் சபை 44ம் நாள் அபிஷேக வைபவத்தில் ஈடுபடுவதைப்பற்றி இச்சபை பெருமித மடைகின்றது. கும்பாபிஷேகத்தன்று அநேக அங்கத்தவர்கள் ஒரேமனதுடன் தொண்டு செய்ததை எவரும் போற்றுவர். ஈழத்துச் சிதம்பரம் காரை அபிவிருத்திச் சபை சிறப்பாகவும் சீராகவுமிருந்து தனது தொண்டில் பங்குபெறவிருந்ததற்கு, கொடுத்த அருளின் பெருமையோ அல்லது அடியார்களின் அன்போ, யாமறியோம். திண்ணக்கழிக் கூத்தன் இச் சபை இவ்விதமான தொண்டுகளில் ஈடுபட அநுக்கிரகம் செய்வாராக.

திண்ணக்கழி சௌந்தராம்பிகை சமேதரான சுந்தரன் அருள்பாலிப்பாராக.

இங்ஙனம்,
காரைநகர் சிவன்கோயில் திருப்பணிச்சபை.

உ

சிவமயம்

# ஈழத்துச் சிதம்பர

# குடமுழுக்கு விழா மலர்

## 10-7-70



## காரைஒளி சிறப்பிதழ்

### கொழும்பு காரை அபிவிருத்திச் சபையினர்

ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வர

சுவாமியின் பாதார விந்தத்தில்

இம்மலரைச்

சமர்ப்பிக்கின்றனர்.

48, அல்பேர்ட் இடம்,

தெகிவளை.

22-8-70

# ஈழத்துச் சிதம்பரம்

சுவாமி பெயர் :— சுந்தரேசுவரர்
அம்பாள் பெயர் :— சௌந்தராம்பிகை

தலவிருட்சங்கள் :

1. அரசு 2. வன்னி 3. இருப்பை

தீர்த்தங்கள் :

1. பரமானந்தகூபம் 2. சித்தாமிர்தவாவி
3. தூர்வாசசாகரம்

கும்பாபிடேகம் :

சுந்தரேசுவரர்

முதலாவது 1848 இரண்டாவது 19-3-1903
மூன்றாவது 26-1-1934 நான்காவது 16-11-1950
ஐந்தாவது 10-7-1970

சதாபிடேகம் 17-6-1948

ஐயனார் (இரண்டாவது) கும்பாபிடேகம் 6-9-1929
நடராஜர் ,, 23-4-1908

நவக்கிரகங்கள் கும்பாபிடேகம் 27-11-1931

தேவஸ்தானகர்த்தாக்கள் :

1. அம்பலவிமுருகர்
2. சண்முகத்தார்
3. சின்னத்தம்பியார்
4. மாசிலாமணி + துரையப்பா
5. ஆண்டிஐயா + முருகேசு

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

புராதனப் பெருமை நிறைந்து மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களைக்கொண்டு, ஈழத்துச் சிதம்பரம் என பக்தர்களாற் போற்றப்படுவதாகிய கீர்த்திமிக்க காரைநகர் சிவன் கோவில் பல ஆண்டுகளாக பல இலட்ச ரூபாயின் கருங்கற் திருப்பணி நிறைவெய்தி நிகழும் சாதாரண வருஷம் ஆனி மாதம் உத்தர நன்னாளில் ஜீரணோத்தர மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்புற நடைபெற்றது.

இத்தலத்தில் குடிகொண்டிருந்து அருள் பாலிக்கும் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசப் பெருமானின் திருவருட் திறம் சொல்லுந்தரமன்று.

தமிழகத்தில் பிரசித்திபெற்ற சிதம்பரம், மதுரை முதலிய கோவில்களின் கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்பட்ட மலர்கள் சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை தருவனவாக — ஆராய்ச்சிக் கருவூலமாகத் திகழ்கின்றன.

இலங்கையில் பிரசித்திபெற்ற ஈழத்துச் சிதம்பரத்திற் மகா கும்பாபிஷேகத்தையொட்டியும் ஒரு சிறந்த மலரை வெளியிடுவது பொருத்தமானதெனை விரும்பினோம். கும்பாபிஷேகத் தினத்திற்கும் மண்டலாபிஷேகப் பூர்த்திக்கும் இடைப்பட்ட இக்குறுகிய காலத்துள் இம்மலரை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதால், எமது எண்ணம் முழுவதையும் நிறைவேற்றி இக் கும்பாபிஷேகத்தின் பெருமைக்கு ஈடாகப் பெருமலரொன்றைத் தயாரிக்க இயலாமற் போய்விட்டது. எனினும் இம்மலர் கும்பாபிஷேகத்தின் நினைவுச் சின்னமாகவும், திண்ணபுரத்தானின் திருவருளின் பெருமையைக் கோடிட்டு ஓரளவு காட்டக்கூடியதாகவும், பல அறிஞர்களின் கைவண்ணத் திரட்டான கட்டுரைகளைக் கொண்டதாகவும் விளங்குகின்றது.

அளவில் பெரிதாக அமையாவிடினும், மகிழம்பூ போலச் சிறியதாக அமைந்திருந்தபோதும், இம்மலர் விஷயப்பொலிவைக் கொண்டதாக மணம் பரப்புமென்பது எமது நம்பிக்கை.

இம் மணமலரை, திண்ணபுரத்தில் திருப்பாதந்தூக்கி நின்றாடும் அண்ணலின் திருவடிகளிற் சமர்ப்பித்து வணங்குகின்றோம்.

*With the best compliments*

*from*

# Mahalucksmi Stores

**( S M K )**

**26, New Chetty Street,**

**Colombo-13.**

*Branches:*

228, Hospital Road

JAFFNA.

**T'phone : 2 7 8 7 5** **T'grams : "MAHALUCK"**

WITH THE BEST COMPLIMENTS

FROM

# THIRUPPATHY STORES

GENERAL MERCHANTS & GOVT. CONTRACTORS

**311 & 315, Nagalagam Street,**

**COLOMBO-14.**

T'Phone : 3 3 2 2 9 T'Grams: "MUGUNSTOR"

*கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழா அர் எனின்.*

உ

சிவமயம்

## ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்துப் பிரதம ஆசாரியர்

## சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி



**நா**ல்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேத உயிர்களெல்லாம் ஒன்றோடொன்று ஒவ்வாத நிலையையுடையன என்பது கூர்ந்து சிந்திப்பார்க்கப் புலனாகும். அவற்றில் மனித உடம்பெடுத்த உயிர்களது நிலை வெளிப்படையாகக் காணக்கூடியது. இந்நிலை வேறுபாடுகளைத் திருவருள் வழி ஒழுகிய பெரியோர்கள் உலகாயதம் முதலான நெறிகளாகக் கூறுவர். ஒன்றோடொன்று ஒவ்வாத நெறிகளெல்லாம் இருப்பது நீதியென்று சைவசித்தாந்தம் மாத்திரமே கூறுகின்றது. உடம்போடு கூடிய உயிர்களது நிலையை ஊன்றிக் கவனிப்பார்க்கு இந்தச் சைவநீதி நன்கு விளங்கும். சைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் நாமெல்லாம் சைவநீதியைப்பற்றி விசாரிக்கின்றோமா? என்பது நம்மை நாமே கேட்க வேண்டிய மிக முக்கியமான கேள்வியாகும். விசாரித்துச் சைவநீதியை இறுகப் பற்றிக்கொண்டால் இன்னல்களுக்கு இடமில்லை.

மண்டலாபிஷேகத்தையொட்டி மலர் வெளியிடும் காரை அபிவிருத்திச் சபையினர் செயலைப் பாராட்டி, சைவநீதி நிலைபெறும் வகையில் மேன்மேலும் அவர்கள் தொண்டாற்றக் கூத்தப் பிரானது திருவருளால் சகல வாய்ப்புகளும் கிட்டவேண்டுமென்று பெரிதும் விழைகின்றேன்.

க. மங்களேஸ்வரக் குருக்கள்

ஈழத்துச் சிதம்பரம்,
காரைநகர்,
12-8-70.

*With Best Compliments*

*from*

# SUIT HOUSE

**25, Vajiayarama Mawatha,**


**Maradana,**

**COLOMBO-9.** T'phone: **95331**

***Branches:-***

58, Keyzer Street,
Colombo-1.

483, Maradana Road,
Maradana.




இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

# ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான கர்த்தர்களின்

# வாழ்த்துச் செய்தி



பல ஆண்டுகளுக்கு முன்னர் பெரியார் அம்பலவி முருகர், வைரவ சூலத்தையும், ஐயனாரையும் வைத்து ஆன்மார்த்தமாக வழிபட்டு வந்தார்.

அவ்வழிபாட்டில் அயலவர்கள் மெல்ல மெல்லக் கலந்து கொள்ளவே அவ் வான்மார்த்த வழிபாடு பரார்த்தம் ஆகியது. இப் பரார்த்த வழிபாடு காலத்துக்குக்காலம் வளர்ந்து கொண்டே வருகின்றது. எமது காலத்தில் ஆலயம் கருங்கல்லால் கட்டப்பட்டு ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகம் நிறைவெய்தி, மண்டலாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. மண்டலாபிஷேகத்துக்கு முதல் நாளில் நடைபெறும் அபிஷேகத்தை நடாத்தவிருக்கும் காரை அபிவிருத்திச் சபையினர் (கொழும்பு) மண்டலாபிஷேகத்தை முன்னிட்டுப் பல அறிஞர்களின் கட்டுரைகளைக் கொண்ட ஒரு விசேட மலரையும் வெளியிட முன்வந்திருக்கின்றமை பெரிதும் பாராட்டப்பட வேண்டியது. அவர்கள், நமது கிராம முன்னேற்றமான விஷயங்களிலும், நமது ஆலயம் சம்பந்தமான விஷயங்களிலும் மிகுந்த அக்கறை உள்ளவர்கள். சிரமத்தைப் பொருட்படுத்தாது எதையும் சாதிக்கக் கூடியவர்கள் அவர்கள் எடுக்கும் முயற்சிகள் பல்லாற்றானும் சிறந்து பொலிக வெனச் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசுவரப் பெருமான் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"

அ. ஆண்டிஐயா,
து. முருகேசு

WITH BEST COMPLIMENTS

FROM

# M/s. V. Selvaratnam & Co.,

**204, Pickering Road,**

KOTAHENA.

**COLOMB-13**

P. O. BOX 1651

T'Phone: 33935



*With best compliments*

*from*

# Mrs. P. VELLUPPILLAI

Licensed Pawn Brokers & Jewellers

87, Sea Street,
COLOMBO-11.

"SELVAMAHAL"
Sivan Kovil Road,
KARAINAGAR.


மலர்மிசை ஏகினான் மாண் அடிசேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

உ
சிவமயம்

" பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே "

# காரை ஒளி

| | | |
| --- | --- | --- |
| ஒளி 2 | திருவள்ளுவர் ஆண்டு 2001<br>சாதாரண ஆண்டு ஆவணித் திங்கள் | சுடர் 5 |


## சைவம் காத்த பூமி

காரைநகர் சைவம் காத்த பூமி என்று கூறினுல் அது தற்புகழ்ச்சியல்ல. வரலாற்றுக் கண்ணேட்டத்தோடு நோக்குங்கால் அவ்வுண்மை நிலை நிறுத தப் படுகின்றது- இற்றைக்கு 2400 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சரித்திரப் பெருமை யுடைய தென்பதும், அகத்தியர் முதலிய பேரறிஞர்கள் வாழ்ந்து வந்தார் கள் என்பதும், துர்வாச முனிவர் வாசஞ் செய்தார் என்பதும் சரித்திரம் சொல்லும் உண்மைகள்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கிய இப்பூமியில் பல மாற்றங்கள் காலத்திற்கு காலம் நிகழ்ந்து வந்தன.

அந்நியரின் ஆட்சிக் காலத்தில் சைவாலயங்கள் தரைமட்டமாக்கப்பட் டன. அவ்வாலயங்களிலிருந்த விக்கிரகங்களை சைவ மக்கள் மறைத்தும் புதைத்தும் வைத்திருந்தனர். சைவ சமய வளர்ச்சிக்கான சாதனங்கள் யாவும் சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்டிருந்த போதிலும், சிவ மணம் இப் பூமியில் வேரூன்றியிருந்தது. அதனாலன்றோ அறநெறி வளர்க்கும் புண்ணிய பூமியாக இன்று காரைநகர் திகழ்கிறது; ஊர் சிறிதாக விருந்தாலும் சிவாலயங்கள் அதிகமுண்டு. அன்னியரின் பயத்தினுல் ஆலயங்களுக்குச் சென்று வணங்கமுடியாத மக்கள் வீட்டுக்குவீடு, விக்கிரகங்களை வைத்து வழிபட்டு வந்திருக்கிறார்கள். இன்று ஒவ்வொரு குறிச்சியிலும் மலிந்து காணப்படும் வைரவ கோயில்களும் மற்றும் ஆலயங்களும் இவ்வுண்மையை உறுதிப்படுத்து கின்றன. இவ்வூரில் தோன்றிய ஆலயங்கள் ஒவ்வொன்றினதும் வரலாறு மிக அற்புதமானது.

காரைநகரில் முக்கிய ஆலயங்களாக விளங்கும், மணற்காட்டு அம்மன் கோயில், பாலாவோடை அம்மன் கோயில், திக்கரை முருகமூர்த்தி கோயில், கருங்காலி முருகமூர்த்தி கோயில், சிவகாமி அம்மன் கோயில், பயிரிக்கூடல் முருகமூர்த்தி கோயில், வாரிவளவு பிள்ளையார் கோயில், மருதடிப் பிள்ளை யார் கோயில், தெருவடிப் பிள்ளையார் கோயில், நாச்சிமார் கோயில், ஐயனர் கோயில், மாதங் கோயில், மடத்துக்கரை அம்மன் கோயில், நீலிப் பந்தனை அம்மன் கோயில் ஆகியவற்றின் தோற்றங்கள் புதுமை வாய்ந்தன.

காரைநகருக்கு தன்னிகரில்லாப் பெருமையைத் தேடித்தந்திருக்கும் ''ஈழத்துச் சிதம்பரம்'' என்ற காரைநகர்ச் சிவன்கோவில் மிகப் பிரசித்திபெற்ற ஆலயமாகும். அதன் வரலாறு அற்புதமானது; ஆண்டி கேணியில் அகழ்ந் தெடுக்கப்பட்ட ஐயனர் விக்கிரகம் அந்நியர் ஆட்சியின்போது புதைத்து வைக்கப்பட்ட விக்கிரகம் என ஊகிக்கப்பட்டிருக்கிறது. இவ்விக்கிரக தோற்றத் திலிருந்து உற்பத்தியான ''சிவன்கோயில்'' காலக்கிரமத்தில் பெரும்வளர்ச்சி யெய்தி இன்று ''ஈழத்துச் சிதம்பரம்'' என்னும் பெருமையோடு திகழ்கிறது. காரைநகருக்கு மட்டுமன்றி ஈழத்திற்கே பெருமை தேடித்தரும் பெரும் ஆலய மாகத் திகழ்கிறது.

காரைநகர் சைவம் காக்கும் பூமி என்பதற்கு இது ஓர் உதாரணம்:

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் உருவாகிய காரைநகர்ச் சைவ மகா சபை சைவமும் தமிழும் வளர்க்கும் பெருந் தாபனமாகத் திகழ்ந்து வந்திருக்கி றது. இச்சபையின் 50வது ஆண்டு நிறைவு விழாவின் போது மதுரை திருஞான சம்பந்தர் ஆதீன கர்த்தர் ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகர் ''ஒரு சபை 50 வருட காலமாகத் தொண்டாற்றி வருகிறதென்றால், அந்தச் சபையை நடத்துகிற வர்களின் சைவாபிமானத்தையும், அயராத உழைப்பையும் ஆர்வத்தையும் மெய்ப்பித்து காட்டுகிற காரியமாகும். மேன்மைகொள் சைவ நீதியை உல கெல்லாம் பரவச்செய்யும் ஆற்றல் பெறவேண்டுமெனவும்'' வாழ்த்தியுள்ளார்.

''இலங்கைத் தேசத்தில் காரைநகரில் ஜனங்களிடையே சைவசமயத்தையும் தத்துவங்களையும் பிரசாரம் செய்யும் உத்தம நோக்கத்துடன் ஐம்பது வருடங் களுக்கு முன் அநேக ஆஸ்திகர்களால் ஆரம்பிக்கப்பட்டு பிரதிவாரமும் தகுந்த தமிழ்ப் பண்டிதரின் மூலம் தேவாரம் முதலிய சைவ நூல்களில் பயிற்சி வகுப்பு நடத்துவது, நால்வர் முதலிய சைவபக்தர்களின் நினைவு நாட்களைக் கொண்டாடுவது முதலிய தொண்டுகளை செய்துவந்துள்ளது'' என ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் கூறியுள்ளார்.

பல இலட்சம் ரூபா செலவில் புணருத்தாரனம் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கும் ஈழத்துச் சிதம்பரம் சைவசமய வளர்ச்சியின் பெரும் சின்னமாக திகழ்கிறது.

சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பெருநோக்கோடு அதன் நற் பணிகளுக்கு காரைவாழ் பெருங்குடி மக்கள் வாரி வழங்கியிருக்கின்றார்கள்.

சைவசமயத்தைப் பேணிப் பாதுகாப்பதற்குக் காலஞ்சென்ற நீதியரசர் திரு ந. நடராசா கே. சி. அவர்களின் திருவாட்டி திருமதி தங்கம்மா நடராசா அவர்கள் ஆற்றிய சேவை அளப்பரியது. தாய்க்குலத்திற்கென பல இலட்சம் ரூபா செலவில் சிவ ஆச்சிரமமொன்றை ''ஈழத்துச் சிதம்பரம்'' என்னும் தலத்தில் அமைத்துள்ளார். இதுபோன்ற ஆச்சிரமம் இலங்கையில் வேறு எங்கணும் கிடையாது.

சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டுழைத்து வரும் காரைமக்கள் தில்லைச் சிவனின் திருவருள் பெற்று பேரின்ப பெருவாழ்வு மடைவார்களாக.

வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாட கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண் டாடினன் ஞானனந்தக் கூத்தனே.

# ஈழத்துச் சிதம்பரமும் காரை அபிவிருத்திச் சபையும்

காரை அபிவிருத்திச் சபைக்கும் ஈழத்துச் சிதம்பரத்திற்கும் பிரிக்க முடியாத ஒரு தொடர்பு நிலவி வருகிறது. காரை நகருக்குமட்டுமன்றி ஈழத்திற்கும் பெருமை தேடித்தந்திக்கும் காரைநகர் சிவன் கோவில் வளர்ச்சியிலும், உயர்ச்சியிலும் சபை முக்கிய பங்கெடுத்து உழைத்து வந்திருக்கிறது. சுந்தரேசப்பெருமானின் திருவருற்பிணைப்பில் ஊறித்தழைத்து பக்திவெள்ளத்தில் மிதந்திருக்கும் எம்சபையினர் அப்பெருமானின் திருப்பணிக்கு தாராளமனத்தோடு பல்துறையிலும் உழைத்து வந்திருக்கின்றுர்கள்.

நிதி தேவையென்று திருப்பணிச் சபையார் வேண்டுகோள் விடுத்தபோது இயன்றளவு நிதி திரட்டிக்கொடுக்க சபை முன்னின்று உழைத்து வந்திருக்கிறது. கடந்த 9-1-69ல் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கலை நிகழ்ச்சியொன்றை சபை நடத்தியது. அந்நிகழ்ச்சிக்கு வழக்குரைஞர் திரு. சு. சர்வானந்தா அவர்கள் தலைமை வகித்தார்கள். திரட்டிய உதவி நிதி ரூ. 9000/- ஆகும்.

11.12.69ல் சபையின் ஆண்டு விழாவையொட்டி மேலும் ஓர் கலைநிகழ்ச்சி நடத்தப்பட்டது. காரைநகர் இந்துசமய வளர்ச்சிச் சங்கம் தயாரித்தளித்த 'மணியோசை' நாடகம் பிரதான நிகழ்ச்சியாகும். அத்துடன் இயல், இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. செல்வி பராசக்திவன்னியசிங்கம்—பேச்சு, செல்வி மனோகரி சதாசிவம்—கதாப்பிரசங்கம் செல்வி கமலா சதாசிவம் புல்லாங்குழல், திருமதி கமலா ஜோன்பிள்ளையின் கலாலயமாணவி செல்வி வாசுகி சுப்பிரமணியம்—பரதநாட்டியம் ஆகியன இடம்பெற்றன. இந்நிகழ்ச்சிக்கு வழக்கறிஞர் திரு. ச. க. பொன்னம்பலம் தலைமை வகித்தார்கள். இந்நிகழ்சியால் ரூபா 2000/- திரட்டப்பட்டது.

இருநிகழ்ச்சிகள் மூலமும் திரட்டப்பட்ட ரூபா 11,000/- ஈழத்துச் சிதம்பர திருப்பணிக்கு வழங்கப்பட்டது.

மகா கும்பாபிடேக நிகழ்ச்சிகளை திறம்பட நடத்தவும் சபை பல வழிகளிலும் உதவி புரிந்து வந்துள்ளது.

கும்பாபிடேக நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல் செய்வதற்கு சபை சகல முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தது. எமது சபையின் காப்பாளர் திரு. ச. க. பொன்னம்பலம் அவர்கள் இத்துறையில் மேற்கொண்ட முயற்சி பாராட்டத்தக்கது.

ஈழத்துச் சிதம்பர வளர்ச்சியில் தொடர்ந்து உழைத்துவர எல்லாம் வல்ல சுந்தரேசப் பெருமான் திருவருள் கிடைப்பதாக.

---

இவ்வாலயத்தை ஸ்தாபித்த அம்பலவி முருகர் ''கந்தன்'', ''சங்கரன்'' என்னும் பெயர்களுடைய இரண்டு எருதுகளை வளர்த்து வந்தார். அவர் பெயர் சொல்லிக் கூப்பிட்டால் செய்யவேண்டியதென்ன என்று கேட்பன போல் அவ்விரு எருதுகளும் அவர் முன் ஓடிவந்து நிற்கும். அவை இக்கோவில் திருப்பணிக்கு பெரிதும் உதவியாயிருந்து வந்தன எவ்வளவு பெரும் பாரத்தையும் தம் களைப்பையும் பொருட்படுத்தாது இழுத்துக் குறித்த இடத்திற்குச் சேர்ந்து வரும் தன்மையன.

அக்காலத்தில் இவ்வாலயத்தில் இரண்டு நாகங்களும் வாழ்ந்து வந்தன. அம்பலவி முருகர் அவற்றிற்கு ''கூழையன்'' ''வாலன்'' என்று அழைத்து வந்தார். அவை கோவிலில் சர்வசாதாரணமாய் உலாவி வந்தன. பிறருக்கு எவ்வித இடையூறும் விளையாமல், களவு முதலியன நடைபெறுமல் அவை பாதுகாத்து வந்தன. இவையெல்லாம் அம்பலவி முருகரிடம் விளங்கிய திருவருளின் சாயலாக மக்கள் கருதி வந்தார்கள்.

*With Best Compliments*

*from*

# BRITISH BRUSH WORKS

**(FAMOUS SINCE 1937)**

Markers of all kinds Brushes
Polish & Distember.

**333, Trincomalee Street,**
**MATALE.**

*Colombo Office:*
88/4, St. Sebastian Street,
Colombo-12.
*T'phone:* 26537

*T'phone:* 379

**With Best Compliments**

**from**

# HARRISONS CROSFILED LTD.

PRINTING DEPT.

P. O. BOX 69

Colombo-1

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

# கும்பாபிஷேகம்

திரு. கா. கைலாசநாதக்குருக்கள், M.A., Ph. D.
சமஸ்கிருத விரிவுரையாளர், இலங்கைப் பல்கலைக்கழகம்.

பிரதிட்டை என்றால் என்ன? இக்கிரியையில் யாகசாலை எதற்காக? கும்பங்கள் எதற்காக? குண்டங்கள் அமைத்துத் தீ வளர்ப்பது யாது காரணம்பற்றி? நேரே திருவுருவிலேயே இறைவனைத் தோற்ற வைக்காது கும்பம், குண்டங்கள் முதலிய உபாயங்களைக் கையாளும் நோக்கந்தான் யாது? என்ற கேள்விகளுக்கு உரியவாறு விடை கூறும் முகமாகக் கும்பாபிஷேகக் கிரியையமைப்பையும் அடிப்படைத் தத்துவத்தையும் சுருக்கி அறியத்தருவது இக்கட்டுரை.

எங்கும் நிறைந்தவன் இறைவன். அவ்வாறிருந்தும் அவனைத் தரிசித்தல் வேண்டிப் பல்லாயிரக் கணக்கான மக்கள் கோவிலையே நாடிச் செல்லுகின்றனர். இதனால் 'அவன் எங்கும் உளன்' என்ற சிறப்புக் குன்றுமோவெனின், ஒரு பொழுதும் குன்றாது. சிக்கலான இக் கேள்விக்குத் தெளிவான விடை பகருகின்றது சிவஞான சித்தியார் (12-3-4) பசுவின் உடலெங்கணும் பால் பரந்து சுவறியுள்ளது. எனினும் அது முலைகளின் வழியேதான் வெளியேறுகிறது. அதே போன்று எங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் குறிப்பிட்ட இடத்திலேயே சிறப்பாக வெளிப்போந்து அருள் சுரப்பான். இவ்வாறு அருள் பெருக்குமிடம் குருலிங்க சங்கமமெனச் சமய நூல்கள் கூறும். இம்மூன்றனுள் இலிங்கத்தில் இறைவன் தோற்றியருளுதலையே ஆலய வழிபாட்டில் நாம் உணருகின்றோம்.

இலிங்கம் என்பது அடையாளம் எனப் பொருள் [பெறும். இவ்வடையாளம் சிவபெருமானை மட்டிலும் சிறப்பாகச் சுட்டுதல் பற்றிச் சிவலிங்கம் எனவும் படலாயிற்று. பரம்பொருளான சிவபிரானின் இயல்புகளை உணர்த்தும் அடையாளமான சிவலிங்கம், 'அப்பரமன் இத்தகையன்' என எமக்கு விளக்கி நிற்கின்றது. அவ் விளக்கத்தின் சுருக்கம்: '' 'உருவமில்லாத எம் பெருமானை எவ்வாறு கிரகிப்போம் என ஏங்கி அலமந்து நிற்பார்க்கு உருவங் காட்டியும் 'எம் போன்று உருவம் வாய்ந்தவன் இவன்' எனத் தற்பெருமை தோன்ற இறுமாந்து நோக்குவார்க்குக் கை, கால் முதலிய உறுப்புக்களைத் தெளிவாகப் பெறாத அருவநிலையில் தோற்றியும் அருவுருவமாக விளங்குவது இலிங்கத் திருமேனி'' என்பதாம். இத்துணைப் பெருமை வாய்ந்த இலிங்கத் திருமேனி அகண்டாகார சச்சிதானந்தப் பிழம்பாய்ப் பரமன் விளங்கும் உயர் தத்துவத்தை உணர்த்துவது. சிவபிரானுக்கு உரித்தான இச் சிவலிங்கத் திருமேனி இல்லாத கோவில் கோவிலாகாது. அரசன் இல்லாத நாடு போன்றதே இலிங்கத் திருவுருவமில்லாத திருக்கோவில். பாரத நாட்டில் ஆகம முறைப்படி அமைந்த கோவில்களில் இலிங்க ஸ்தாபனம் இல்லாத கோவிலைக் காணலரிது. கோவில்களில் எல்லாம் இறைவன் தம்மைச் சுட்டும் அடையாளமான இலிங்க மூர்த்தியாகிக் கருவறையில் மூல விக்கிரகமாய் முதன்மை பெற்று எழுந்தருளுகின்றான். சிவபிரானுக்கல்லாது ஏனைய மூர்த்திகளுக்கு நிறுவப்படும் மூல விக்கிரகம் அவ்வுருவமான இலிங்க வடிவில் அமையாததாய் உருவ நிலையிலேயே உபாயமாக நிறுவப்படுதல் உபசார வழக்கு.

பாரெங்கணும் நிறைந்து பரந்து விளங்கும் பரமனை பால் கறப்பவன் பசுவின் முலைகளினூடே பாலைத்தோற்றுவிப்பது போன்று, எவ்வாறு குறிப்பிட்ட ஓர் இடத்தில் வெளிப்படுவது? இவ்வாறு வெளிப்படுத்தும் வழிகளையே ஆகமங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. வெளிப்படுத்தும் இவ்வரிய நிகழ்ச்சியை நிகழ்த்துபவனே அருச்சகன். கல்லில் வடிக்கப்பட்ட வடிவத்தில் ஆகமங்கள் கூறும் வழியைக் கடைப்பிடித்தே இறைவனை எழுந்தருளச் செய்கின்றான். இது நிகழுமாற்றைச் சிறிது விரிவாக நோக்குவதற்கு முன் பிரபஞ்ச அமைப்பைச் சற்று நுணுகி அவதானித்தல் பயன்தரும். பிரபஞ்சத்தில் உள்ள பொருள்கள் அனைத்தையும் எட்டுப் பிரிவுகளுள் அடக்கலாம். இவற்றிற்குப் புறம்பான பொருளொன்று உண்டு என்றால்,

அவை இவையெட்டும் ஒருங்கு ஒன்றுசேரும் வண்ணம் அருளுருவம் தாங்கும் இறைவனே ஆகும். மண், நீர், நெருப்பு, காற்று, வெளி எனப்படும் ஐந்து பூதங்களும் இவற்றுக்குப் புறம்பாய் இருந்து இவை விளங்கவும், வாழவும் ஆற்றல் பெருக்கும் சூரியனும சந்திரனும், இவ்வேழனின் வேறாய் நின்று இவற்றை உணரும் எசமானனும் ஆகிய எட்டுமே இப்பிரிவுகள். பிரபஞ்சம் முழுவதும் இறைவன் நிறைந்து நிற்பன் ஆதலால் இப்பிரபஞ்சத்தின் கூறுகளான இவ்வெட்டுப் பொருள்களிலும் இறைவனை உணருகின்றோம். இவ்வெட்டு அம்சங்களையுமுடைய பரமன் இதுபற்றி அட்டமூர்த்தி எனச் சிறப்புப் பெற்றவன். எனவே இவ்வெட்டு அம்சங்களில் நிகழ்த்தும் வழிபாடு அவனது வழிபாடாகும். இவ்வம்சங்களில் இறைவன் எழுந்தருளலைக் காணல் அவனைக் காணலே யாகும். இவ்வடிப்படையிலேதான் சிவாசாரியார் இறைவனைச் சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளுவித்து அங்கு என்றும் சாந்நித்தியமாக விளங்கும்படி செயலாற்றுகின்றார். இவ்வாறு நிகழும் கிரியையே பிரதிட்டை எனப்படும்.

பிர என்னும் பகுதிக்குச் சிறப்பாக என்றும், நன்கு புலனாகும்படி என்றும், திஷ்ட என்னும் பகுதிக்கு நிற்றல் என்றும் பொருள் உண்டு. எனவே பிரதிஷ்டை என்னும் சொல் ஏனைய இடங்களில் புலனாகுவதைக் காட்டிலும் சிறப்பாக 'நிலை நிற்றல்' என்றும் 'ஏனைய இடங்களில் நிற்பதைக் காட்டிலும் நன்கு புலனாகும்படி நிலைநிற்றல்' என்றும் பொருள் பெறும். இந்நிலையை வருவிக்கும் கிரியையே ஆகமங்கள் கூறும் பிரதிட்டை ஆகும்.

பிரதிட்டை என்னும் கிரியை கும்பாபிஷேகம் என்னும் மறுபெயரால் வழங்கி வருகிறது. இச்சொல் பிரதிட்டை என்னுஞ் சொல் போலக் கிரியையின் விளைவைச் சுட்டாது கிரியையின் ஓரமைப்பாகிய முழுக்காட்டுதலை மட்டும் குறித்து நிற்கின்றது. பிரதிட்டை என்னுங் கிரியையில் குடத்தில் நிரப்பப்படும் புனித நீரால் இலிங்கத் திருமேனிக்கு நிகழ்த்தும் நீராட்டுதலே சிகரமான அம்சம். சிகரமான இக்கும்பாபிஷேகமே — குடமுழுக்கே — பிரதிட்டையே, இறைவனை அகன்ற பரப்பினின்றும் வெளிக்கொணர்ந்து ஒருவழிப்படுத்தி எழுந்தருளி நிலைநிற்கச் செய்யுஞ் செயலைச் சுட்டுகின்றது.

ஆகமங்கள் கூறும் இவ்வுபாயத்தினை, குடநீரால் முழுக்காட்டல் மூலம் இறைவனை எழுந்தருளி நிலைநிறுத்தும் முறையின் சிறப்பினை, வேதாகமங்களைத் துணை கொண்டு நோக்குமிடத்து, இக் கிரியை முறையின் சிறப்பும், உயர் தத்துவமும் புலனாகும். அதைச் சற்று நுணுகி நோக்குவாம்.

எங்கும் நிறைந்த இறைவன் புலன்களால் கிரகிக்கப்படாத பெருமான், எமக்கிரங்கி, திருவருள் பாலித்துப் படிப்படியாக எங்கட்குப் புலனாகிக் கிட்டும் முறையை உபநிடதங்கள் எடுத்துரைக்கின்றன. இதைத் துணையாகக் கொண்டு வகுத்தமைக்கப்பட்டுள்ளது பிரதிட்டை என்னும் கும்பாபிஷேகக் கிரியையாகும். சர்வ வியாபி எனச் சுவேதாசுவரதங் கூறும் பகவான் முதலில் சிறு அளவில் மட்டுமே புலனாகும்வண்ணம் ஆகாயமாக வெளிப்படுகிறான். ஆகாயந்தானும் இந்திரியங்களால் செவ்விதாகக் கிரகிக்கப்படாமையால் வாயுவாகச் சற்று விரிகின்றான். ஆகாயத்தினும் பார்க்க வாயு சிறிது அதிகமாக உணரப்படக்கூடியதெனினும் அது கண்ணால் காண்பதற்கு அரிதான தொன்று அன்றோ! இதை அடுத்த நிலை அக்கினியாக விரிந்த நிலை, இது கட்புலனாவதே. இது தூய்மை பெருக்கி எம்மை ஈடேற்ற வல்லது. அக்கினியைப் பெரிதும் நெருங்கிப் பேணிப் பாதுகாத்துத் தொடர்ச்சியாக வழிபடுதலில் இன்னல்கள் பல உள. இவ்வின்னல்கள் எதுவும் இல்லாது தானே எல்லாமாய் விளங்குவது நீர். என்றாலும் கிரகிக்கத் தக்கவாறு நீரை ஒரே நிலையில் நிலைபெற நிறுத்தி அங்கு இறைவனைக் கண்டு தொடர்ச்சியாக வழிபடுதல் எளிதன்று. இதுகாறும் கூறியவற்றினின்றும் வேறானது ஐந்தாவது பொருளாகிய மண், இதனிடத்து இறைவனை நிலைநிறுத்தித் தொடர்ச்சியாகக் கண்டு அவனைக் கிரகித்தல் எமக்கு நன்கு கைகூடவல்ல நிலை. இவ்வாறு இறைவன் அருவ நிலையினின்றும் இழிந்து ஆகாயம், வாயு, தீ, நீர், மண் ஆகிய ஐந்திலும் நுண்மை அகன்று படிப்படியாகப் பருமை வளரும் வகையில் விரிந்து விளங்குகின்றான். இதைத் தைத்திரிய உபநிடதம்,

> '' ப்ரம்ஹண ஆகாச: ஸம்பூத:
> ஆகாசாத் வாயு:
> வாயோ ரக்நி:
> அக்நே ராப:
> அத்ப்ய: பிருத்வீ ''

என எடுத்தியம்புகின்றது.

இறைவனை முற்றிலும் புலனாகாத நிலையிலிருந்து பால் கறப்பவன் பசுவுடலெங்கு-

ணும் பரந்து சுவறிய பாலை முலைகளில் வெளிப்படச் செய்வது போன்று விக்கிரகத்தில் வெளிப்பட வைப்பதற்காக இதுகாறும் கூறிய விரிவு முறை வழிநின்று, விண், காற்று, நெருப்பு, நீர், மண் ஆகிய ஐந்தினையும் அவாவி நிகழ்த்தும் கிரியைகளே கும்பாபிஷேகப் பெருகிரியையின் அம்சங்களாய் விளங்கக் காண்கின்றோம். ஆகாயவெளியிலமைவது யாகசாலை. அங்கு வளர்க்கப்படும் அக்கினியும் அதனோடு நெருங்கிய தோழமை பூண்ட வாயுவும் குண்டங்களில் ஒருங்கு உறையக் காண்கிறோம். வேதியின் மீதுள்ள குடத்தில் இருப்பது நீர். இவை நான்கிலும் புலனாகாது எங்கும் பரந்து நின்ற இறைவனைக் கிரியைகள் மூலம் படிப்படியாக வெளியாக்கிப் புலனுக்கவைத்தலே யாகசாலையில் நிகழும் கும்பாபிஷேகக் கிரியையாகும். இக் கிரியையிலே, யாகசாலையில் குண்டங்களில் வளருந் தீயில் இறைவன் தோற்றமடைப்பிக்கப் பெறுகிறான். மேடையில் நிறுவப்பட்ட கும்பங்களின் நீரிலும், கிரியைகளின் சிறப்பினால் மேலும் வெளிப்படுகின்றான். இவ்வாறு வெளிப்படும் நிகழ்ச்சி இறுதியில் மண் அம்சம் வாய்ந்த திருவுருவத்தில் வந்து முடிவெய்கின்றது. முன்னர்க் கூறிய எட்டு அம்சங்களுக்காகத் தனித்தனியே அமைக்கப்பட்ட குண்டங்களில் சாந்நித்தியமானவனை, நீர் நிறைந்த கும்பத்தில் வெளிப்பட்டு நிற்கும் அவனை மண் இயல்பு வாய்ந்த கிரகத்தில் ஒடுக்கி அங்கேயே நிலைபெறச்செய்த பின்னரே அவன் அவ்விக்கிரகத்தில் பாரெங்கணும் புலனாவதைக் காட்டிலும் சிறப்பாக வெளிப்பட்டு பிரதிட்டிக்கப்பட்டவனாய் விளங்குகின்றான். இதுபற்றியே அறவே கிரகித்தற்கரிய இறைவனை எளிதில் கிரகித்தற்கு முடியாதவாறு ஆகாயம் நுண்ணிதாய் இருத்தல் பற்றி முதன்முதல் புலனான ஆகாயத்தில் நிறுத்தி வழிபடுவதற்கு வகையறியாராய் அதையடுத்து கட்புலனாகாத வாயுவிலும் பொருத்தி வழிபடும் ஆற்றல் அற்றவராய் புலனாகித் தோற்றும் தன்மையனாயும் ஒரோவழிப்புலனாகாது திடீரென மறைந்துவிடும் இயல்பினனாயும் விளங்கும் அக்கினியிலும் நிறுவி வழிபடுதலில் திருப்தி காணாதவராய் வற்றும் இயல்பு காரணமாக என்றும் தொடர்ந்து நிலைபெறாத — எனவே பிரதிட்டைக்கு ஏற்றவாறு பொருந்தாத — நிலையினதாதல் பற்றி நீரிலும் இறைவனைத் தாபித்து வழிபடும் வாய்ப்புப் பெறாதவராய் மண்ணிலேயே இறைவனை நிரந்தரமாக நிறுவி வழிபடும் ஒரே வழியைக் கடைப்பிடிக்கும் நிலையுற்றோம். எனவே என்றும் வெளிப்பட்டுப் புலனாகி விளங்கும் வண்ணம் இறைவனை நிறுத்திப் பிரதிட்டை செய்யும் பொருட்டுத் திருக்கோவிலில் நிறுவுவதற்குத் தேர்ந்தெடுக்கப்படும் திருவுருவங்கள் மண்ணுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவையாக விளங்குகின்றன. இவ் விக்கிரகங்களிற் சில மண்ணோடு உறவுகொண்ட மலைகளில் பிளந்தெடுத்த கருங்கல்லில் அமைக்கப்படுவன. சில மண்ணிலே அகழ்ந்தெடுக்கப்படும் ஐவகை உலோகங்களில் வடிக்கப்படுவன. சில மண்ணிலே வளரும் மரங்களில் செதுக்கப்படுவன. இன்னும் சில மண், சுண்ணாம்பு முதலியன கலந்த சுதையால் அமைவன. இவ்வாறு மண்ணின் அம்சத்தை மட்டுமே கொண்டு அமையும் விக்கிரகத்தை நிறுவி அதிலே இறைவனை குடிபுகுத்திச் சிறப்பாகத் தோற்றி விளங்க வைக்கும் கிரியையில் தோற்றுவித்தலை நேரே விக்கிரகத்திலேயே நிகழ்த்துதலை விடுத்து அவன் படிப்படியாக வெளிப்படும் முறையே இலகுவான வழியென உணர்ந்து அதையே உபாயமாகக் கையாண்டு இதுகாறும் சுட்டப்பட்ட விண், வாயு, தீ, நீர், ஆகியவற்றைக் கருவியாகக்கொண்டு இறைவனைப் படிப்படியாக அவற்றினூடே விக்கிரகத்தில் சுலபமாக எழுந்தருளியிருக்கும் கும்பாபிஷேகப் பெருங் கிரியையில் ஆகாயரூபமான யாகசாலையிலும், குண்டங்களில் எரி வளரக் காரணமாகி நின்று அக்கினியினின்றும் வேறுபடாது இணைந்து நிற்கும் வாயுவிலும் அங்கு வளரும் அக்கினியிலும் மேடையில் அமைக்கப்பட்ட கும்பநீரிலும் இறைவனைப் பாரனைத்தையும் கடந்து நிற்கும் துலாசதாந்தத்தில் இருந்து இழிந்து வந்து தோற்றம் பெறுமாறு எழுந்தருளச் செய்து ஆவாகித்து பூசனை புரிந்து, இத்தோற்றம் முழுவதையும் கிரியை முடிவில் மண் இயல்பினதான திருவுருவத்தில் ஒடுக்கி அங்கு நிலைபெற வைத்து இவ்வொடுக்கம் நிறைவுறக் கும்ப நீரால் விக்கிரகத்தை முழுக்காட்டுவதன் மூலம் கும்பாபிஷேகம் நிகழ்த்தும் சிவாசாரியார் எங்கும் பரந்த இறைவனின் வியாபகத்தினை, பசுவின் முலைகளில் பால் வெளிப்படுவது போன்று திருவுருவத்தில் வெளிப்படும் வண்ணம் ஒருமுகப்பட்டு உறைந்து நிறைந்து விளங்கச் செய்கின்றார்.

கும்பாபிஷேகம் என்னும் இக் கிரியையின் பின்னர் எங்கும் பரந்து நிற்கும் இறைவன் ஏனைய இடங்களில் இருப்பதைக் காட்டிலும் திருவுருவத்தில் விசேட சாந்நித்தியம் பொருந்தி விளங்குகின்றான். இந்நிலை கும்பாபிஷேகத்தின் பின் என்றுந் தொடர்ந்து விளங்கும் நிலை. இந்நிலையிற்றான் அபிடேகம், அலங்காரம், நிவேதனம்,

அருச்சனை, உபசாரங்கள் முதலிய ஆராதனை பனால் இறைவனை வழிபடத் தொடங்கு கின்றோம். இவ்வம்சங்கள்கொண்ட வழிபாடு சுருக்கமான நித்தியக் கிரியைகளாகவும் விரிவான நைமித்திகக் கிரியைகளாகவும் திருக்கோவில் வழிபாட்டில் என்றென்றும் நிரந்தரமான இடம் பெறுவன.

''ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவ னும் யாமும் பேதகமன்றால் நம் போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்'' என இறை வன் கூறியவாங்கு சிவபிரானும் முருகனும் வேறுபாடற்றவர்கள். எனவே முருகனது பிரதிட்டையிலும் அவன் உருவம் பற்றிய தத்துவங்களிலும் அட்டமூர்த்தங்கள் அடிப் படைகளாக விளங்குவன.

இதுகாறும் கூறப்பட்ட கும்பாபிஷேக முறை கோவிலே இல்லாத இடத்தில் புதிதாகக் கோவிலெடுத்து விக்கிரகத்தை நிறுவி முதன்முதல் நிகழ்த்தும் அநாவர்த் தனப் பிரதிஷ்டை என்னும் 'முதற் கும்பா பிஷேகம்' பற்றியது.

பிரதிட்டை ஆகி, நெடுங்காலம் வழி பாடு நிகழ்ந்து வரும் கோவிலில் கருவறை யின் பகுதிகள் பழுதடைந்து சிதிலமடையின் மூலவிக்கிரகத்தில் சாந்நித்தியமாய் விளங் கும் இறைவனை உரிய கிரியைகளால் கும் பத்தில் எழுந்தருளச்செய்து வேறு ஒரு இடத்தில் தற்காலிகமான 'பால ஆலயம்' கற்பித்து அங்கு நிறுவப்படும் மரத்தால் ஆன சிலையிலோ திரையில் எழுதப்பட்ட திருவுருவிலோ ஒடுக்கி, கோவிலில் உள்ள பழுதுகளை அகற்றிச் சீராக்கிய பின் பால ஆலயத்தில் இதுகாறும் சாந்நித்தியம் கொண்டருளிய இறைவனை மீண்டும் கும் பத்தில் ஆகருஷித்து, ஆவாகித்து யாக சாலை அமைத்து அங்கு அக் கும்பத்தை ஸ்தாபித்து யாகக் கிரியைகளை முறைப்படி நிகழ்த்திய பின் திருத்தியமைக்கப்பட்ட கோவிலின் கருவறையில் முன்னரேயிருந்த மூல விக்கிரகத்தில் இறைவனை முன்போல் சாந்நித்தியங் கொண்டருளும்படி சேர்ப்பித் தல் முறையாகும். இவ்வாறு நிகழும் கும் பாபிஷேகம் ஜிர்ணோத்தாரண கும்பாபிஷே கம் எனவும் புநர் ஆவர்த்தனப் பிரதிஷ்டை எனவும்சுட்டப்படும். ஜிர்ணம் = பழுதடைந்த (கோவிலை) உத்தாரணம் = மீட்டல் (திருத் துதல்); புநர் = மறுபடியும்; ஆவர்த்தனம் = திருப்பிக் கொண்டுவருதல்.

---

# ஈழத்துச் சிதம்பரம் (திண்ணபுரம்) சம்பந்தமான நூல்கள்

1. திண்ணபுர அந்தாதி — *கார்த்திகேயப் புலவர்.*
2. திண்ணபுரச் சுந்தரேசுவரப் பெருமான் ஊஞ்சல் — *வித்துவான் மு. சபாரத்தின ஐயர்.*
3. திண்ணபுரப் பதிகம், ஊஞ்சல் — *நாகமுத்துப் புலவர்.*
4. திண்ணபுர வெண்பா — *பண்டிதர் பஞ்சாட்சரக் குருக்கள்.*
5. திண்ணபுர மான்மியம் — *திரு. இ. வைத்தியலிங்கம்.*
6. ஈழத்துச் சிதம்பரம் — *சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள்.*
7. ஈழத்துச் சிதம்பரக் குறவஞ்சி — *சிவஸ்ரீ ச. வீரமணிஐயர்.*
8. திண்ணபுரப் பதிகம் — *அருட்கவி சீ. விநாசித்தம்பி.*
9. திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்னும் ஈழத்துச் சிதம்பர புராணம் — *சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள்.*

# "சாதியினும் சமயமே அதிகம்"

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

"சாதியினுஞ் சமயமே அதிகம். சமயத்தினும் சாதி அதிகம் என்று கொள்வது, சுருதி யுத்தி அநுபவம் மூன்றுக்கும் முழுமையும் விரோதம்" என்கின்றார் நாவலர் பெருமான்.

பெரியபுராண வசன முகப்பிலே உண்மை நாயன்மார் மகிமையிலே மேற் குறிப்பிட்ட வசனத்தில் தொடங்குவதொரு பந்தி வருகின்றது.

★ ★ ★

சிந்தனைச் செல்வரும் தத்துவவிசாரத்தில் மூழ்கியிருப்பவருமான மகான் ஒருவரை அணுகி மேற் குறிப்பிட்ட பந்தியைச் சுட்டிக் காட்டி, 'சாதியினும் சமயமே அதிகம்' என்ற வாக்கியத்துக்கு விளக்கங் கேட்ட போது, அந்த மகான் தமது சிந்தனையுலகிலிருந்தும் இறங்கி, சிறிது நேரம் மௌனமாயிருந்து; கேட்டவரை உற்று நோக்கி,

"கோயில் வீதியிலே சாதி வேற்றுமையுண்டு. சுவாமி சந்நிதானத்திலே அது இல்லை" என்று கூறி, மெல்லெனச் சிரித்தார். அந்தச் சிரிப்பு, 'வீதிக்கப்பாலே ஜனநாயகம் என்கின்ற வெளியுலகிலேயும் சாதி வேற்றுமை இல்லை' என்று சுட்டிக் காட்டுவதாயிருந்தது.

★ ★ ★

"கோயில் வீதியிலே சாதியுண்டு. கோயிலுக்குள்ளேயும் வீதிக்கு அப்பாலே வெளியுலகிலும் சாதி இல்லை" என்பது, அந்தத் தத்துவப் பெரியார் தந்த விளக்கம்.

இந்த விளக்கம் 'சாதியினும் சமயமே அதிகம்' என்ற வசனத்தினும் கடினமாய்க் கலக்கம் தருவதாயிருந்தது.

★ ★ ★

அந்தத் தத்துவப் பெரியார் தொடர்ந்து தமது விளக்கத்துக்கு விளக்கந்தருவாராயினர். அது வருமாறு:—

நமது சமயம் "வைதிக சைவம்" வைதிகமாவது வேதநெறி. அஃதாவது அறிவு நெறி. கருவிகரணங்களை நெறிப்படுத்தி அறிவைத் தூய்மை செய்யும் நெறி. அதற்குபகாரம் வர்ணாசிரமதர்மம். வைதிகத்தின் தொடக்கம் தர்மம். ஒருவன் 'செய்யத்தக்கது எது தகாதது எது' என்ற தர்மவிசாரமுடையனாய், தன்னிலையை உணர்ந்து நீதி வழுவா நெறிமுறையில் தன் வாழ்க்கையை இட்டுவைத்துப் பாதுகாற்றற்பாலன். சாதிக்கட்டுப்பாடு, உலக பந்தங்களைப் பக்ஷபாதமான பற்றுகளைப் போக்குதற்கு உபகாரமானது. அது வருணாசிரமதர்மம் என்று போற்றப்படுவது. ஒரு இனம் மற்றொரு இனத்தை நசுக்கவைத்ததன்று அது. வைதிகன் சாதிமான். அவனுடைய ஒரு கை மேலோரைப் பற்றியிருக்கும். மற்றக்கை கீழ் நிலையில் உள்ளவரை உயர்த்த உதவும்.

வைதிகம் முற்றுப் பெற்றவன் ஒரு நாளைக்கு உலகபந்தங்களை விடுகிற முறையில் விட்டுச் சிவசம்பந்தியாவன். **சிவசம்பந்தம் சைவம் அஃதாவது அருள்நெறி. அருள் நடத்த நடப்பவன் சைவன். அருளைத் தேடுபவன் வைதிகன். அவனுக்கிடம் வீதி.** வைதிகம் முற்றிச் சைவன் ஆகியவன் சுவாமி சந்நிதானத்தை அணுகும் பக்குவன்.

நோயாளியை மருத்துவன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றான். நோய் நீங்கிய பின், அவன் ஆரோக்கியர்களுடன் சேருகிறான்.

வீதியில் நிற்கும் வைதிகன் சாதி குலம் பிறப்பாலெய்திய பிணி நீங்கிய பின், சுவாமியை அணுகி ஆரோக்கியர்களாகிய சைவர்களுடன் சேர்ந்து கொள்ளுகிறான்.

சுவாமி சந்நிதானத்தில் தில்லை வாழந்தணரும் திருநீலகண்டத்துக்குயவனும் ஒரு குலம். **அவர்களுக்குத்தான் ஒருவனே தேவன்.** அருச்சுனன் போர்முனையில் பாச பந்தங்களால் தாக்குற்றுத் தயங்கினன். வைதிகம் முற்றுப் பெறவில்லை. கண்ணன் தர்மத்தைக் காட்டி, நீதி வழுவா நெறி முறையில் அவனை நிறுத்தினன்.

அருச்சுனர் அடுத்த பிறவியில் கண்ணப்பராயினர். காளத்தியப்பரைக்கண்டார். கண்ட அளவிலேயே பரிபூரண சிவசம்பந்தியாயினர். அகன்றார் அகலிடத்தார் ஆசாரத்தை. தாடலைப்பட்டார். அவரது சாதி குலம் பிறப்பை யாரும் விசாரிக்கவில்லை. அபர சுப்பிரமணியரான திருஞான சம்பந்தர் கண்ணப்பரை வணங்கினர்.

★ ★ ★

இனிச் 'சாதியினுஞ் சமயமே அதிகம்' என்ற நாவலர் பெருமான் கூற்று விளக்கம் ஆகலாம். 'வைதிகத்தில் சாதி பெரிது; சைவத்தில் சமயம் பெரிது' என்றவாறும்.

இப்பொழுதைய பகிரங்க உலகம் அவைதிக உலகம்; அணுக்குண்டு உலகம்; நீதியைக் குறுக்கி நிதி செய்யும் உலகம்.

அவைதிகருக்குச் சித்தியார் வழங்கும் பெயர் 'தொகுத்த பேதைமைக்கே பொருந்தினேர்' என்பது. அவர்கள் தாங்கள் பாசபந்தங்களினுட்பட்ட நோயாளிகள் என்பதை அறியார்கள். பாவம்! இவர்கள் தங்கள் தர்மங்களை மறந்து உயர்வு தாழ்வு பேசுவதில் அர்த்தமில்லை.

அவைதிகர்கள் தர்மத்தை விசாரித்து நீதி வாழ்க்கையின் நன்மையைச் சிந்தித்து வைதிகர்களாய்க் கோயில் வீதியில் கால் வைக்கத் தம்மைப் பக்குவப்படுத்த வேண்டும். வைதிகத்தில் கால்தூக்கி வைத்து விட்டால் அது மெல்ல மெல்லச் சைவத்திற் சேர்த்து விடும்.

நாவலர், தம் காலத்துத் தில்லைவாழ் தீக்ஷிதர்கள் கையால் விபூதி பெற மறுத்து விட்டார். தீக்ஷிதர்கள் அவைதிகர்களாய் விட்டார்கள். தர்ம விசாரம் நீதி அவர்களை விலக்கி விட்டன. வைதிகத் தொடக்கம் அவர்களுக்கு எட்டாததாய் வெகு தூரத்ததாய் விட்டது. **அவர்கள் கோயில் வீதியிலேதானும் கால் வைக்கும் தகுதியற்றவர்கள் என்பது நாவலர் பெருமான் கருத்தாயிருந்தது.**

''சமயத்தினும் சாதி அதிகம் என்று கொள்வது. சுருதி யுத்தி அநுபவம் மூன்றுக்கும் முழுமையும் விரோதம்.''

''அகத்தியர் ஆகாயத்தின் கண்ணே குறுகிய வடிவில் பேரொளி வீசும் பிறையை ஒப்பத் தம்மேனி வாடக் கடுந்தவம் புரிந்து பெற்ற பேரொளி தோன்றக் காரைதீவில் வசித்தார்.''

★ ★ ★

இலிங்கம் என்பது அடையாளம் எனப் பொருள் பெறும். இவ்வடையாளம் சிவபெருமானை மட்டிலும் சிறப்பாகச் சுட்டுதல் பற்றிச் சிவலிங்கம் எனவும் பாடலாயிற்று. பரம் பொருளான சிவபிரானின் இயல்புகளை உணர்த்தும் அடையாளமான சிவலிங்கம், ''அப்பரமன் அத்தகையன்'' என எமக்கு விளக்கி நிற்கிறது.

★ ★ ★

இந்தியாவிலே ஒரு பௌத்த பிக்கு மன அமைதியில்லாமல் பல தலங்களையுந் தரிசித்துக் கொண்டு திரிந்த பின், வட இந்தியாவிலே உள்ள ஒரு ஸ்தலத்தில் இருக்கும் போது, ''ஈழத்தின் வடபகுதியில் காரைதீவின் வடதிசையில் உள்ள ஓர் அரசமரத்தின் கீழே ஒரு குளம் இருக்கிறது. அங்கே சென்றால் உனக்கு மன அமைதி ஏற்படும்'' என்று ஓர் அசரீரி வாக்குக் கேட்டதாகவும், அதன்படி பிக்கு இங்கு (இப்போதைய ஈழத்துச் சிதம்பர தலத்திற்கு) வந்து வழிபட்டு மன அமைதி பெற்றதாகவும் ஒரு கதை வழங்கி வருகிறது.

★ ★ ★

# ஈழத்துச் சிதம்பரம்

பண்டிதர் சங்கர. வைத்தியலிங்கனார்

உலகெலாம் ஏத்துபுகழ் உயர்நாடாந் தமிழ்நாடாய் ஒருகால் ஓங்கி
சிலவாய கடல்கோளால் திரிந்ததினால் இலங்கைமுதல் தீவாங் காலை
அலகில்புகழ் அகத்தியனார் துருவாசர் முதற்றவத்தோர் அமர்ந்து வாழ்ந்த
தலைவளஞ்சேர் யாழ்ப்பாண்மேற் றலையமரும் காரைநகர்த் தலமுண் டாமால்.

ஆயிரமா மாண்டாக அருந்தவத்தோர் வாழ்ந்துவந்த அருமை யாலே
பாயிருளைப் போக்குமொளி உருவான பரமனடி யார்கட் பட்டே
ஏயுமர சதன்கீழ்நாம் இருப்பமொரு கோயிலதை இயற்று கென்ன
ஆயுமரன் அடியாரும் அரும்பூசை ஆற்றுமரும் பதியா கிற்றால்.

கல்வியினால் செல்வத்தால் கழலுசைவ ஒழுக்கத்தால் காத லோடு
செல்லுமிட மெங்கணுமே சிறந்தமைந்த திருப்பணிகள் செய்யு மாற்றால்
ஒல்வகையில் அலர்ந்தவர்கட் குவந்தீயும கருணையினால் உயர்ந்தோர் வாழும்
சொல்லுயரும் காரைநகர்ச் சிவன்கோயில் நாளுளுந் துலங்கிற் றெம்மா.

அலகிலவாம் ஆன்மாக்கட் கருள்புரியத் தில்லையினில் அருட்கூத் தாடும்
நலமெல்லாம் அமைந்தஉரு காரைநகர்க் கூத்தருக்கும் நயந்த வாற்றால்
நலமலிய உத்தரத்தில் ஆதிரையில் நன்முழுக்கு நயக்கு மாற்றால்
பலருமிதை ஈழத்து சிதம்பரமென் றிதம்பெறுமா பகர்ந்தார் அன்றே.

அறுவகைய தொழில்களிலே ஆன்றமைந்த அந்தணர்தம் அருள் மேம் பாட்டால்
மறுவில்தாம் சிவஒழுக்கம் மாண்டபெருங் குடிமக்கள் வாழுமாற்றால்
அருநிலைய புராணமுறும் ஈழத்துச் சிதம்பரமாம் அருந்த லத்தான்
பெருமைமிகு திருப்பதியாய் ஊழூழி எத்தநமர் பெற்றவாறே.

* * * * *

# யான் அறிந்த காரைநகர்ச் சிவன்கோயில்

(ஈழத்துச் சிதம்பரம்)

திரு. வே. சிவகுரு "கோவளம்" இரத்மலானை.

நான் பிறக்கு முன்னரே இக்கோயிலுக்குத் தன்னுடன் நான் போனதாக எனது அம்மா எனக்குக் கூறியிருக்கிறார். அவரின் போக்கு அப்படியாகத் தான் இருந்தது. அம்மாவை நான் நம்பாவிட்டால் வேறு யாரைத்தான் நான் நம்புவது?

வருஷா வருஷம் மார்கழி மாதத்தில் வரும் "திருவெம்பாவை" விழாவிற்கும் திருவாதிரைப்பெருநாளில் வரும் ஆருத்திரா தரிசனத்திற்கும் அவர் ஒருபோதும் போகத் தவறவே இல்லையென்று சொல்லலாம். மேரிக்குப் பின்னால் சென்ற ஆட்டுக்குட்டி போல நானும் கோயிலுக்கு அவருடன் கிரமமாகப் போன நினைவு இப்போது வருகிறது.

"தாயைப் போல பிள்ளை, நூலைப்போல சீலை" என்று கிராமப் பேச்சில் சொல்வார்கள். ஒரு பிள்ளைக்கு, தாயே முதல் ஆசிரியரும் உற்ற துணையும். ஒரு பிள்ளை பாடசாலைக்குப் போகு முன்னரே அரைவாசிப் படிப்பு முடிந்து விடுவதாகக் கற்றுணர்ந்த பெரியோர்கள் கூறுகிறார்கள். இப்படிப்பைப் பிள்ளை தாயிடமிருந்தே பெறுகின்றது. மகாத்மா காந்தி அடிகளும் இதை உணர்ந்து தானோ என்னவோ பெண்கள் கல்வியைக் குறித்துக் கூறும்போது "ஓர் ஆடவனைப் பயிற்றுவிக்கும்போது ஒருவன்மட்டும்நன்மை பெறுகின்றான். ஆனால் ஒரு பெண்ணைப் பயிற்றுவிப்பதால் ஒரு முழுக் குடும்பமே நன்மை பெறுவதோடு நாடே சிறப்படைகிறது." என்று பெண்கள் கல்வியின் முக்கியத்துவத்தை வற்புறுத்துகிறார். ஆங்கிலத்திலும் இதனாலன்றோ:-

"The hand that rocks the cradle rules the world"

என்று சுருக்கமாகவும் சுவையாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் இன்றும் கோயிலுக்குக் கிரமமாகப் போகும் பழக்கத்தையும், கடவுள் நம்பிக்கையையும் எனது தாயாரிடமிருந்தே பெற்றேன். இதனால் எனது வாழ்க்கையில் நான் அடைந்த இன்பத்தையும், என் வாழ்வில் வந்த பெரும்புயல்களை எதிர்த்துநிற்கவும்வேறுபிரச்சினைகளுக்கு ஆறுதல் காணவும் இப்பழக்கம் எவ்வளவு உறுதுணையாக இருந்தது என்பதையும் கூறப்புகின் அது ஒரு பாரதக் கதையாகவே முடிந்துவிடும்.

எங்கள் கிராமத்தில் பல கோயில்கள் இருக்கின்றன. முக்கியமாக, பிள்ளையார் கோயில், கந்தசுவாமியார் கோயில், அம்மன் கோயில், முருகமூர்த்தி கோயில் என்று இன்னும் பல உள. ஆனால் சிறு பராயத்தில் ஆரம்பப் பாடசாலைக்குக் கல்வி பயிலப் போகும் வயதில் இக்கோயில்களுக்குப் பல தடவையும் திருவிழாப் பார்க்கச் சென்றிருக்கின்றேன். அங்கே முக்கியமாக என்னைக் கவர்ந்து இழுத்தவை அங்கு நடந்த களியாட்டங்களே. திருவிழாவென்றால் நல்ல மேளக் கச்சேரி, வாண வேடிக்கை, சின்ன மேளம், சப்பறம் இவை போன்ற ஒழுங்குகளே முக்கிய இடம்பெறும். இப்படியான சூழ்நிலையில், கோயில் என்ற பெயரில் விழாவும் களியாட்டமுமே முக்கிய இடம்பெற்றன. இந்தக் கோயில்களில் இருக்கும் தெய்வங்களும் இவ்வகையான விழாக்களையும் வேடிக்கைகளையும் விரும்பினவோ என்னவோ, இவை வருஷந்தோறும் வசந்த காலத்தில் வசதியாக நடைபெற்றன. நானும் நல்ல சின்ன மேளம் பெரிய மேளமென்றால் என்ன சோதனைகள் தான் இருந்தாலும் கோயிலுக்குப் போய் விழாப்பார்க்கத் தவறியதில்லை. இன்னும் சங்கீதத்தையும் நடனத்தையும் இரசிப்பதில் முக்கிய கவனம் செலுத்தினேன். ஆனால் எங்கள் சிவன் கோயிலிலும் பங்குனி மாதத்தில் இப்படியான விழாக்கள் நடைபெற்று வந்தபோதிலும் நான் அங்கு போகத் துணியவில்லை. காரணம், தூரம்—காட்டுப் பாதை. எங்கள் கிராமத்தில் அன்று இக்கோயிலுக்கு வழக்கில் இருந்த பெயரே "காட்டுச் சிவன் கோயில்". போகும் பாதையிலிருந்த இடுகாடும், சுடுகாடும் இன்னும் மனித சஞ்சாரமே சற்றும் இல்லாத பரந்த வெளிகளும்

விழாப் பார்க்கும் என் வேட்கைக்கு எனது சிறு பராயத்தில் இடையூருக இருந்தன. ஆகவே பங்குனி மாத விழாக்களுக்கு நான் சிவன் கோயிலுக்குப் போன நினைவு எனக்கு இல்லே. ஆனல் இப்பொழுதோ என்றல் மார்கழி மாதம் கிட்டக் கிட்ட என்னை அறியாமல் எனக்கு ஒரு விஞேத உணர்ச்சி உண்டாகி விடுகிறது. திருவாதிரைப் பெரு நாளேயிட்டு நந்தன் எப்படியான பைத்தியங் கொண்டு சிதம்பர யாத்திரையை ஆரம்பித்தாஞே, அதே போல ஒரு தெய்விகப் பரவசம் என்னுட் குடி கொண்டு விடும்; நான் இப்போது தவருது யாத்திரை செய்யும் எங்கள் "ஈழத்துச் சிதம்பரம்" என்னை எங்கிருந்தும் ஈர்த்து இழுத்துவிடும். திருவெம்பாவை ஆரம்பித்து விட்டால் எங்கள் கிராமமே ஒரு தெய்விகத் தன்மையை அடைந்து விடுவதாக என் கண்களுக்குத் தோற்றுகின்றது. அதிகாலேயில் வீதிதோறும் சங்கு நாதமும் திருவெம்பாவைப் பாடலும், மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணுமலேயில் கண்ட காட்சியை நினைவுறுத்தும். யாரைப் பார்த்தாலும் புனிதமாகவும், விபூதிப் பூச்சுடனும் திருவாசகப் பாட்டுடனும், பக்திப் பரவசத்தோடு காட்சியளிப்பார்கள். இந்தப் பத்து நாட்களும் கோயிலுக்குப் போவதும் கும்பிடுவதும் யாத்திரிகர்களுக்குத் தொண்டு செய்வதும் உணவளிப்பதுமே இவர்களின் முக்கிய வேலேயாயிருக்கும். கோயிலிலும் மடாலயங்களிலும் வீதிகளிலும் திருவாசகமே ஒரு வாசகமாகத் தோன்றும். என் கண்களுக்கு இந்தப் பத்து நாட்களும் எமது ஈழத்துச் சிதம்பரத்தில் நடப்பது "மாணிக்கவாசகப்பெருமானின் விழா" எனத் தோன்றுகிறதேயொழிய வேருென்றுமாய்த் தோன்றவில்லே.




உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் – பன்னிருக்கைக்
கோலப்பா வாஞேர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

## ஈழத்துச் சிதம்பரம் எனப்பெயர் பெறும்

# காரைநகர்ச் சிவன்கோவில் குடமுழுக்கு விழா

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி

—0—

ஆன்மாக்கள் திருவருள் நெறி நின்று இறைவனையடைந்து உய்தியடைய வழிகாட்டுவனவே ஆலயங்கள். எனவே இவ்வாலயங்களைப் பெருமையும், தூய்மையும், அழகும் உடையனவாய் அமைத்துப் பேணுதல் நமது பெருங் கடனாகும். இக்காலத்தில் பண நம்பிக்கை மிகுந்தும் அற நம்பிக்கை குறைந்தும் காணப்படுகிறது. அதனால் மத நம்பிக்கையிலும் தளர்ச்சியேற்படுகிறது. இத்தளர்ச்சியை நீக்கி பக்தி வைராக்கியமுடைய ஒரு சமுதாயத்தைப் பெருக்க வேண்டிய பொறுப்பு தெய்வத் திருப்பணியில் ஈடுபடுகின்ற ஒவ்வொருவருடைய முதற் பெருங் கடமையுமாகும். இக்கடமையுணர்வு மிக்கவர்கள் காரைநகர் மக்களென்றால் அதில் மிகையொன்றுமில்லை. அவ்வூர்ச் சிவன் கோவில் ஈழத்துச் சிதம்பரம் என்ற சிறப்புப் பெயர் பெற்றிருப்பதே இதற்கு ஒரு சான்றாகும். ஆங்கமைந்த ஆலயம் பழமையினால் கலை மடைந்து காணப்பட்ட நிலையை மாற்றிப் புதுக்கி அமைத்து திருப்பணியை முற்றுவித்துக் குடமுழுக்குச் செய்து விழா வெடுக்கப்படுகின்றது. முக்கியமான ஒரு முதற் கடமையை முற்றுவித்திருக்கிறார்கள் காரைநகர்ச் சைவ மக்கள்.

ஆலயங்களைக் காலத்துக்குக் காலம் புதுக்குவிப்பது அவசியமே. சுத்தமான தேகத்தில் தான் சுத்தமான மனமிருக்கும். அதுபோல் ஆலயங்களைச் சுத்தமாய் வைத்திருந்தாற்றான் அங்கு எழுந்தருளியிருக்கும் தெய்வத்திற்கும் தெய்வத் தன்மை வளர்ந்து வரும். ''ஆலயந்தானும் அரனெனனிற் தொழுமே'' என்பதும் சிந்திக்கற்பாலது. காலஞ் செல்லச் செல்ல அஷ்டபந்தனச் சேர்க்கை கெட்டுப்போய் சுவாமிக்கும் பீடத்திற்கும் அசைவு ஏற்படக் கூடுமாகையால் விக்கிரகங்களைப் பீடத்தில் பிரதிஷ்டித்து அஷ்டபந்தனம் என்னும் சேர்க்கை மருந்தினால் இடையில்லாமல் பொருத்தப்படுகிறது. எண்ணெய்க் காப்பினால் பலமும் தூய்மையும் ஏற்படுகிறது. தங்கத்தினாலோ அல்லது வெள்ளியினாலோ கவசம் செய்து சாத்துவதினால் வெப்பத்தினாலேற்படும் குறைவு நீங்குகிறது. இவ்வகை வழிபாட்டினால் ஊருக்கும் மக்களுக்கும் திருவும் கல்வியும் சீரும் பெருகுகிறது. மனிதன் தன் தேகத்தைப் பாதுகாப்பதுபோல் தெய்வ உருவங்களைப் பாதுகாக்க வேண்டும். கோயில்களைப் பராமரிக்க வேண்டும்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'' என்றனர். கோவிலுக்குப் பிரசாத சுத்தி, வாஸ்தி சுத்தி, வாஸ்து பலி, கும்பாபிஷேகம் முதலியன காலத்துக்குக் காலம் மிக அவசியமாகும். இவற்றை மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் செய்து முடிக்க வேண்டும். கிரியை முறைகளுக்கென்று இருக்கும் மந்திரங்கள் நமக்குத் தெரியாத பாஷையில் இருக்குமானால் அவற்றைத் தெரிந்து கொள்வது நமது கடமை. கோவில்கள் காப்பாற்றப்பட்டால் விக்கிரகாராதனை காப்பாற்றப்பட்டு நமது சமயம், கலாசாரம், கலைகள் முதலியனவும் காப்பாற்றப்படும்.

ஆலயத் திருப்பணியில் பங்கு கொள்வதென்பது பெருந் தவமுடையார்க்கே வாய்ப்பதொன்றாகும். சிவனெனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மானின் திருநடனத்தைக் காண்பதற்காக மனிதப் பிறவியை வேண்டுகிறார் அப்பரடிகள். இத்தகைய சிவனுறையும் திருத்தலத்திற்குப் பெருஞ் சாந்தி விழாவும் குடமுழுக்கும் நடக்கவிருப்பது சிறப்பாக காரைநகர்ச் சைவமக்களும் பொதுவாக ஈழத்துச் சைவ மக்களும் செய்த தவப்பயனாகும். பக்தியும் பண்பும் பாரினில் பெருகி இன்பம் கொழிக்கும் இந்தச் சிவ புண்ணியமான திருத்தொண்டில் காரைநகர் மக்கள் எண்ணத்தாலும் உழைப்பாலும் பொருளாலும் பங்குகொண்டு உழைத்தமைக்குச் சைவ உலகம் நன்றி பாராட்டக் கடவதாக.

மடித்தாடும் அடிமைக் கணன்றியே
மகனே நீ வாழுநாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர்செக்கி
லிடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும்
எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத்தேம்
பெருமானைப் பெற்றாமன்றே.

* * * * *

# வனப்புறு திருநாள்!

## செஞ்சொற் கொண்டல்

புலவர். சொ. சிங்காரவேலன் எம் ஏ. (மாயூரம்)

அன்பறம் பொங்கு கின்ற
அருநெறி சைவம் என்றால்
முன்புறும் உண்மை யீதாம்;
முத்தமிழ் நாடு தன்னில்
வன்பிலா நெறியைப் பேண
வரம்புடை மாந்தர் கூடி
இன்புற வளர்த்த திந்த
எழில்நெறி என்றல் பொய்யோ? (1)

உயிர்க்குலம் செழித்திட் டோங்க
உலகமாம் தடையை நீக்கி
பயிர்க்குறு முகிலா மென்னப்
பகர்ந்திடும் இறையைக் கூடி,
அயிர்ப்புறு வண்ண நின்றால்
அமைவுறும் என்று கூறும்
உயிர்ப்புடைச் சைவம் காட்டும்
உறுபொருள் மூன்று மன்றே! (2)

சிவன்திருக் கோயி லுள்ளே
சிந்தையை ஒருங்கு சேர்த்து
பவன்எனும் நாமம் கொண்ட
பரசிவந் தன்னைப் போற்றின்,
அவனியில் உயர்வா மென்றே
அறிவுறும் நெஞ்சி னோடே
உவர்ப்பிலா வழிபா டாற்றி
உலகினீர் ஒளிர்வீர் இன்றே! (3)

கடல்புடை சூழு கின்ற
காரையில் தில்லை யாகி
அடல்உடல் வினை கெடுக்கும்
அண்ணலாம் சுந்த ரேசன்
கெடலிலா அழகுத் தையல்
கிளரொரு பாகம் பொங்க
திடமுடை அருளை யீயும்
திணபுரம் இதுவா மன்றோ! (4)

திருப்பணிக் குழுவி னோர்கள்
தினமுகன் முயற்சி செய்தே
ஒருப்பட நின்ற தாலே
உயிர்ப்பணி முடிந்த திந்நாள்!
மருவுறு மலரா மென்ன
மலர்வுறும் ஆலயத்தின்
திருக்குட முழுக்கு நாளைத்
தெளிவுற நிகழ்த்து கின்றார்! (5)

ஆண்டிதில் ஆனித் திங்கள்
ஐந்நான்கும் ஆறும் கூடும்
மாண்புடை நாளில் வெள்ளி
மலிவுறு கிழமை தன்னில்,
ஈண்டியே குடமுழுக்கு
இன்புற எடுக்கின் றாரால்;
ஆண்டவன் அருளைக் கூட
அனைவரும் வருவீர் இங்கே! (6)

வாழிய காரைத் தீவு!
வாழிய அன்பர் கூட்டம்!
வாழிய பணிகள் செய்தோர்!
வணங்குவோர், வாழ்த்துவோர்கள்!
வாழிய குடமு முக்கு
வனப்புறு திருநாள்! வாழி
ஏழிசைத் தாயும் ஓங்கும்
எந்தையும் வையகத்தே! (7)

இவ்வாலயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சிவலிங்கத்தை அன்று அப்பெரியார் பெற்றது ஒரு புதுமையான செய்தி. அக்காலத்தில் இலங்கையில் சிவலிங்கம் பெறுவது மிகச் சிரமமாகவிருந்தது. எப்படிப் பெறுவதென்று மனமாரச் சிந்தித்து வருந்திக் கொண்டிருந்தார். சிவபெருமான் அவ்வடியார் கனவில் தோன்றி ''சிதம்பரத்திலே ஆசாரியார் ஒருவரிடத்தில் ஏழு லிங்கங்கள் இருக்கின்றன என்றும் அவற்றுள் தாம் காண்பிக்கும் லிங்கத்தை வாங்கும்படியும் உணர்த்தியருளினார்''. அடியார் இறைவன் திருவருளை வியந்து சிதம்பரம் சென்று சிவலிங்கத்தைப் பெற்று வந்தார்.

# மஹா கும்பாபிஷேகம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னகரம்,
சிவஸ்ரீ எஸ். சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள்
( தருமபுர ஆதீனம் )

பேரருளராகிய கடவுள் தமது பெருங் கருணையால் ஆன்மாக்களின் பந்தத்தை நீக்கி அவைகளின் அறிவிச்சை செய்கைகளை விளக்கி அவைகளுக்குத் தமது இன்பத்தைக் கொடுக்கக் கருதி தமதருட் சக்தியால் உலகத்தையும் உடலையும் அவைகளுக்குச் சிருட்டித்துக் கொடுத்து உதவினர் அவற்றைப் பொருந்தித் தமதறிவிச்சை செயல்கள் விளங்கப்பெற்ற ஆன்மாக்கள் நன்றியறிதலாகக் கடவுளை வழிபட வேண்டியது அவசியம்.

கடவுள் வழிபாடானது அவர் அதிஷ்டித்து நிற்கும் இடத்தாலும். வழிபாட்டிற்குரிய கரணங்களாலும் வழிபடும் அறிவு வகையாலும் மூவகைப்பட்டு விளங்குகிறது.

கடவுள் எங்கும் வியாபியாய் நிறைந்திருப்பினும் பாலில் நெய்போல் விளங்காது நிற்கிருர் குருவினிடத்திலும், சிவாலயத்திலும், சிவனடியாரிடத்திலும் தயிரில் நெய் போல் வெளிப்பட்டு விளங்கியருளுகிருர்

சிவாலயத்தையும், சிவலிங்கத்தையும் சிவமெனவே கண்டு வழிபட்டவர்கள் முத்தியடைந்ததுண்டாகையாலும், சிவாலயமும் சிவக்குறிகளும், சிவாலயபூஜா காரியங்களும் மந்திரபூர்வமாக இருததலாலும் மந்திர சாந்நித்தியமுடைய சிவாலயம் சிவனை வழிபடுதற்குரிய இடமாகும்.

உயிர்கள் கர்மசக்கரத்தாற் சுழன்று பிரபஞ்சவாசனையில் அழுந்தித் தாரம் தனம் முதலான பொருள்களின் மோகத்தால் சுக துக்கங்களைக் கடலைப்போல் ஓயாது மாறி மாறி அனுபவிக்கின்றன. கடவுள் வழிபாட்டிற்கென ஒரு தனியிடத்தைக் குறிப்பிடாது கடவுள் எங்கும் வியாபகமாக இருத்தலால் எந்தவிடத்திலும் அவரை வழிபடலாமென வெண்ணில் சுக துக்கரூபமான அலைகள் எங்குஞ் சூழ்ந்து கொண்டிருத்தலால் அவை அவ்வழிபாட்டை நிலைக்கவொட்டாது தடை பண்ணும். தங்கள் வீட்டில் புனிதமான ஓரிடத்தில் வழிபடலாமெனில் அது அவசியமானாலும் அங்கும் குடும்ப விவகாரங்களால் மனம் அலைவுற நேருமாகையாலும் அதன் காரணமாய் மனமும அறிவும் தெளிவுறுதல் நேராதாகையாலும் திரிகரணங்களுடன் அமைதியாக வழிபடுவதற்குச் சிறந்த இடம ஆலயமாகும் ஆ=பசு. லயம்= ஒடுங்குதல் எனப் பொருள்படுதலால் அது ஆன்மாக்கள் தம்மை பந்தித்த ஆணவ மலவலி ஒடுங்கப் பெற்றுப் பேரன்புடன் மனோவாக்குக் காயங்களென்னும திரிகரணங்களாலும் முறையே சிந்தித்து வாழ்த்தி, வணங்கி, அருண்ஞானமடைந்து இறைவனிடத்து ஒடுங்குவதறகுச் சாதனமான இடமாகும். மற்றும் ஆ= அனைத்தும், லயம ஒடுங்குதல் எனப் பொருள்படுதலால் அது சிவசக்திகளாலே மாயா காரியங்களாய்த் தோன்றின கலை, தத்துவம், புவனம், வர்ணம், பதம், மந்திரம் என்னும் ஆறு அததுவாக்களும் அவற்றின் பேதமானவனைத்தும் தோன்றிய அடைவே தத்தங் கரணத்தில் ஒடுங்கும் என்பதை அறிவூட்டும் இடமுமாகும்.

அத்தகைய சிவாலயத்தின் நடுவில் பீடத்தை ஸ்தாபித்து அதன் மேல் இலிங்கத்தை ஸ்தாபனம் செய்வது பிரதிஷ்டை எனப்படும். இது ஸ்தாபனம், பிரதிஷ்டை, ஸ்திதஸ்தாபனம். ஆஸ்த்தாபனம், உத்தாபனம் என்று ஐந்து விதமாகும்.

பீடம் சக்தி எனப்படும். இலிங்கம் சிவம் ஆகும். சிவமந்திரங்களால் இவ்விரண்டையும் சேர்த்து அஷ்டபந்தனம் செய்வது பிரதிஷ்டை எனப்படும் என்றும் சாராவளி கூறுகிறது.

இத்தகைய பிரதிஷ்டையானது அனுவர்த்தம் ஆவர்த்தம் புனராவர்த்தம், அந்தரீதம என்று நான்குவிதமாகும் ஆலயமோ இலிங்கமோ இல்லாத கிராமத்திலோ, நகரத்திலோ புதியதாக இலிங்கம் செய்து ஆலயம் கட்டி அதனுள் அந்த சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்தல் அனுவர்த்தனப் பிர

திஷ்டை எனப்படும். இந்த அனுவர்த்தனப் பிரதிஷ்டை கலியுகத்தில் கிடையாது என்றும் சிவாகமம் பறைசாற்றுகிறது.

சமுத்திரம், நதி முதலானவைகளால் அழிக்கப்பட்ட ஆலயத்திலிருந்து இலிங்கத்தை எடுத்து வந்து வேறு ஒருவிடத்தில் ஆலயம்கட்டி அதில் அந்த இலிங்கத்தை பிரதிஷ்டை செய்வது ஆவர்த்தப் பிரதிஷ்டை.

ஜீரணமான ஆலயத்தை மறுபடியும் ஜீரணோத்தாரணம் செய்து அஷ்டபந்தனம் சாத்திக் கும்பாபிஷேகம் செய்வது புனராவர்த்தம்.

திருடர்களாலோ வேறு தகாதவர்களாலோ இலிங்கம் சலனம் செய்யப்பட்டும். தீண்டப்பட்டும் தூய்மைக்குக் குறைவு வரும போது உடனடியாகச் செய்யப்படும் பிரதிஷ்டை அந்தரீதம் எனப்படும்.

பூர்ணமாகச் செய்யப்படும் பிரதிஷ்டை 64 கிரியைகளைக்கொண்டது. சில ஆகமங்கள் அதை சுருக்கி 55 கிரியைகள் என்றும கூறுகின்றன.

அருவமாகவுள்ள இறைவன் தியானம், பூஜை செய்வதன்பொருட்டு உருவத்துடன் விளங்குகிருன். இறைவனின் திருவுருவம் மந்திரவடிவமாகும். அவை, கலை (5) தத்துவம் (36) புவனம (224) வர்ணம் (51) பதம் (81) மந்திரம் (11) என்று கூறப்படும் அத்துவாக்களே இறைவனின் சரீரமாகும். ஐந்து கலைகளும் ஸ்தூலமான உடலைக் காட்டும் அதாவது, சாந்தியதீதகலை. சிரசு, சாந்திகலைமுகம். வித்தியாகலை, மார்பு பிரதிஷ்டாகலை. நாபி நிருத்திகலை, பாதம் எனவே முழங்கால் வரையில் நிவிருத்தி. நாபி வரையில். பிரதிஷ்டை கழுத்துவரையில். வித்தை. நெற்றிவரையில் சாந்தி அதன் மேல் சாந்தியதீதை எனப்படும், தத்துவங்கள் முற்பத்தாறும் எலும்பு; மஜ்ஜை. சுக்லம் என்ற தாதுக்களாம். புவனம் இருநூற்று இருபத்து நான்கும் இறைவனுக்கு உரோமங்களாகும். அகாரம் முதலிய அக்ஷரங்கள் தோலாகும். பதம் என்ற மந்திரம் எண்பத்து ஒன்றும் மாமிச தாதுவாகும் மந்திரம் பதினென்றும் குருதியாகவும் விளங்குவதாகக் கற்பிக்கப்பட்ட வித்யா சரீரத்தில் நியசிக்கப்பட்ட ப்ராஸாத மந்திரம் இறைவன் தங்கும் ஜீவகலையாகும் என்று மூலாகமம் கூறுகிறது.

இறைவனை வழிபட மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றும் இன்றியமையாதது. மந்திரம் என்பது எழுத்தின் வடிவம், எழுத்தென்பது சொல்லுக்குக் காரணமாய்ச் சுத்தமாயைபாகிய குண்டலியினின்றும் எழும் ஒலி எழுத்துக்கு ஒலிவடிவு, வரிவடிவு என இரண்டு வடிவுகள் உண்டு. ஒலிவடிவில் குண்டலியின்று எழும் ஒலியானது பஞ்சமை, பைசந்தி, மத்தியமை, வைகரி, என்னும் நான்கு வாக்குகளின் நிலைகளையடைந்து தன் செவிக்கு மட்டுமாகவும், தன் செவிக்கும் பிறர் செவிக்குமாகவும் கேட்கும் ஓசையாக அமைவதற்கு மூலாதாரம் முதல் மென்மேல் எழுச்சியுறுதலின் எழுத்தெனப் பெற்றது, வரிவடிவில் எழுதப்படுவதால் எழுத்தெனப்பெற்றது

வரி வடிவெழுத்தானது சடமாயிருந்தாலும் காந்தம் மின்சாரம் முதலிய சடப்பொருள்களுக்குள்ள சக்திகளைப் போன்ற சக்தியை உடைத்தாயிருக்கிறது. ஒருவன் தூரதேயத்திலிருந்து தனக்கு நேர்ந்த சம்பவங்களை கடிதத்தில் எழுதி தனது நண்பனுக்கு அனுப்பியபோது அதைப் படித்த நண்பனுக்கு எழுதியவனது எண்ணத்தைத் தோற்றுவித்தலைக் காண்கிறேம் ஒருவன் தனது அவசர வேலை நிமித்தமாக ஒருவரை அவரது அறையிலே கண்டுபேச விரைந்து செல்லும்போது. வாயிலில் ''உத்தரவு இல்லாமல் உள்ளே நுழையக் கூடாது'' என்று எழுதியிருத்தலைக் கண்டவுடனேயே உள்ளே செல்லத் தடைபட்டுத் தனது வேகம் தணிந்து நிற்றலைக் காண்கிறேம். ஆதலால் எழுத்துக்குச் சக்தி உண்டு எனத் துணியப்படும், எனவே மந்திரம் அக்ஷரவடிவம், அது அளவுகடந்த சக்திவாய்ந்தது.

இவ்வாறு சொல்லுக்கும் சக்தி உண்டு, ''சொல் என்பது எழுத்தாலக்கப் பெற்று பொருளறிவிக்கும் ஓசை'' என நச்சினர்க்கினியர் திருவாக்கு ஒருவனை ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவும் நிமித்தம் மற்றெருவன் சொல்லும் சொல்லும் சொல்லால் ஏவப்பெற்றவன் ஏவினேன் குறித்த தொழிலைச் செய்யக் காண்கிறேம்.

கிரியைக்கும் (செய்கை) சக்தி உண்டு, ஒருவன் தனது உள்ளத்தை வாயினல் சொல்லாமலும் எழுத்தால் எழுதாமலும் தனது உடம்புகளின் அசைவாகிய செய்கையினல் வெளிப்படுத்தலாம் அதற்குப் பெரும் பாலமையும் கைகளும் கண்களுமே முக்கியமான கருவிகள்.

ஒருவன் ஒரு தீய காரியத்தைச் செய்யும்போது மற்றொருவன் அதைச் செய்யாதே என்று கையை அசைந்தாலும் கோபத்து

டன் நோக்கினலும் செய்யத் தொடங்கிய வன் செய்யா திருத்தலைக் காண்கிறோம்.

பாவனை என்பது எண்ணம் ஒருவன் தனது எண்ணவன்மையாலும் பிறரைத் தொழிற்படுத்தலாம். அவ்வெண்ணம் மனோ சக்தி எனப்படும் கருட பாவனையால் விஷ நீக்கத்தைக் காண்கிறோம். எனவே அக்ஷர வடிவமான மந்திரங்களுக்கும், செய்யும் செய்கை(கிரியை)க்கும எண்ணும் எண்ணத்திற்கும் சக்தி உண்டு, இத்தகைய மந்திரம், கிரியை, பாவனையால் இறைவனை இலிங்கத்தினின்று கும்பத்திலும் மீண்டும் கும்பத்தி லிருந்து இலிங்கத்திலும் ஆகர்ஷணம் செய்து ஸ்தாபிக்கும்போது மந்திரக் கிரியா பாவனையின் சக்தியினல இறைவன் ஆசாரியனுடைய வேணடுகோளுக்கிணங்கி விருப்பத்தை நிறைவேற்றியருளுகிறுன்.

இறைவனோடு இறைவியைச் சேர்த்தல் அதாவது இலிங்கத்துடன் பீடத்தைச் சேர்த்தல் பிரதிஷ்டை என்று முன் கூறப் பட்டது. இடைவெளியின்றி பீடத்தையும் இலிங்கத்தையும் இணைத்து இறைவனின் அருட்சக்தியை மக்களின் பக்குவத்திற் கேற்ப உலகுக்கு அளிக்க வல்லமை வாய்ந்தது அஷ்டபந்தனம் எனப்படும் ஒளஷதம்

சுக்கான், குங்குலியம், கொம்பரக்கு. தேன்மெழுகு. பூங்காவி. செம்பஞ்சு. வெண்ணெ, சாதிலிங்கம் என்ற எட்டும், அஷ்டமூர்த்திகளின் அமிசம்பெற்று உலகில், பிருதிவி. அப்பு, தேயு. வாயு ஆகாயம், ஆதித்தியன், அம்புலி. இயமானன் என்பவைகளின் சக்தியை வீரியப்படுத்தி மூவுலகும் செழிக்க ஹேதுவாகும். எனவே பீடத்தையும் இலிங்கத்தையும் இணைக்கும் அஷ்டபந்தன மருந்து சாத்துதல்தான் மஹா கும்பாபிஷேகத்தின் முக்கியக்கிரியை.

அஷ்டபந்தனம் மருந்தானது இறைவனின் திருவருள் சக்தியின் வாயிலாக பிரபஞ்சத்தைத் தம் தமது காரியத்தில் ஈடுபடுத்த அவ்வருட் சக்தியை பீடத்தில் சேர்ப்பது அசாதாரணமான செயல். அம்மருந்தின் மூலமாக ஒளிபெற்ற பீடசக்தி உலகத்திற்குக் காரணமான பஞ்சபூத சக்திகளையும், மற்றும் சூரியன், சந்திரன் இயமான் இவர்களுடைய உஷ்ணத்வ சீதத்வ ப்ரபுத்வ சக்திகளையும் மின்சார அலைபோல் உலகில் பரவச்செய்து உலக சுபிக்ஷத்திற்கு ஹேது வாக ஆகிறது

கும்பாபிஷேக யாகசாலை சிவஸ்வரூபம். வேள்வி சிவஸ்வரூபம் யாகவே திசையி லிருக்கும் கும்பம் சிவஸ்வரூபம் ஆசாரியன் சிவஸ்வரூபன் எனவே எல்லாம் சிவமயம் என விளங்கும் மஹா கும்பாபிஷேகத்தில் யாகசாலையில் சிவாகாரமான அக்னியி லெழுந்த புகையும் வெப்பமும், வேதவோசையும், சிவாகம தோத்திர ஓசையும். திருமுறையோசையும், சிவனடியார்கள் தோத்திர ஓசையும் சிவாசாரியர், சாதகர் முதலியோர்களுடைய சிவமந்திரக் கிரியா பாவனையோடு கூடிச்செய்யப்படும் செயல்களும் சேர்ந்து எங்கும் வியாபித்திருக்கும் இறைவனது அருட்சக்தியைத் தூண்டி எழுப்பி, அர்ச்சகனுடைய தவவலிமையால் இறைவன் கும்பத்திலும் கும்பாபிஷேகத்திற்குப் பிறகு இலிங்கத்திலும் சாந்நித்தியம் பெற்று யார் யார் எதை எதை விரும்புகிறுர்களோ அவரவர் அதை அதை அருளும்படி செய்வது பிரதிஷ்டையின் சிறப்பு கும்பாபிஷேக் தரிசனத்தால் தீவினைகள் நீங்கி புத்திரப் பேறு முதலான பேறுகளையும் சிவபக்தியையும் பெற்றுச் சிவானந்தானுபவமுறுவர் என்பது திண்ணம். வெகு ஜென்மத்தில் செய்த தவப்பயனுல் சிவதருமம் செய்ய முடியும் என்று சிவாகமங்கள் கூறுகின்றன. ஈழத்துச் சிதம்பரம் ஸ்ரீ சௌந்தராம்பிகா ஸமேத ஸ்ரீ சுந்தரேச்வரஸ்வாமி கோவில் கும்பாபிஷேகம் செய்யும் பிரதிஷ்டா குருமார்களும். கோவில் ஆதீனகர்த்தர்களும் திருப்பணிச் சபையார்களும் இவர்களின் முன்னோர் செய்த புண்ணியத்தினுலும் இவர்கள் முன்ஜன்மத்தில் செய்த புண்ணிய மேலீட்டாலும் சிவப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்கிறுர்கள் என்பதற்கு ஐயமில்லை எனவே, இவர்கள் யாவரும் இறைவனின் திருவருளால் நான்குவித புருஷார்த்தங்களையடைந்து இன்புற வேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகிறேன்.

---

அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.

— திருக்குறள்

# கண்டறியாதன கண்டனர்!

— சிற்பி —

••••○◯○•••

சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் எழுந்தருளியுள்ள ஈழத்துச் சிதம்பரம் எனும் காரைநகர்த் திண்ணபுரத்தை நினைக்கும்போது, கூடவே அப்பர் பெருமானின் திருக்கைலாயக் காட்சியும் நினைவுக்கு வருகின்றது.

திருக்காளத்தியை அடைந்த திருநாவுக்கரசர், காளத்தி நாதரையும், ஞானப் பூங்கோதை அம்மையாரையும் தரிசித்தார். கைலையங்கிரிக்குச் சென்று கைலாயநாதரையும், அம்மையாரையும் தரிசிக்க வேண்டும் என்ற மட்டற்ற ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல், கைலையை நோக்கி நடந்தார்; நடந்தார்; நடந்து கொண்டேயிருந்தார். கல்லும் முள்ளும் குத்தின; கால்கள் புண்ணாயின; இரத்தம் வடிந்தது. தவழ்ந்தார் அப்பர்; கைகளால் நடந்தார்; அதுவும் முடியாமற் போகவே, அவர் நெஞ்சால் அரைந்தார். உடம்பு களைத்தபோதிலும், உள்ளம் சோர்வடையவில்லை. கைலைக்குச் சென்றே தீருவேன்; கைலைநாதனைக் கண்டே தீருவேன்' என்ற தீராத வேட்கையையும் மாறாத பக்தியையும் கண்ட இறைவன், திருவையாற்றுக்குச் சென்று தன் திருக்கைலாயத் திருக்கோலக் காட்சியைக் கண்டின்புறுமாறு அப்பருக்கருளினார். ''யாதுஞ் சுவடு படாமல் ஐயாறடைந்'' த அப்பர், அங்கே கண்டறியாதன கண்டார்; கைலாசக் காட்சியைக்கண்டார்;களிபேருவகைகொண்டார்.

ஆண்டுதோறும் ஆனி உத்திரத்திலும் மார்கழித் திருவாதிரையிலும் ஆயிரக் கணக்கான அடியார்கள் ஈழத்திலிருந்து தென்னிந்தியாவிற்குச் சென்று தில்லை நடராஜரையும் சிவகாம சுந்தரி அம்பாளையும் தரிசித்து மகிழ்ந்ததெல்லாம், இப்போது பழைய கதையாகிப் போய் விட்டது. காலக் கழிவில் ஏற்பட்ட மாற்றங்கள், தில்லைக்குப் போவதிற் பல தொல்லைகளைப் புகுத்திவிட்டன. தில்லைக்குச் செல்ல முடியவில்லையே என்பதனால் எல்லையில்லாத் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளானவர்களைத் தில்லை நடராஜர் கைவிட்டு விடவில்லை. காரைநகர்த் திண்ணபுரத்திற்குச் சென்று தில்லைக்காட்சியைக் கண்டின்புறுமாறு அடியார்கள் பலரின் கனவிலே தோன்றிச் சொன்னார் நடராஜப் பெருமான். இயற்கைச் சூழலால், அபிஷேகச் சிறப்பினால், பூஜாக் கிரமத்தால் தில்லைச் சிதம்பரத்தை நினைவூட்டியபடியிருக்கும் காரைநகர்த் திண்ணபுரம், ஈழத்துச் சிதம்பரமாக மாறியது; பல்லாயிரக் கணக்கான பக்தர்களுக்கு வாழ்வும் வளமும், அருளும் பொருளும் சக்தியும் சாந்தியும் நல்கும் புனிதத் திருத்தலமாகப் புத்தெழிலுடன் திகழ்கின்றது.

அகத்திய முனிவரின் பாத தூளிபட்ட காரைநகர்ப் பதியில், இந்தியாவிலுள்ள துளுவ நாட்டைச் சேர்ந்த தினகரன் என்னும் அந்தணக் கவிஞர் வழிபாடாற்றிய திண்ணபுரத்தில், இராமேஸ்வரத்து ஆண்டி என்னும் பெரியாராலும், தொண்டை மண்டலத்து மாணுமுதலி வழித்தோன்றலாகிய அம்பலவி முருகராலும் அமைக்கப்பட்ட திருத்தலத்தில், குளக்கோட்டு மகாராசாவினால், திருவுத்தரகோசமங்கையிலிருந்து விசேடமாக வரவழைக்கப்பட்ட அந்தணர் பரம்பரையைச் சேர்ந்த சிவஸ்ரீ ச. கணபதீஸ்வரக் குருக்கள் அவர்களாலும், இப்போது அவர்தம் சிரேஷ்ட புத்திரரான சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் அவர்களாலும் வேதாகம நெறிக்கிணைய நித்திய நைமித்திகங்கள் நடாத்தப்பட்டுவரும் இந்த ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்தில், ஈழத்திலும், இந்தியாவிலும், சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் வாழும் அடியார் பலரின் அயரா முயற்சியால் ஆரம்பிக்கப்பட்ட கருங்கல் திருப்பணி இறையருளால் பூர்த்தியாகி மகா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற்று விட்டது. வந்திப்பவர் தம் சிந்தையை நிறைக்கும் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும், சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வர ஸ்வாமிக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும், சிவஸ்ரீ க. மங்களேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தைக் கண்டோர் கண்டறியாதன கண்டனர்; கண்பெற்ற பயனை உணர்ந்தனர்.

தென்னாடுடைய சிவனே போற்றி!
திண்ணபுரத்துறை அண்ணலே போற்றி!!

* * * * *

# சிதம்பரநாதன் தோத்திரம்

1. நீராடும் சடையானே நிமலா போற்றி
நினைவாரின் நெஞ்சினுறை இறைவா போற்றி
பாராடும் மறைதந்த பரனே போற்றி
பாம்பு புலி காணும்நட ராசா போற்றி
தாராரும் சிவமணிப் பூண் மார்பா போற்றி
சௌந்தராம் பிகையாளின் தலைவா போற்றி
சீராரும் சைவநெறி திகழ்ஈ ழத்து
ஸ்ரீ சிதம்ப ரேஸ்வரனே போற்றி போற்றி

2. கருபூத்த வினையாவும் கரைப்பாய் போற்றி
கவின்பூத்த உலகமெலாம் புரப்பாய் போற்றி
தருபூத்த விண்ணவருக் கரியாய் போற்றி
தவம்பூத்த அடியர்தமக் கெளியாய் போற்றி
மருபூத்த கொன்றையணி முடியாய் போற்றி
மலைபூத்த மங்கையைப்பங் குடையாய் போற்றி
திருபூத்த செய்யதமிழ் திகழ்ஈ ழத்து
ஸ்ரீ சிதம்ப ரேஸ்வரனே போற்றி போற்றி

3. வான்சுரக்கும் கங்கையைமேல் தரித்தாய் போற்றி
மலர் சுரக்கும் மன்மதனை எரித்தாய் போற்றி
மீன்சுரக்கும் பாண்டியநா டாண்டாய் போற்றி
விறல்சுரக்கும் ஒடென்பு பூண்டாய் போற்றி
ஊன்சுரக்கும் பெரும்பவநோய் தீர்ப்பாய் போற்றி
உளம்சுரக்கும் திருப்பதத்தில் சேர்ப்பாய் போற்றி
தேன்சுரக்கும் கலைச்சோலை திகழ்ஈ ழத்து
ஸ்ரீ சிதம்ப ரேஸ்வரனே போற்றி போற்றி.

**அருட்கவி. சீ. விநாசித்தம்பிப் புலவர்**

### காரைநகரில்

# ஒட்டிப்பிறவா இரட்டையர்கள்

வித்துவான் F. X. C நடராசா

காரைநகரையோ அல்லது அங்குவாழும் மக்களையோ வாசகர்களுக்கு அறிமுகஞ் செய்து வைத்தல் கொல்லதெருவில் ஊசி விற்பதை ஒக்கும். காரைநகரைப் பற்றியும் அங்கு வாழும் மக்களைப் பற்றியும் யாவரும் அறிவர் எனினும் சம்பிரதாய முறைக்கு எடுத்தியம்புதல் ஆவசியகமாகின்றது.

காரைநகரில் வாழும் மக்கள் யாவரும் சமயத்தாற் சைவர்களே. சைவாசார சீலராய், பத்திநெறியிற் திளைத்தவராய், விடாப்பிடியாகத் தூய சைவ நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுபவராய் மக்கள் வாழ்ந்து வருவதைக் காண்டல் கூடும். வடபால் காரைநகர் முழுவதற்கும் சொந்தமான சிவன்கோவில் பெருந்தலமாக ஈழத்துச் சிதம்பரமெனச் சைவநன் மக்களாற் போற்றப்படத்தக்க வண்ணம் அமைந்து கிடக்க தீவின் பாகங்களாகிய குறிச்சிகள் தோறும் கோயில்கள், தெருக்கள் தோறும் கோயில்கள், வீடுகள் தோறும் கோயில்கள் என்ற பாங்கரில் திரும்புமிடமெல்லாங் கோயில்கள் காட்சியளிப்பதைக் காண்டல் கூடும். பேரும் புகழும் வாய்ந்த சிவன் கோவில் ஒருபுறமிருக்க, சிவகாமியம்மன், பிள்ளையார், முருகன் முதலானோர்க்குத் திருக்கோயில்கள் பல எழுப்பப்பட்டிருக்கின்றன. காளி, வைரவர், ஐயனார், கண்ணகை, முதலிமார், அம்மன், நாச்சிமார் முதலாந் தெய்வங்களுக்குங் கோயில்கள் உள. ஆகவே காரைநகர் திருக்கோயில் இல்லாத் திருவில்லூருமல்ல; திருவெண்ணீறணியாத் திருவில்லூருமல்ல. வீடுகள் தோறும் தேவார திருவாசகங்கள் ஓதுவதைத் தெருநீளங் கேட்கலாம். கொட்டு மத்தளம் முழங்க, இன்னிசைச் சல்லரி தாளமிட சங்குநாதம் ஒலிக்கப் பாட்டுக் கச்சேரிகள் நடைபெறுவதைக் கோவில் வீதிகளெங்குங் கேட்கலாம்.

ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப் படுகின்ற சிவன்கோவில் காரைநகரின் ஈசானத்தில் பரந்தகன்ற பெரு வெளியில் அமைந்துகிடந்து ஊருக்குப் பெருந் திருவாக விளங்குகின்றது. இங்குள்ள கோயில்களிற் காலத்தாற் பழமையானது; நீள அகலத்தாற் பென்னம் பெரியது. கோயிலின் மூன்றும் வீதிபோற் பெருத்த வீதி யாமெங்கணுங் கண்டதில்லை.

இக்கோயில் ஆதியில் ஐயனார் கோயில் என்றே அழைக்கப்பட்டது. ஏனெனில் ஐயனார் கோயிலே முதலிற் தோன்றியதாகும். இப்பொழுதுங் கோயிலுக்குட் பிரவேசிக்கும்போது ஐயனார் வாசல் வழியாகச் சென்று முதலில் ஐயனாரை வணங்கிப் பின்னர் சிவனை வணங்கி வலம்வந்து சிவன் வாசலால் வெளிவர வேண்டுமென்ற விதி பண்டுதொட்டு இருந்து வருகின்றது. திருவிழாக் காலங்களில் ஏறுபடி மேளங்கள் வந்தால் அவர்கள் முதலில் ஐயனார் வாசல் வழிச்சென்று அவர் வாசலிற் சேவித்த பின்னரே தங்கள் சேவிப்பினைத் தொடங்குவர். ஐயனார் கோயில் தனித்திருந்த காலத்தே அவரை வணங்கித் திரும்பி முதுகுகாட்டி வருதல் வழக்கமில்லையென்று பெரியோர்கள் சொல்லக் கேள்வி. ஐயனாரின் அட்டகாசம் அக்காலத்திலதிகமென்றுஞ் சிவனுக்கு ஆலயம் எடுத்தபின் அடக்கம் என்றுங் கூறியுள்ளார். இதில் உண்மையுண்டு. ஆகவே முதலில் ஐயனார்கோவில் வரலாற்றை முன்னர்க் கூறுவாம்.

ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தே சேதுபதி இராச்சியமும் இராமேசுவரமும் யாழ்ப்பாண அரசுடன் தொடர்புற்றிருந்தமைக்குச் சான்றுகள் பல உள. ஆரியச் சக்கரவர்த்திகள் நாணயத்தில் "சேது" என்ற சொல் பொறிக்கப்பட்டிருந்தது. இதனை அவ்வகைக் காசுகளிற் பார்க்கலாம். இத்தொடர்பு காரணமாக அங்குள்ளார் இங்கு ஈழம் வருதலும் இங்குள்ளார் அங்கு தென்னகத் தமிழகஞ் சேறலும் பெரு வழக்கமாயிற்று. சேதுக்கரையினைக் காவல்புரிந்த வம்மிசத்தின் வழித் தோன்றலாகிய "ஆண்டி"[1] என்னும் பெய

1. ஆண்டி எனபது இவரது இயற்பெயரல்ல. ஆண்டிக்கோலங் கொண்டமையால் ஏற்பட்டதுபோலும். மணற்காட்டு மாரியம்மன்கோயிற்பூசகரும் மணியமுமாகிய தாமோதா ஐயர் காலத்தவர் (1749)

ரிய பெரியார் ஒருவர் காரைநகருக்கு வருவாராயினர். இவர் வியாவில் ஐயனர் கோயிலை வந்தடைந்து அங்குக் கோயில் அருச்சகராயிருந்த தாமோதர ஐயர் அக்கிரகாரத்திற் தங்கியிருந்தார். இருவரும் அதாவது ஆண்டியும் தாமோதர ஐயரும் ஒட்டிப்பிறவா இரட்டையரானுர்கள்.

ஆண்டி இங்குற்ற காலத்தில்[2] ஐயனர் கோயில் சீரற்ற நிலையிலிருந்தது. இக்கோயிலை வெடியரசன்[3] சந்ததியினர் கட்டியெழுப்பிப் பூசித்துவந்தனர் என்ற ஐதிகக் கதையுண்டு. வெடியரசன் சந்ததியினரா கிய முற்குகர் ''பத்தினித் தெய்வமாகிய கண்ணகியை வணங்கவே மாட்டேம்'' என்று மீகாமனுக்குக்கூறிய சூளுரைக்கு இணங்க ஐயனர் அன்பர்களானுர்கள்.

போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்திற்கு முன்னர் கட்டப்பட்ட இக்கோயிலை முதலிற் போர்த்துக்கீசர் இடிக்க முயன்றனர் கோயிலின் சில பாகங்களை இடித்துப் பாழாக்கினர் எனினும் முற்றுக இடித்தார்களல்லர். ஆனுல் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் இடிக்கப்படலாயிற்று. போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளைத் திருத்தவும் புதுப்பிக்கவும் விரும்பிய ஒல்லாந்தர் பல சைவக் கோயில்களை இடித்துக் கல்லுகளை எடுத்துச் சென்று தங்களுக்கு வேண்டிய கட்டிடங்களைக் கட்டலாயினுர். ஆமன்கீல் எனுங் கடற்கோட்டையைக் கட்ட பொன்னுலைத் திருமால் கோயிலும் வியாவில் ஐயனர் ஆலயமும் அழிக்கப்பட்டதாகச் சரித்திராசிரியர் கூறுவர். அவ்வாறு ஐயனர் கோயில் அழிக்கப்பட்ட போது அங்குவதிந்த ஆண்டி, ஐயனர் விக்கிரகத்தை எடுத்துப்போய் திண்ணைப்பிட்டி என வழங்கும் தினகரன் பிட்டி[4] யண்மையிலிருந்த கேணிக்குள் மறைத்து வைத்தனர். ஆங்கு ஆண்டி இருக்கவுந் தொடங்கினர். பாங்கரில் ஓர் அரசமரமுமிருந்தது. அந்தக் காலத்தில் அரசமரங்கள் தோறும் வைரவ சூலம் வைப்பது பெரு வழக்காயிருந்தது. கி. பி. ஏழாம் நூற்றுண்டு தொடக்கம் இந்தியத் தென்னகத்தில் சைவ நாயன்மாரின் ஆதிக்கம் பெருகிய காலத்திற் சமயகலாபனைகள் ஏற்படப் புத்தர் சமணர் ஆதிக்கம் வீழ்ச்சியடையலாயிற்று. மக்கள் சைவ சமயத்தைத் தழுவலாயினர். அதே காலங்களில் இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் சமயகலாபனை ஏற்படப் புத்த சமயத்தவர்களாயிருந்த தமிழர்கள் சைவ சமயத்தினர்களானுர்கள். அதன்பின்னர் அரசமரங்களினடியில் வைரவ சூலங்கள் வைத்து வணங்கலாயினர். இதே பிரகாரம் இங்குற்ற ஆண்டி வைரவ சூலம் ஒன்றினை அரசமரத்தடியிற் தாபித்தனர்; பூசை வழிபாடுகளும் இயற்றுவாராயினர், ஐயனர் விக்கிரகம் கேணிக்குள் மறைந்து கிடந்தது. பின்னர் ஒல்லாந்தரின் கெடுபிடி ஓய ஐயனர் விக்கிரகம் வெளியே எடுக்கப்பட்டு வைரவ சூலத்தின் பாங்கர் வைக்கப்பட்டு வணங்கப்படலாயிற்று. இதனுல் கேணி ஆண்டி கேணியானதுபோல் ஐயனுரும் ஆண்டி கேணி ஐயனரானுர். இன்னும் இந்த அரசமரம் சிவன்கோவில் இரண்டாம் வீதியிலே அக்கினி திசையிலிருப்பதைக் காணலாம். இதனுல் வைரவ சூலமும் ஐயனர் விக்கிரகமும் ஒட்டிப்பிறவா இரட்டையரானுர்கள்.

ஆண்டிகேணி ஐயனுருஞ் சூலமும் மக்களின் பூசை வழிபாடுகளுக்கும் இலக்காகக் கோயில் பிரசித்தமாயிற்று. இஃதிவ்வாறு இருக்கின்ற காலத்தே அம்பலவி முருகர்[5] என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்துவந்தார். பத்தியிற் சிறந்தவர்; சைவாசாரத்தில் கதித்தவர்; அடக்க ஒடுக்கம் நிறைந்தவர்; தருமசிந்தனையாளர். மரபாலுயர்ந்தவர்; களபூமியை வசிப்பிடமாகக் கொண்டவர்; மானுமுதலியார் வம்மிசத்தில் வந்தவர். வாய்மை தூய்மை மெய்யன்புமிக்க அம்பலவி முருகர், இந்த ஐயனர் விக்கிரகத்திற்குத் தனியாகக் கோயில் கட்டி எழுப்பி நித்திய நைமித்திய வழிபாடுகளியற்ற விருப்பங்கொண்டு தமது பேரவாவினை நிறைவேற்றினர். இதனுல் ''அம்பலவி முருகன் வைத்தகல் மெய்யென்றால்'' என்று மக்கள் இன்றும் சூளுரை கூறுவதைக் கேட்கலாம். சிலகாலஞ் சென்றபின் அம்பலவி முருகர் ஐயனர் உற்சவமூர்த்தியையும் கோயிலிற் பிரதிட்டை செய்வித்தனர். இதனுல் ஆண்டியும் அம்பலவி முருகரும் ஒட்டிப்பிறவா இரட்டையானுர்கள்.

கோயிற் திருப்பணிக்காகவும் பூசைக்காகவும் கமக்காரரிடம் நெல்லுத் தண்டியும் வந்தார் அம்பலவி முருகர். கமக்காரர்

2. ஒல்லாந்தா.
3. வெடியரசன் 14ம் நூற்றுண்டிற்குரியவன என்பா.
4. தினகரன் எனற நாமததையுடைய பிராமணன் வாழ்ந்த இடம் தினகரன்பிட்டி ஆயிற்று. பிட்டி என்பது புஷடி என்ற சங்கதமொழியின் சிதைவுபோலும.
5. அம்பலவி முருகர் தோப்பு என்றேர் வளவு இன்றும் விளானை என்ற இடத்திலிருக்கிறது.

சிலர் இவரைக்கண்டு சலிப்பதுமுண்டு. ''அம்பலவி முருகனும் வயிறு வளர்க்க வந்துவிட்டான்'' என்று வாயார வாழ்த்தியும் விட்டார்கள். இதனைக் கேட்ட அம்பலவி முருகர் அன்று தொடக்கம் சோறு சாப்பிடுவதை விட்டனர். உப்பின்றிச் சமைத்த இலைக்கறிகளையே உண்டுவந்தார். இதனால் கோயில் வளவில் முசுட்டைமுல்லை அதிகமாக வளர்ந்தன. முசுட்டைதான் அம்பலவி முருகரின் பிரதான உணவாயிற்று. உப்பின்றித்தானுஞ் சாப்பிடக் கோயில் நிவேதனமும் அவ்வாருயிற்று.

இஃதிவ்வாறிருக்கையில் சிவாலயம் ஒன்றினை எழுப்பவும் அம்பலவி முருகர் உளங்கொண்டனர்; கட்டினார்; சிவலிங்கமும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. பிரதிட்டா கும்பாபிசேகமும் நடைபெற்றது. இதனால் ஐயனார் கோயிலுஞ் சிவன்கோவிலும் ஒட்டிப்பிறவா இரட்டையரானார்கள். சோமாஸ்கந்த மூர்த்தியையும்[6] தாபிக்க நினைத்து தன் மகன் சண்முகத்தாருடன் இந்தியாசென்று தமது பொற்கடுக்கன்களையும் உருக்குவித்து வார்ப்பித்தனர். செவ்விதாக வார்ப்பு முடிந்தது. அம்பலவி முருகரின் ஆருயிரும் நீங்கியது. மகன் சண்முகத்தார்[7] சோமாஸ்கந்த மூர்த்தியைக் கொண்டுவந்து பிரதிட்டை செய்தனர். பின்னர் சண்முகத்தாரால் பரிவாரமூர்த்திகளாகிய விநாயகர் சுப்பிரமணியர் இவர்களுக்குங் கோயில் கட்டப்பட்டன. நடேசர் கோயிலும் சனீசுவரன் கோயிலும் இவர் காலத்திலேயே கட்டப்பட்டன. நடேசர் கோயில் கைலகவருடங் கட்டப்பட்டது. இது சம்பவத்தால் அம்பலவி முருகரும் சண்முகத்தாரும் ஒட்டிப்பிறவா இரட்டையரானார்கள்.

நடராசா திருவுருவம் சிவன் கோவிலிலேயே வார்க்கப்பட்டது. இதனை வார்க்க உபகாரியாக இருந்தவர் மீசைக்காரன் சண்முகம் எனப்படுபவர். பேய்க்காசி வம்மிசத்தவர். இவருந் தமது கடுக்கனை உருக்கி நடேசர் உருவத்தை வார்ப்பித்தவர். சோழபுரத்துக் குருசாமி ஆசாரியர் இதனை வார்த்தவராவார். நடராசர் உருவம் வார்த்தபின் உருவலைர்வலம் 1907ஆம் ஆண்டு நடைபெற்றும் கும்புாபிசேகம் நடைபெறவில்லை. கும்பாபிசேகத்திற்கான பொருள் சேரவில்லை. இது கண்ட மீசைக்காரன் சண்முகம் ஆறுமாத காலமாக அரிகண்டம் இட்டுக்கொண்டனர் என்பர். நடேசர் உருவம் ஏழெட்டு ஆண்டுகளாக அபிசேகம் செய்யும்வரை நெல்லுக்குள் வைக்கப்பட்டதாகவுங் கூறுவர். இக்காலத்தில் கோயில் மணியமாக இருந்த மாசிலாமணி அவர்கள் கும்பாபிசேகத்தை நிறைவேற்றி வைத்தனர்.

இவ்வகையில் விருத்தியடைந்த சிவன் கோவிலில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக்கொண்டே வருகின்றன. அற்புதமாகத் தோன்றிப் பென்னம்பெரியதோர் கோயிலாக விளங்கிக்கொண்டிருக்கும் இத்திவ்விய தலம் உருப்பெற உதவியாக இருந்தவர்கள் யாவரும் ஒட்டிப்பிறவா இரட்டையர்களாக இருந்துள்ளார்களென்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அவ்விரட்டையர்களை வரிசைப்படுத்திக் காட்டுவாம்.

**ஆண்டியும் தாமோதர ஐயரும்.**

**வைரபகுலமும் ஐயனார் விக்கிரகமும்**

6. சோமாஸ்கந்த மூர்த்தி எனவே ஒட்டிப்பிறவா இரட்டையர்.

7. சண்முகததாருக்குக் கடலிலாபத்து நேரிட்டுக் கரையடைநதபோது காப்பாற்றிய் அதிராம் பட்டினத்துச் சோனகரின் உதவிக்கு நன்றியறிதலாகக காரைநகர் கிழக்குக கடற்கரையையடுத்த வளவு அவர்கள் பேருக்கு எழுதிக் கொடுக்கப்படலாயிற்று. அது இன்றுஞ் சோனகவளவெனப்படும். மற்றும் விபரங்களுக்கு கணபதீசுவரக் குருக்கள எழுதிய ஈழத்துச் சிதம்பரம் என்ற நூல் பார்க்கவும்.

ஆண்டியும் அம்பலவி முருகரும்[8]
கந்தன் சங்கரன் என்ற எருதுகள்
கூழையன், வாலன் என்ற நாக
பாம்புகள்
அம்பலவி முருகர் சண்முகத்தார்
— மணியம்
சண்முகத்தார் சின்னத்தம்பி
— மணியம்
சின்னத்தம்பி மாசிலாமணி— மணியம்.
மாசிலாமணி துரையப்பா — மணியம்
சரவணபவக்குருக்கள், கணபதீஸ்வரக்
குருக்கள் (பெரிய குருக்கள்
சின்னக்குருக்கள்).
சுப்பன் முருகன்—திருப்பணிக்காரர்
துரையப்பா முருகேசு—மணியம்
முருகேசு ,ஆண்டிஐயா—மணியம்.

---

8. அம்பலவி முருகரின் வம்மிசம்.

அம்பலவி முருகர்
|
சண்முகத்தார்
|
சின்னத்தம்பி — மாசிலாமணி

சின்னத்தம்பி
|
துரையப்பா — அப்பாக்குட்டி

துரையப்பா
|
முருகேசு

அப்பாக்குட்டி
|
ஆண்டிஐயா.




ஞாலம் நின் புகழ் மிக
வேண்டும் தொன்
ஆலவாயில் உறையும்
எம் ஆதியே

ஈழத்துச் சிதம்பரத்தில் உறையும் சிவன் அருள்
அனைவருக்கும் கிட்ட வாழ்த்துகின்றோம்,

**திரு. வே. இராமலிங்கமும் பாரியாரும்**

"பாக்கி பவனம்"
வேதர் அடைப்பு
காரைநகர்.

# ஆபத்து வேளையில் அபயமளிக்கும் திண்ணபுரத்தான்

திரு. இ. வை. பொன்னம்பலம், காரைநகர்.

இற்றைக்கு ஏறக்குறைய ஒரு நூற்றிருபத்திரண்டு ஆண்டுகட்கு முன்னர் அம்பலவி முருகர் என்னும் அரும்பெரும் அடியாரின் பெருமுயற்சியால் பிரதிஷ்டை செய்யப்பெற்ற திண்ணபுரச் சிவாலயத்தில் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஐந்தாவது கும்பாபிடேகம் நடந்துமுடிந்துவிட்டது.

காரைநகரில் உள்ள, மகோற்சவங்கள் நடைபெறும் பத்துக் கோவில்களில் தலைசிறந்து விளங்குவது இத் திண்ணபுர தேவஸ்தானமாகும். திருவெம்பாவை உற்சவப் பத்துத் தினங்களிலும் காரைநகர் வாசிகள் அனைவரும் ''அவனருளாலே அவன் தாள்வணங்கி''ப் பேரானந்தப் பெருவாழ்வெய்துகிறார்கள் என்றால் அது மிகையாகாது. ஒன்பதாம் திருநாளாகிய இரதோற்சவத்தின்போது நடராசப் பெருமான் ஆனந்தத் தாண்டவமாடிக்கொண்டு சிவகாமசுந்தரி அம்பாளோடு இரதத்தில் ஆரோகணிக்க வரும் காட்சியானது மிகவும் அற்புதமான காட்சியாகும். அன்றிரவு நடக்கும் திருவாதிரை அபிஷேகத்தின் பெருமையை யார்தான் பகரமுடியும்; ஏறக்குறைய நான்கு மணித்தியாலங்கள் நடைபெறும் இப்பெரிய அபிடேகத்தைக் கண்டுகளிக்க ஈழத்தின் நாலாபக்கங்களில் இருந்தும் மெய்யன்பர்கள் வந்து கூடுவார்கள். இந்த அபிடேகத்தைப்போல் எந்தக் கோயிலிலும், ஈழத்திலாயினும், தாயகத்திலாயினும் காணமுடியாது. அபிடேகத் திரவியங்கள் யாவும் அன்பர்களால் மனமுவந்து அளிக்கப்படுவன. இந்த அபிடேகத்திற்கென, ஆதீன கர்த்தாக்களோ அல்லது திருவிழா உபயகாரர்களோ பணங்கொடுத்து அபிடேகத் திரவியங்கள் வாங்கவேண்டிய நிலைமையை எங்கள் கூத்தப்பிரான் உருவாகவிடான். அவனடியார்கள் ஈழத் திருநாட்டின் நாலாபக்கங்களிலும் இருந்து அபிடேகத்திற்குரிய பொருள்களை வாரி வழங்குகிறார்கள். சிங்களச் சகோதரர்கள்கூடப் பல நூற்றுக்கணக்கில் இளநீர்க் குலைகளை மனமுவந்து அளிக்கின்றார்கள் என்றால் அவன் அருள்தான் என்னே!

திண்ணபுர நடேசரின் அபிடேகத் திரவியங்களைப் பாகுபடுத்தும் திறனில் அங்குள்ள அடியாருக்கு ஒப்பாரும் மிக்காரும் உலகில் வேறெங்கணும் இலரென்றே துணிபாகக் கூறலாம். அபிடேகப் பொருள்களில் மிகவும் பெருமை வாய்ந்தது இளநீர்தான். இந்த இளநீர் அபிடேகம் ஏறக்குறைய ஒரு மணித்தியாலயம் வரை நீடிக்கும். அண்மையில் இராஜசபை என்னும் ஆயிரங்கால் மண்டபத்தில் சிதம்பரம் சபாநாயகருக்கு திருவாதிரை அபிடேகம் நடைபெற்றபொழுது, ஈழத்துச் சிதம்பர நடேசருக்கு ஒரு மணித்தியாலம் வரை இளநீர் அபிடேகம் வருடந்தோறும் நடந்து வருகின்றது என்று அவ்விடத்திருந்த அன்பர்களுக்குச் சொல்ல அவர்கள் பிரமித்து விட்டார்கள். ஏனெனில் சாதாரணமாக ஒரு தேங்காய் ஒரு ரூபாவுக்குத் தமிழ் நாட்டில் விற்கையில் அபிடேகத்திற்காக யார்தான் ஆயிரக்கணக்கில் இளநீரைக் கொடுக்க முன்வருவார்கள். நிற்க, அதி முக்கியம் வாய்ந்த இந்தப் பெரிய அபிடேகத்தில் ஒருசில புதிய அம்சங்களைக் கடைப்பிடித்தால் இன்னும் பெருமை பயக்கும். விபூதி, சந்தன அபிடேகங்களைப் பொறுத்தவை அவை. விபூதியை இப்போது திருமேனியில் சாற்றுமாப்போல் சாற்றிவிட்டு, அலங்கரித்து, நிவேதித்து பஞ்சாலாத்தியை ஒரு சிவாசாரியார் காட்டி முடியும் வரையும் இன்னொரு சிவாசாரியார் பொடியாக விபூதியைத் திருமேனி முழுவதும் பரவக் கூடியதாகத் தூவியவண்ணம் இருக்கவேண்டும். அதேபோன்று சந்தனத்தையும் தற்பொழுது செய்வதுபோல் கட்டி கட்டியாய் திருமேனியில் சாற்றிவிட்டு பஞ்சாலாத்தி காட்டிமுடியும்வரை அந்தப் பன்னீர் கலந்த சந்தனத்தை மழைபோல் பொழிந்து கொண்டிருத்தல் நல்லது. பின்னிரவு 2

மணிமுதல் அதிகாலை சூரியோதயம் வரை நடைபெறும். இந்த அதியற்புத திருவாதிரை அபிடேகத்தை வசந்த மண்டபத்தின்கண் நின்று பெருந்திரளான சைவ மெய்யடியார்கள் உளம் உருகி, ஊன் உருகி, உடம்பெல்லாம் கண்ணாய் நீர் சொரிய. தலையாரக் கும்பிட்டுப் பேரருள் பெறுகின்றார்கள். திருவாதிரை நாளாகிய பத்தாம் திருவிழாவன்று சாயந்தரம் 4 மணிக்கு விசேஷ பூசை, திருவூடல், தீர்த்தம் முதலியவற்றைக் கண்டு தரிசித்த மெய்யடியார்கள் அப்பர் திருவாய்மலர்ந்தவாறு மீண்டும் மீண்டும் இந்த மனிதப் பிறவியை வேண்டி நிற்பர் என்பதில் ஐயமில்லை.

1958 ஆம் ஆண்டு இனக் கலவரம் தொடங்கிய தினம். அன்று அலுவலகத்தில் வேலை செய்துகொண்டிருக்கையில், 10 மணியளவில் செட்டித்தெரு, புறக்கோட்டையில் உள்ள தமிழ்க் கடைகெளல்லாம் தீ மூட்டப்பட்டுத் தமிழ் மக்களெல்லாம் தாக்கப்பட்ட செய்தி எட்டியது. என்னுடன் வேலைசெய்த சிங்கள நண்பர்கள் என்னை உடனே வீட்டுக்குச் செல்லும்படி சொல்லி பஸ் தரிப்பு நிலையம் வரை வந்து ஏற்றியும் விட்டார்கள். வீட்டில் என்னை விட மனைவியும், ஒருமகளுந்தான் அன்றிருந்தார்கள். இனக் கலவரச் செய்திகளும், பாணந்துறைக் கதிர்வேலாயுத சுவாமி அர்ச்சகர் தீயில் மூட்டப்பட்டு வெந்து உயிர்நீத்தார் என்ற செய்தியும் எட்டியது. அன்றிரவு 10.30 மணிவரை வானொலியைக் கேட்டுவிட்டு நித்திரைக்குச் சென்றேன். விடிவதற்கிடையில் எங்களையும் குண்டர்கள் வெட்டிக் கொன்றால் எங்ஙனம் நான் ஈழத்துச் சிதம்பர நடேசனுக்குத் தொண்டு செய்வேன்! அபிஷேகத்திற்குரிய பொருள்களைப் பாகுபடுத்துவதற்கு ஒரு ஆள் குறைந்துவிடுமே! என்று அலறி அழுத வண்ணமே படுத்தேன். அன்றிரவு நித்திரை வருமென்றே நான் நினைக்கவில்லை. இருந்தும் தற்பொழுது அமரரான சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் நேரே வந்து அடே, பொன்னம்பலம்! இன்னும் தூங்கிக் கொண்டிருக்கிறாயா? நடுச்சாமமாகிவிட்டது. அபிடேகத்திற்கு தோடை, மா, பலா, வாழை, மாதுளை முதலிய பழங்களைப் பாகுபடுத்த எழுந்திரடா! அத்துடன் மணி அடிக்கவும் வேண்டுமென்று எழுப்புவதோடு எங்கள் சபையில் சிவஸ்ரீ ச. மங்களேஸ்வரக் குருக்கள் நடராசப் பெருமானுக்கு அபிடேகஞ்செய்யுங் காட்சியும் தென்பட்டது. உடனே ஆனந்தப் பெருக்கினால் எழும்பிப் பார்த்தபோது நான் எனது இல்லத்திலே இருப்பதைக் கண்டேன். அப்பொழுது நான் சிறிது நேரம் தூங்கிவிட்டேன் என்று உணர்ந்தேன். சிற்சபேசன் என் அழுகைக்கும் பிரார்த்தனைக்கும் இரங்கினான் என்பது இத்தால் உறுதியாயிற்றன்றோ!

இந்த விபரத்தை நான் அமரரான குருக்களுக்குச் சொன்னேன். அவர் கலவரத்தில் உன்னைக் காத்தருளிய காதை இதுவென்று சொன்னார். என்னைக் காத்தது மட்டுமல்ல, எங்கள் இல்லம் இருக்கும் ஒழுங்கை முழுவதும் அடுத்த நாட்டொடக்கம் மூன்று மாத காலம் இரவு பகலாகப் பட்டாளம் நாலாபக்கமும் (கொட்டகை அடித்துக் குடியிருந்த) காத்த பெருமை எங்கள் நடராசன் கிருபையினாலென்றே துணிந்து கூறுபவன்.

என் வாழ்நாளில் இன்னும் பலவித அனுபவங்கள் உண்டு. அவற்றைக் கூறின் பெருகிக்கொண்டே போகும். தமிழ்நாட்டுச் சிதம்பரத்தைத் தரிசித்து முத்தி பெறலாம் என்ற உண்மையைப் போன்று நம் ஈழநாட்டுச் சிதம்பரமாகிய காரைநகர் திண்ணபுர ஈசனைத் தரிசித்தாலும் பெறலாம் என்பது அடியேனது திடமான நம்பிக்கை.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமின் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

———(O)———

**நல்ஆற்றான் நாடிஅருள் ஆள்க பல்ஆற்றான்**
**தேரினும் அஃதே துணை.**

— குறள்

# ஈழத்துச் சிதம்பரத்து குடமுழுக்கு விழா

— வை. சச்சிதானந்தன் —

நீண்ட காலமாகக் காரைநகர்ப் பெருமக்கள் கண்டுவந்த கனவு சென்ற மாதம் (10.7.70ல்) நனவாயிற்று. பல நூற்றாண்டுகளாக அப் பெருமக்கள் செய்த தவம் பயனளித்துவிட்டது. ஆம்! சென்ற மாதம் பத்தாந் திகதி நடைபெற்ற ஈழத்துச் சிதம்பம் குடமுழுக்கு விழாவைத்தான் குறிப்பிடுகிறேன்.

இத்திருக்கோயிலின் வரலாற்றிற் காலத்துக்குக் கலம் பங்குபற்றிய தொண்டர்கள், எம் சுந்தரேஸ்வரப் பெருமானும், சௌந்தராம்பிகை அம்மையும் அமர்ந்துறையும் கோயிலைக் கருங்கற்றளிகளாகக் காணவேண்டும் என்று பல்லாண்டுகளாகக் கனவு கண்டு வந்தனர். இதன்பொருட்டு அத் தொண்டர்கள் சில கருங்கற்களைக் கொண்டுவந்து கோயில் வீதிகளிற் குவித்தனர். இவ்வாறுகச் சில ஆண்டுகள் கழிந்தன. போக்குவரவு வசதிகளற்ற அக்காலத்தில் இக் கருங்கற்கள் மாட்டுவண்டிகளிற் கொண்டுவரப்பட்டன. இத் தலத்திற் வரலாற்றிற் பெரும் பங்கு கொண்ட அம்பலவிமுருகர், சிவன் கோயிலைப் புதிதாக அமைக்க எடுத்த முயற்சியின் போது, கந்தன், சங்கரன் என்ற பெயருடைய இரு எருதுகள் அச் சிவப்பணியில் பங்குபற்றியமை நாம் அறிந்ததே! இவ்வாறு ஏற்றி வரப்பட்ட ஒரு கருங்கல்லை ஆலயத்திலிருந்து அரை மைலுக்கப்பாற் போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதனால் அந்த இடம் 'கருங்கல்லடி' என்ற பெயரையே பெற்றுவிட்டது. ஓர் இடமே கருங்கல்லாற் பெயர் பெறுமளவுக்குப் பழமை வாய்ந்தது இத் திருப்பணி. அது மட்டுமன்றி, எம் பெருமானின் கோயிற் திருப்பணி விரைவில் முடிவுறவேண்டும் என்ற எண்ணத்தை ஆலயத்துக்கு வரும் அன்பர்கட்கு நினைவுறுத்திக் கொண்டிருந்ததும் அக் கருங்கல்லே. இன்று அக்கருங்கல் எம்பெருமானின் ஆலய அமைப்பில் இடம்பெற்றுவிட்டது. ஆனாலும் இன்றைக்கும் அக் கல் இருந்த இடம் கருங்கல்லடி தான்.

இவ்வாறு காலத்துக்குக் காலம் எடுக்கப்பட்ட முயற்சிகள் கைகூடும் காலம் வந்தது. 1962ம் ஆண்டு மாசி மாதம் இரண்டாந் திகதி கருங்கற் கொத்து வேலைகள் தொடங்கின. எங்கள் பெரிய குருக்களான கணபதீசுவரக் குருக்கள் அவர்கள் அதற்குரிய கிரியைகளைச் செய்துவைத்து ஆசி கூறினார். தாம் நீண்ட காலமாக எண்ணிய எண்ணம் நிறைவேறப்போகிறது என்ற மகிழ்ச்சியில் குருக்களவர்களின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. அன்று தொடக்கம் கடந்த ஆறு ஆண்டுகளாக இக் கொத்து வேலைகள் நடைபெற்று வந்தன. இவ் ஆறு ஆண்டுகளும் கருங்கற்களிற் பதிந்த உளிகள் எழுப்பிய இன்னிசை எம் காதுகளில், அதிகாலையிலேயே கேட்கத் தொடங்கிவிடும். இன்று அவ்வொலி இல்லை. ஆனால், கம்பீரமாகத் தலைநிமிர்ந்து நிற்கும் சுந்தரேஸ்வரர் கருங்கற்கோயிலையும், சௌந்தராம்பிகை அம்மையின் கருங்கற்றளியையும் கண்டு மகிழ்கிறோம். பல்லாண்டுகளாக எம் முந்தையோர் கண்ட கனவு இன்று நனவாகிவிட்டது எனத் திருவருளை வாழ்த்துகிறோம்.

இவ்வாறான பின்னணியில் எழுந்த இக் கருங்கற் கோயிலின் குடமுழுக்கு விழா, சென்ற மாதம் பத்தாம் திகதி நடைபெற்றது. ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்து முப்பதுக்கும் மேற்பட்ட சிவாசாரியர்கள் கலந்துகொண்டனர். சிவஸ்ரீ. க. மங்களேசுவரக் குருக்கள் அவர்கள் பிரதம குருவாக இருந்து இவ் விழாவுக்கான கிரியைகளை நடத்திவைத்தார். சிவஸ்ரீ. சுவாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்கள் கும்பாபிடேகக் கிரியைகளை ஒழுங்கான முறையில் அமைத்து, எவ்விதக் குறையுமின்றி நடைபெற உதவி, சர்வபோதகராகப் பணியாற்றினார்.

இப்பெருஞ்சாந்தி விழாவுக்கான கிரியைகள் சென்ற மாதம் நாலாந் திகதி ஆரம்பிக்கப்பட்டு ஆறு நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றன. சுந்தரேஸ்வரப் பெருமானுக்கும், சௌந்தராம்பிகை அம்மைக்கும்

நவகுண்டங்களுடன் கூடிய யாகசாலைகள் அமைக்கப்பட்டன. இவ்விரு யாகசாலைகளினதும் அழகான அமைப்பு, எம்மால் என்றும் மறக்கமுடியாத ஒன்றாகும். ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு ஒவ்வொரு குண்டத்துடன் கூடிய யாகசாலைகள் அமைக்கப்பட்டன. யாக பூசைகள் ஐந்து நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்றன. இக் கிரியைகளில், நாடோறும் நடைபெற்ற பஞ்சமுகார்ச்சனை சிறப்பாகக் குறிப்பிடத் தக்கதாகும். இக்கிரியைகள் பத்தாந் திகதி முடிவுக்கு வந்தன.

பத்தாந் திகதி அதிகாலையிலேயே ஆலய மணியின் பேரொலி கேட்டது. ''அன்பர்களே, எம்மிறைவன் சுந்தரேஸ்வரனின் குடமுழுக்கு விழா அண்மித்துவிட்டது; அவன் தனக்கெனப் புதிதாக அமைக்கப்பட்ட கருங்கற்றளியில் வீற்றிருந்து, எமக்குப் பேரருள் புரியப்போகிறான். அந்த இனிய காட்சியைக் காண எல்லோரும் விரைந்து வாருங்கள்'' என்பதுபோல் அமைந்திருந்தது ஆலயமணியோசை. அதனை ஆதரிப்பது போன்றிருந்தது காற்றில் மிதந்து வந்த நாதஸ்வர இசை. யாகபூசைகள் தொடங்கிவிட்டன. யாகசாலைகளிலிருந்து அவ்வம் மூர்த்திகளின் விமானங்கட்கு உரிய கும்பங்கள் வீதிவலமாகக் கொண்டுவரப்பட்டன. அவை அந்தந்த மூர்த்திகளின் விமான கலசங்களில் அபிஷேகம் செய்யப்பட்டன. தூபி அபிஷேகம் முடிந்துவிட்டது. அடுத்து நடைபெற இருப்பது கும்பாபிஷேகம்.

எங்கும் ஒரே பரபரப்பான இனிய சூழ்நிலை காணப்பட்டது. பக்தர் கூட்டம் நிமிடத்துக்கு நிமிடம் கூடிக்கொண்டிருந்தது. நாம்காணவிரும்பிய அந்த இனிய காட்சியை இதோ காணப்போகிறோம் என மகிழ்ச்சிக் கடலில் மிதந்தனர் மக்கள்.

காலை 7 மணியளவில் யாக சாலைகளிலிருந்து பிரதான கும்பங்கள் தூககப்பட்டன. அவை குடை, கொடி, ஆலவட்டம், தீவர்த்தி முதலிய அலங்காரங்களுடவி வீதி வலமாகக் கொண்டுவரப்பட்டன. சர்வ வேத மங்கள வாத்தியங்கள் முழங்கின. இவ் விருதுகளுடன் வீதிவவமாகக் கொண்டு வரப்பட்ட கும்பங்கள் அந்தந்த மூர்த்திகளின் ஆலயங்களில் வைக்கப்பட்டன.

அந்தணர்கள் வேதங்களை ஓதிக்கொண்டிருந்தனர். திருமுறைவாணர்கள் திருமுறைகளைப் பாராயணஞ் செய்துகொண்டிருந்தனர். பஜனைக் கோஷ்டியினர் அவன் புகழைப் பாடினர். ஒருபக்கம் சங்குகளின் இன்னொலி. மறுபக்கம் சேகண்டிகளின் இனிய நாதம். மணிகளின் ஒலியும் காற்றில் மிதந்து வந்துகொண்டிருந்தது. இவற்றையெல்லாம் மீறியதாக நாதஸ்வர - தவில் கலைஞர்கள் தம் வாத்தியங்களை வாசித்தனர். எங்கும் ஒலி மயம். பக்தர்கள் தலைமேற் கூப்பிய கரங்களுடன் அவன் புகழைப் பாடிக் கொண்டு, அவனுடைய சந்நிதானத்தையே நோக்கிக்கொண்டிருக்கின்றனர். திடீரென இவ்வொலிகளையெல்லாம் மீறி எழுந்தது பக்தர்களின் ''அரோகரா'' ஒலி. ஆம்! எம் பெருமானுக்குக் கும்பாபிஷேகம் நடக்கிறது. அரோகரா ஒலி விண்ணை முட்டுமளவு உயர்ந்து காணப்பட்டது. இவ்வாறாகச் சுந்தரேஸ்வரப் பெருமானின் கும்பாபிஷேகம் 8.35 மணிமளவில் இனிது நடைபெற்றது. எம் இறைவனுக்கு, திருவருட்டுணையாற் கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்துவிட்டோம் எனப் பக்த சமுத்திரம் பேரானந்தம் அடைந்தது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மகாபிஷேகம் நடைபெற்றது. அன்று ஆனி உத்தர தினமாகையால் எம் தில்லைக் கூத்தனின் திருநாளாம். கும்பாபிஷேகத்தைக் கண்டுகளித்த எம் கண்கள் நடராசப் பெருமானின் திருநடனத்தையும் கண்டுகளித்தன. இரண்டரை ஆண்டுகளாக அவன் திருநடனத்தைக் காணும் பாக்கியம் பெறாத பக்தர்கள் அவன் எப்போது எழுந்தருளுவான் என ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். மாலை ஆறு மணியளவில் ஆனி உத்தர அபிடேகம் முடிந்ததும், எம் தில்லைக்கூத்தன் திருவீதியுலா எழுந்தருளினார். சொல்லில் வடிக்க முடியாத அற்புதக் காட்சி. அவனுடைய திருநடனத்தைக் கண்டபோது இன்னதென்று சொல்லமுடியாத ஓர் இனிய உணர்வு எம் உள்ளத்தைத் தொட்டது. இவ்வாறாக வீதிவலம் வந்து அடியார்கட்கு அருள்பாலித்த கூத்தப்பிரான் மீண்டும் ஆலயத்துள் எழுந்தருளுகிறார். இந்த அற்புதத் திருநடனத்தைக் காணும் பேறுபெற்ற காரைநகர் மக்களாகிய நாம் எவ்வளவு புண்ணியஞ் செய்திருக்கவேண்டும்,

நடராஜர் திருவீதியுலாவைத் தொடர்ந்து திருக்கலியாணமும், பஞ்ச மூர்த்திகளின் திருவீதியுலாவும் இடம்பெற்றன. எம்முடைய வாழ்நாளில் காண்பதற்கு மிகவும் அரியதான, இந்த அற்புத கும்பாபிஷேகக் காட்சியைக் காணக் கிடைத்து, ஏதோ நாம் முற்பிறப்பிற் செய்த சிறிதளவு புண்ணியத்தின் பயனேயாம்.

WITH BEST WISHES

FROM

# N. B. ABDUL GAFFOOR

**102/2, Wolfendhal Street,**

**COLOMBO-13.**

**Tel. No: 34580**

WITH BEST COMPLIMENTS

OF

# Ceylon Paint Industries Ltd.,

Lady Catherine Drive,

**RATMALANA.**

*பொறிவாயில் ஐந்துஅவித்தாள் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்.*

Any Surface that needs Painting needs

Creslit Paints

"CRES-LITE PAINTS"

**Southa Chemical Industries**

**COLOMBO.**

தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.



★

10 - 7 - 70

ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் போது, சர்வ போதகராகக் கடமையாற்றிச் சகல கிரியைகளேயும் சிறப்பாக, எவ்வித குறைவுமின்றி நடாத்தி வைத்து, எல்லோருடைய பாராட்டையும் பெற்ற பிரதிஷ்டா சிரோன்மணி, சிவஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள் அவர்கள்.

★

உ
சிவமயம்

# தேர்த் திருப்பணி

நடராசப் பெருமான் மார்கழி மாதத்திலும் சிவபெருமான் பங்குனி மாதத்திலும் திருவீதியுலா வரும் தேர் புதியதாக அமைப்பதற்கு சிவனடியார்கள் விரும்பியுள்ளனர். இத்திருப்பணிக்கு உங்களால் இயன்ற உதவியை திரு. ந. சுப்பிரமணியம், தனுதிகாரி, இடைப்பிட்டி, காரைநகர் அவர்களுக்கு அனுப்பிவைக்கவும்.

ச. க. பொ.

*With best compliments*

*from*

# A. D. APPADURAI & COMPANY

IMPORTERS :- MOTOR SPARES & ACCESSORIES

MOTOR CYCLE & SCOOTER SPARES

*Telegrams:* "TAURUS"

**55, MALIBAN STREET.**
COLOMBO - 11.

*Telephone :* **25486**

*For your travel or your freight*

*by SEA OR AIR*

*Contract:*

# THE CARGO BOAT DESPATCH CO., LTD.,

39/41, Queen Street,

**COLOMBO-1.**

*Telephone* : **23236 - 8**
*Cable* : **"Despatchco"**
*Telex* : **Colombo 145**

Travel Agents
Customs Clearing & Forwarding Agents,
Transport Contractors
Steamer Agents & Operators

அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறஆழி நீந்தல் அரிது.

உ
சிவமயம்

# பெருஞ்சாந்திக்குச் சாந்ியாயமையும் மண்டலாபிஷேகம்

## அதற்கு அங்கமான சங்காபிஷேக மகத்துவம்

வேதாகமபூஷணம் சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள் அவர்கள், B. A.

ஆலயத்திலே மூலமூர்த்திக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் விதிப்படி கும்பாபிஷேகம் நிறைவேறிய பின்னர் தினந்தோறும் அபிஷேகமும் அலங்கார உற்சவமும் சிறப்பாக நடைபெறும். இவை குறைந்தது ஒரு பக்ஷத்துக்கேனும் நடைபெறும். இங்ஙனம் மூன்று பக்ஷங்கள் கொண்ட காலம் திரிபக்ஷம் எனப்படும். ஒரு பக்ஷம் என்பது 15 நாள்களாக திரிபக்ஷம் என்பது 45 நாள்களாகும். இக்கால எல்லையில் விசேடமான ஒரபிஷேகம் மூலமூர்த்திக்குச் செய்யப்படும். இது பொதுவாக 'மண்டலாபிஷேகம்' என வழங்கப்படும்.

'மண்டலம்' என்னும் சொல் பல துறைகளிலும் பல்வேறு கருத்துக்களைக் கொண்டது. எக்கருத்தில் அது வழங்கப்படினும் அளவைப் பொருளிலேயே அது பெரும்பாலும் ஆளப்படுகின்றது. உதாரணமாக இருக்கு வேதத்தை வகைப்படுத்தினோர் அதனைப் பத்து மண்டலங்களாக வகுத்தனர். வானசாஸ்திரரீதியில் இது சூரிய மண்டலம், சந்திர மண்டலம், முதலிய அளவைகளைக் குறிக்கும். வைத்திய சாஸ்திரத்திலும் மருந்துகள் புடம்பண்ணுவதற்கும், மருந்துண்ணலுக்கும் மண்டலக்கணக்குக் கடைப்பிடிக்கப்படுகின்றது. அரசர்களும் தத்தம் அதிகாரத்துக்கேற்ப மண்டலவர்த்தி, மண்டலேஸ்வரன், மண்டலாதிபதி என்றெல்லாம் இவ்வளவைச் சொற் கொண்டே பெருமை பேசுவர் மாந்திரீகம் முதலியவற்றிலும் ''மண்டலம்'' என்னும் இச்சொல் விசேட பரிபாஷையாக வழக்கிலுண்டு. தீக்ஷா மண்டபம் முதலியனவும். குண்ட மண்டலங்களை முக்கிய அம்சங்களாகக் கொண்டிருக்கும்.

இங்ஙனம் பல்வேறு காலம் தூரம் என்பவற்றைக் குறிக்கும் ''மண்டலம்'' என்னும் சொல் நாம் முன்னர்க் கூறியவாறு 45 தினங்களையே பெரும்பாலும் குறிப்பது. சிலர் 48 நாள் எனவும் கொள்வர். கும்பாபிஷேகத்துக்கு முன்னர் 45 நாட்கள் மூலமூர்த்தியின் யந்திரத்துக்கு ஸ்நபனம் மந்திரஜபம் என்பன செய்வோர் பின்னர் மண்டலாபிஷேகம்வரை ஸ்நபனம், உற்சவம் என்பன செய்து மண்டலத்தைப் பூர்த்தி செய்வர். இடம், பொருள், ஏவல் என்பன இடங்கொடாவிடில் ஒரு பக்ஷமாகிய 15 நாள்கள் வரை அபிஷேகம் உற்சவம் என்பன நிகழ்த்த 45வது தினமாகிய மண்டல பூர்த்தியில் மண்டலாபிஷேகம் செய்வர் இது பெரும்பாலும் சஹஸ்ர கலசஸ்நபனமாக அல்லது சகஸ்ரசங்காபிஷேகமாக நிகழ்த்தப்பெறும். மண்டலாபிஷேக பூர்த்தியிலே தான் சுவாமிக்கு இரக்ஷாபந்தன உத்வாசனம் செய்தல் ஆகமமுறைவாகும். ஆசார்யாபிஷேகம் முதலிய தீக்ஷாவைபவங்களிலும் மண்டலாபிஷேகம் முடிந்த பிற்பாடுதான் இப்க்ஷாவிசர்ஜனம் (காப்பவிழ்த்தல்) நிகழ்வது கண்கூடு. விரிக்கிற்பெருகும்.

### மண்டலாபிஷேகத்தின் நோக்கம்

கும்பாபிஷேகக் கிரியைகள் எங்ஙனம் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள கிராம மக்கள் ஷேமமாக வாழவேண்டுமென்னும் உயர்ந்த நோக்கங் கொண்டு செய்யப்படுகின்றனவோ அதே இலட்சியத்துடன் தான் மண்டலாபிஷேகமும் நிகழ்த்தப்படுகின்றது. அத்துடன் இவ்வபிஷேகம் மேலும் அநேக சாந்திகளைச் செய்கிறது. 'கும்பாபிஷேகம்' அல்லது 'குடமுழுக்கு' என்னும் பிரதிஷ்டைக்குப் ''பெருஞ் சாந்தி'' என்றும் வழக்காறுண்டு. இப்பெருஞ்சாந்தியிலே அஷ்டபந்தனம் சாத்திய தோஷங்கள் நீக்கற்பொருட்டும் வேறு குறை குற்றங்கள் நேர்ந்திருப்பின் அவற்றை நீக்குதற்பொருட்டும், கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவதன் பொருட்டுமே மண்டலாபிஷேகம் அவசியம் செய்யப்படுகின்றது.

ஆதலின் கும்பாபிஷேகம் என்னும் பெருஞ் சாந்தியின் சாந்தியாக விளங்கும் மண்டலாபிஷேகத்தில் இடம் பெறும் சங்காபிஷேகத்தின் தனிப்பெருமையை இக்கட்டுரையில் ஒரு சிறிது விளக்குவோம்,

## சங்கின் பெருமை

சங்கு வைதிகசமயத்தவர்க்கு மட்டுமன்று பௌத்தர் முதலிய ஏனைய மதத்தவர்க்கும் சிறப்புடையது. இது சிறந்த இரத்தினங்களுள் ஒன்றாக எல்லோராலும் மதிக்கப்படுகின்றது. ஆலயங்கள், இல்லங்கள் முதலிய எத்தகைய கட்டிட நிர்மாண வேலைகளிலும், அத்திபாரத்துக்குரிய பொருள்களுடன் நவரத்தினங்களுடன் சேர்த்து உபயோகிக்கப்படுகின்றது. இதனுடைய நாதம் ஆலயங்களில் நடக்கும் மகோற்சவத்தில் ''சர்வ வாத்ய'' கோஷங்களில் முக்கியமானது. இவ்வொலி ஓங்கார ஒலியைக் குறிப்பது.

## சங்கும் நித்ய பூசையில் அதன் பங்கும்

வைதிகசைவர்கள் ஆத்மார்த்தமாகவோ பரார்த்தமாகவோ செய்யும் நித்திய நைமித்திககாமிய பூசைகளில் சங்க பூசை முக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆசாரியர் கண்டா நாதம் செய்து தீபதேவியைப் பிரார்த்தனை செய்ததும் கலசபூசைக்கு முன்னர் சங்கபூசை செய்வார். 'நத்தார் படை' யின் மகிமை சொல்லுந்தரமன்று சங்குப் படையின் மத்தியிலே அதன் அதிதேவதைகளாகிய கங்காதேவியும் வருணனும் வசிக்கின்றனர். அதன் பிற்பக்கத்தில் பிரஜாபதி விளங்குகின்றார். அதன் முன்பாகத்தில் கங்கையும் சரஸ்வதியும் உறைகின்றனர். ஸ்ரீவாசுதேவன் ஆணையினாலே மூவுலகத்திலுமுள்ள தீர்த்தங்கள் யாவும் சங்கின் கண்ணே நின்று நிலவுகின்றனர். இக்காரணத்தினால் சங்கு அறிவாளிகளால் பூசிக்கப்படுவதாக. ஏ! பாஞ்ச ஜன்னியமே! நீ முன்னர்த் திருப்பாற் கடலில் உதித்தனை! மஹாவிஸ்ணுவினால் கரத்தில் தரிக்கப்பட்ட எல்லாத் தேவர்களாலும் பூசிக்கப்பட்டனை! இப்பெற்றித்தாய உன்னைப்போற்றுதும். தேவர் தம் பகைவராய பாதலத்து அசுரர்களின் மனைவியரின் கருத்துக்களையெல்லாம் உன்பேரொலியினால் ஆயிரம் துகள்களாக்கினை! உனக்கு வணக்கம்!" என்று துதித்து மந்திர பூர்வமாக நிரப்பப்பட்ட சங்கு தீர்த்தத்தின் பாதியினால் கலசத்தை நிரப்பி, மீதிப்பாதியினால் பூசைத் திரவியங்களின் மீதும் தன் சிரசின் மீதும் தெளித்து மீட்டும் மந்திரபூர்வமாகச் சங்கை நிரப்ப வேண்டும்.

## சங்கு இருவகை

சங்கு இருவகைப்படும் இடம்புரி, வலம்புரி என. அவை புராணங்களில் முறையே வாமாவர்த்தம், தக்ஷிணாவர்த்தம் என்றழைக்கப்படும். இவை இரண்டனுள்ளும் வலம்புரி மிக விசேடமானதும் கிடைத்தற்கரியதுமாகும்.

## சங்கு தீர்த்த விசேடம்

சங்கு தீர்த்தம் விசேடம் பற்றி பத்மபுராணம் 126ம் அத்தியாயத்தில் சிறப்பான குறிப்புகள் உள. சங்குதீர்த்தம் தேவர்களுக்கும் பெருவிருப்பானது. அதன் நீர் புனிதப்படுத்தும் தன்மையது அது புனித தீர்த்த சொரூபமானது (சாக்ஷாத் பரமேசுவரன் ஒருவரைத்தவிர) எவ்விடத்தில் சங்கொலி உண்டோ அங்கு இலக்குமி நீங்காது வாசம் செய்வாள். எவன் சங்க தீர்த்தத்தினால் நானமாடுகிறானோ அவன் எல்லாத் தீர்த்தங்களிலும் நானமாடிய பலனைப் பெறுகிறான். சங்கு அரியின் உறைவிடம். சங்கு எங்குளதோ அதற்கு வெகு தூரத்தில் மூத்தாள் உதைவாள்.

சங்கில் பால் நிரப்பி இறைவனை நீராட்டினால் ஆயிரம் யாகங்கள் செய்த பலனை அடையலாம் என்றும்.

'சங்கிலே கங்காதீர்த்தம் கொண்டு இறைவனை நீராட்டுவோன் பிறவிப்பிணியை வேரறுப்பர்' எனவும் பலவிதமாகச் சங்கு தீர்த்த விசேடம் பற்றிப் பிரமனவவர்த்த புராணம் முதலியவை கூறும்.

## வலம்புரிச் சங்கின் மகிமை

தக்ஷிணாவர்த்த (வலம்புரி) சங்கின் சிறப்புப் பற்றியும் அதன் இலக்கணங்கள் பற்றியும் சாஸ்திரங்கள் வரித்துக் கூறுகின்றன.

வலப்புரிச் சங்கில் வார்த்த நீர்கொண்டு எவன் இறைவனை அர்ச்சிக்கிறானோ அவன் ஏழு பிறவிகளிலும் செய்த வினைகள் யாவும் அக்கணமே நீங்கப்பெறுகிறான்'' என்று ஸ்காந்தம் கூறும்.

இத்தகைய சிறப்புக்களோடு கூடிய இடம்புரி, வலம்புரிச்சங்குகளில் நீர்பெய்து சிவாகமங்களின் விதி முறை வழுவயது. வேதமந்திரங்களினால் ஆசன, மூர்த்தி, மூலமாக அருச்சித்து சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசுவரப்பெருமானை நீராட்டினால் பக்தர்கள் அடையும் பலன் சொல்லுந்தரமன்று. பல்வகை மூலிகைகளோடுகூடிய அபிஷேக தீர்த்தத்தை பக்தகோடிகள் சிரசில் புரோட்சித்து, உள்ளும் பருகின் வைத்தியநாதன் திருவருளால் உடற்பிணி உயிர்ப்பிணி யாவும் நீங்கப்பெற்று இஷ்டசித்திகளைப் பெற்றுய்தல் சத்தியம். சுபம்.

வெளிவருகிறது! வெளிவருகிறது!

# திருத்திண்ணபுரச் சுந்தரேசர் புராணம் என்றும் ஈழத்துச் சிதம்பரபுராணம்

இந்நூல் ஈழத்துச் சிதம்பரம் என்னும் அழகிய திண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சுந்தரேசப் பெருமானின் வரலாற்றைக் கூறுவது, இதன் ஆசிரியர் புலவர்மணி சோ. இளமுருகனார் ஆவர். இதன் உரையாசிரியை அவரது வாழ்க்கைத் துணைவி பண்டிதமணி பரமேஸ்வரி ஆவர். இந்நூல் பத்துச் சுருக்கங்களையுடையது. இப்புராணம் இப்பொழுது அச்சடிக்கப்பட்டு வருகிறது. இதனை அச்சிட்டு முடிப்பதற்கு இன்னும் 8000/-ரூபா தேவை. ஆகவே இக் கைங்கரியத்தை நிறைவேற்றுவதற்கு நன்கொடையாகவோ கடனாகவோ பணஉதவி புரியுமாறு தங்களை வேண்டுகின்றோம். நன்கொடையாகவோ கடனாகவோ பண உதவி புரிய வசதியின்றெல் புராணப் பிரதி ஒன்றின் பெறுமதியாகிய ரூபா 15/- முற்பணமாக அனுப்பி உதவினால், அப்பணமும் புராணத்தை அச்சிடுவதற்கு பேருதவி புரியுமென்பதனையும் அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

சிவத்திரு. க. வைத்தீஸ்வரர்

---

## மணி ஓசை நாடகத்திலிருந்து ஒரு பாடல்

இராகமாலிகை

**ராகம்: அம்சாநந்தி** **தாளம்: ஆதி**

மணியோசை கேட்குதம்மா — எங்கள்
பிணியகற்றி வாழ்வில் ஒளிதரும் சிவன் கோவில் (மணி)

அணிதிகழ் மணிமாடம் ஆனந்தக் கோபுரமும்
பணிவுடனடியார்கள் புதுக்கிய கோவிலிலே (மணி)

**வந்தனதாரிணி**

நல்ல திருநாளாம் நம்மவர்க்கொரு நாளாம்
நனிசிறந்த சிவனார் கும்பாபிஷேக நாளாம்
வல்ல நம் வேதியரும் வகைபெறு ஞானியரும்
வற்றாப் பொருளீந்தோர் வந்து சூழ் ஈழத்திலே (மணி)

**ஹிந்தோளம்**

வேதங்கள் ஆகமங்கள் விளங்கும் தேவாரமுடன்
வினைதவிர் திருப்புகழும் வாசகமும் முழங்க
நாத உபாசகர்கள் நற்றவத்தோர் நயந்து
நாவினிக்கப்பாட நாதர் திருக் கோவில் (மணி)

**ஷண்முகப்பிரியா**

ஈழத்திலே இதுபோற் எங்கு கும்பாபிஷேகம்
ஏற்றமுடன் நடந்ததென்றறைவீர்
ஆழநிறை அறிவு அன்புடன் அறந் தருமம்
சீலமுடன் நிறைந்த ஈழச் சிதம்பரத்தின் (மணி)

**மோகனம்**

அள்ளிப் பொருள் கொடுப்பர் அன்புடன் வரவேற்பார்
அகம் மலர அன்ன தான தர்மம் புரிவார்
வள்ளலாம் வேதியனை வேதியர் நாயகனை
வழிபட எழுப்பிய நல் ஈழத்துச் சிதம்பரத்தின் (மணி)

WITH THE COMPLIMENTS

OF

**E. B. CREASY & CO, LTD.,**

Queen Street,
COLOMBO-1.
Telephone : 21311

Clearing and Forwarding Agents.
Agents for Smyth World Wide Movers (Packers)
Exporters of Tea
Agents, Distributors for Glacio Fridgedaire, Lambretta Scooters
Yuasa Batteries and Road Master Cycles.

**E. B. CREASY & CO., LTD.,**

55/57, Queen Street,
COLOMBO-1.
T'phone : 21311-4.

**எல்லாவிதமான கட்டிடப் பொருட்களுக்கு**

**"எஸ்லோன்" பி. வி. சி.**
**"அட்டன்" பி. வி. சி.**
**பைப்புகளும்**
**"அண்டன்" பிலொற்றட்**
**அங்கிள் அயன்**
**அண்டன் வாளிகள்**

**நியாயமான விலைக்கு கிடைக்கும்.**

# கதிர் காட்வெயர்ஸ்

**11/11, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.**
*தொலைபேசி:* **130** *தந்தி:* **"கதிர்"**

*கோள்இல் பொறியின் குணம் இலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை.*



# 365 நாட்களில் ஒரு நாளாவது......?

ஆ. அரசரத்தினம், காரைநகர்.

—::O :—::O::—

**''அரிது அரிது மானிடராதல் அரிது''**

ஆகவே உலகில் பிறந்த மனிதர்கள் தமது பிறவியின் சிறப்பைப்பற்றி சிந்திக்க வேண்டியவர்கள் ஆகின்றனர். நாவலர் பெருமான் ''இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்'' என்று பாலபாடம் புத்தகத்தில் கூறியிருக்கின்றார். மனிதர்கள் விலங்குகளுக்குரிய ஐயறிவோடு பகுத்தறிவு எனப்படும் விசேட அறிவைப் பெற்றிருப்பதினாலே நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து உலக வாழ்விற்காகச் கல்வி, செல்வம் முதலியவற்றைத் தேடுவதோடு தாய் தந்தை குரு முதலான பெரியோர்களை வணங்குதல், கடவுளை வழிபடுதல்,உயிர்களிடத்து அன்பு செலுத்தல், பொறுமை, அடக்கம் முதலாம் நற்குணங்கள் நிறைந்தவர்களாக வர முயல்கிறார்கள் இதற்கு வழிகாட்டியாக இருப்பது சமயம்.

சமய வழியில் நின்று வாழ்ந்த நாயன்மார்களும் மற்றும் மெய்யடியார்களும் பேரின்பபெருவாழ்வை அடைந்தது இறை வழிபாட்டினாலே.

கடவுள் வழிபாட்டினாலே உலகில் வேண்டிய எல்லாம் பெறமுடியும் என்பதை ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்'' என மாணிக்கவாசகர் கூறியுள்ளார். மேலும் பிரார்த்தனையால் ஆத்மீக ஈடேற்றம் பெறலாம் என்பதை சமயங்கள் யாவும் சாற்றுகின்றன.

"More things are got by prayers"

ஆகவே எமது சைவசமய போதனைகளையும் வழிகாட்டல்களையும் பின்பற்றி ஔவையார் வாக்கின்படி

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக**

**''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''**

என்பதற்கு அமைய நாம் தினமும் கடவுள் வழிபாட்டை வளர்த்து வருவோமாக.

எம் ஊர்களில் அமைந்திருக்கும் ஆலயங்கள் எமக்கு உதவியாக இருக்கிறது. எமது ஆயுள் எப்போது முடியும் என்பது அறியமுடியாத ஒன்று. இதைக் கருத்தில் கொண்டு சிவ வழிபாட்டை பின்போடாது சிவ கைங்கரியங்களில் ஈடுபடுவோமாக. **இதன் விளைவாக 365 நாட்களில் ஒரு நாளையாகுதல் எமது கிராமத்தில் சிறப்புற்று விளங்கும் ஈழத்துச் சிதம்பரத்தில் சிவ பூசையில் பயன்படுத்துவோமாக.** இதற்கு வாய்ப்பாக உங்களது பிறந்த தினத்தையொட்டியோ அல்லது தாய், தந்தையரது சிவபதமடைந்த தினத்தையொட்டியோ, அல்லது பிள்ளைகளின் பிறந்த தினத்தையொட்டியோ இவ் ஆலயத்தில் விசேட பூசை போன்ற உபயம் ஒன்றை மேற்கொள்வீர்களாயின் வாழ்க்கையின் குறிக்கோளை அடைய ஏதுவானதாகும். **எனவே இப்படியான பூசை உபயம் ஒன்றை மேற்கொள்வதற்கு ஈழத்துச் சிதம்பர ஆதீனகர்த்தாக்களை தொடர்பு கொள்வீர்களாக.**

அன்பர்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இச் சிந்தனை எழுமாயின் ஈழத்துச் சிதம்பரத்தில் 365 நாளும் விசேட பூசை உபயம் நடைபெற வழி வகுத்தவர்களாவோம். அவ்வாறாயின் ஈழத்துச் சிதம்பரத்தின் சிறப்பு மேலும் வளர்ச்சியடையும்.

இவ்வேண்டுகோளை தெய்வீக வேண்டுகோளாக கருதி யாவரும் இச் சிவகைங்கரியத்தில் ஈடுபட திண்ணபுரத்தானின் திருவருள் கிடைக்குமாக.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

அன்பளிப்பு

# வெல்கா

**வெள்ளவத்தை நெசவாலை லிமிட்.,**

கலொலக் வீதி,

கொழும்பு-6.

# ஈழத்துச் சிதம்பரத்தின் ஆனந்தக் கூத்தன்!



ஈழத்துச் சிதம்பரம் என்னுஞ் சிறப்புப் பெயருக்குக் காரணமான ஆடல் வல்லானை—ஆனந்தக் கூத்தனை இப்படத்திற் காண்கின்றீர்கள். கலையழகு மிளிர்வது அவன் திருவுருவம். இம்மூர்த்தியின் திருவாசியில் ஐம்பத்தொரு சுடர்கள் இருப்பது தனிச்சிறப்பாகும். இவை ஐம்பத்தொரு அட்சரங்களைக் குறிப்பதாகக் கூறுவர். தமிழ் நாட்டுப் பேரறிஞர்களான அமுத மொழிக் கொண்டல், திருமுருக கிருபானந்த வாரியார், சித்தாந்தச் செல்வர் க. வச்சிரவேலு முதலியார், செஞ்சொற் கொண்டல் வித்துவான், சிங்காரவேலனர் முதலானோர் இம் மூர்த்தியின் அழகை வாயாரப் போற்றியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலுள்ள சகல ஆலயங்களுக்குஞ் சென்று அவைபற்றி வரலாறுகளை இனிய தமிழில் 'வேங்கடம் முதல் குமரி வரை' என்ற தலைப்பில் வெளியிட்ட பேரறிஞர் திரு. தொ. பாஸ்கரத் தொண்டமான் அவர்கள், இம்மூர்த்தியின் சிறப்பைக் கேள்விப்பட்டுத் தரிசனஞ் செய்வதற்காகவே தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்தார். "தமிழ் நாட்டிலேயே ஒரு சில இடங்களிற்றான் இத்தகைய, அழகிய—பதஞ்சலி வியாக்கிரபாதரோடு கூடிய மூர்த்தியைக் கண்டிருக்கிறேன். இவ்விதமான ஆனந்தக் கூத்தனின் ஆலயத்தைப் பெற்ற இவ்வூர் மக்கள், ஏன், ஈழத்திலுள்ள பெருமக்கள் அனைவருமே பெரும்பாக்கியசாலிகள்" என்றுகூறிச் சென்றதை இப்பொழுது நினைவு கூறுதல் பொருத்தமானதே!

— படக் குறிப்பு ஈழத்துச் சிதம்பரம் சர்மா —

*For Your Requirements of*

S K F BALL & ROLLER BEARINGS

R & M BALL & ROLLER BEARINGS

BRAKE CUPS & BRAKE KITS

CLUTH PLATES & CLUTCH LININGS

TENOID FAN BELTS

GASKET SHELLAC

***Contract:-***

**A. M. DURAI PILLAY**

**SHIP-CHANDLING LTD.**

27, Canal Row,

COLOMBO-1.

***Telephone : 34318***

*With best compliments*

*from*

**LUCKY INDUSTRIES**

11, Hultsdorf Street.

COLOMBO-12.

T'Phone : 33474

***With the compliments***

***of***

**ROYAL SWEET MART**

Dealers in Fine Bombay Sweets Fruits Cordial,

Syrups, Squarhers & Saudils

**142, Keyser Street,**

**COLOMBO-1.**

**Telephone : 23811**

*Also Available at:*

**BOMBAY SWEET HOUSE**

**7, Turret Road, COLOMBO.**

Telephone : 29558

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகளால்
திருப்பெருந்துறையில் அருளிச்செய்யப்பட்டது.

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழினகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 1

அருணனிந் திரன்றிசை யணுகினன் இருள்போய்
அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாம்
திரணிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே.
அருணிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாயெமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபால்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறுநின் றாயெனி னல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுத லல்லால்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கண் முன்வந்(து)
ஏதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுவெமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே, 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
பழங்குடில் தொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாயுல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள் நாம்
போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவ னாசைப்
படவுநின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்



# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேஎம் தோழி பரிசேல்ஓர் எம்பாவாய். 1

ஒளி மிகுந்த அகன்ற கண்களையுடைய பெருமை பொருந்தியவளே, முதலும் முடிவும் இல்லாத அரிய பெரிய ஒளியானவனை யாம் புகழ்ந்து பாட இன்னமும் துயில்கின்றனையோ? நின்னுடைய செவிதான் வன்செவியோ? கடவுளர் கடவுள் ஆயினனுடைய நீண்ட கழலணிந்த திருவடிகளை யாம் வீதிக்கண் நின்று வாழ்த்திய வாழ்த்துப் பாக்களின் ஒலி சென்று அவள் காதினுட் கேட்ட அளவில் உடலை மறந்து ஏங்கித் தேம்பியழுது மலர் நிறைந்த படுக்கையினின்றும் கீழே புரண்டு மார்கழி நீராடலுள் ஒன்றற்கும் பயன்படாதவளாகி இன்னவாறு கிடந்தனள்; இஃது என்னே என்னே! பாவையே, எங்கள் தலைவியினுடைய இயல்பாவது இதுவோ?

பாசம் பரஞ்சோதிக்(கு) என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ(து) எப்போ(து) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசன் ஆர்க்(கு) அன்பார்யாம் ஆர்ஏல்ஓர் எம்பாவாய். 2

செவ்விய இழையை அணிந்தவளே, இரவும் பகலும் நாம் கூடிப் பேசிக் கொண்டிருக்கும் போதெல்லாம் நீ என்னுடைய பற்று முழுவதும் மேலான ஒளியானவனுக்கே உரியது என்று கூறுவாய்; இந்தப் பூக்கள் நிரம்பிய படுக்கையின் மாட்டுப் பற்றினை எப்போது வைத்துக் கொண்டனையோ? செவ்விய இழையை யணிந்த நங்கையர்களே சீச்சீ! இங்ஙனம் நகைத்து இழித்துக் கூறும் சொற்களும் நும்பால் சிலவே உள்ளன போலும்! நீங்கள் எல்லோரும் விளையாடி இகழ்ந்துரை

யாடும் இடம் இதுவேயோ? மெய்யன்பற்ற வானவர்கள் தாம் செய்யும் வணக்கத்திற்குக் கூச்சமடையும் மலர் போன்ற திருவடிகளை நமக்குத் தந்தருளும் பொருட்டு எளிவந்தருளும் ஒளியையுடையானும், சிவலோகத்திற்கு வேந்தனும் ஆகிய தில்லைக்கண்ணுள்ள சிற்றம்பலத்து நடுவே நின்று கூத்தாடும் எண்வகைச் செல்வங்களை யுடையானது கொன்றை மாலையைப் பெற்றுக்கொள்ளும் உரிமையுடையார் யாவர்? யாம் எத்தகையேம்? பாவையே!

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்(து) ஆட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடைமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

முத்துப்போன்ற வெண்பற்களின் ஒளியால் எங்கள் பேதைமையையோ நின் உவகையையோ காரணமாகக்கொண்டு தோன்றிய நகையைப் புலப்படுத்துவோயே, நீ எங்கள் முன்னே எதிர்ந்தெழுந்து 'என் அத்தன் ஆனந்தன் அமுதன்' என்றெல்லாம் மிகவும் வாயூறிப் பேசுவாய்; இப்போது எழுந்து வந்து நின் வாயிற் கதவினைத் திறக்குதி, இறைவன்மேல் பற்றுடைய மெய்யன்பர்களே, ஈசனுக்குப் பழைய காலந்தொட்டு அடிமைபூண்டவர்களே, அடியவரோடும் இறைவனோடும் பயின்றுவரும் சார்பினையுடையவர்களே, நீ இறைவனிடத்துக் கொண்டுள்ள அன்புடைமை வஞ்சமுடையதோ? நின்னுடைய குணஞ்செயல்களையெல்லாம் நின்னோடு பயின்றுவரும் நாம் அறியோமோ? சித்த சுத்தியுடையவர்கள் நமக்குரிய சிவபிரானைப் பாடாது இருப்பார்களோ! பாவையே, இவளைத் துயிலெழுப்ப வந்தமைக்கு இவள் கூறிய இத்தனை மொழிகளும் வேண்டப்படுவனவாகும்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக் கொ(டு) உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்(கு) இனியானைப் பாடிக் கசிந்(து) உள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயே வந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

ஒள்ளிய முத்துப் போன்ற பல் வரிசையையுடையவளே, இன்னும் உனக்குப் பொழுது விடிந்ததில்லையோ? அழகிய கிளியின் மொழியினை ஒத்த மொழியினை உடையராய ஆயத்தார் அனைவரும் துயிலுணர்ந்து வந்தனரோ? வந்தவர்களைக் கணக்கிட்டு அவர் இத்துணையர் என நினக்கு உள்ளவாறு சொல்லுவோங்காண். ஆனால் அவ்வளவுக்கும் வானவர் அனைவர்க்கும் ஒப்பற்ற மருந்து போன்றவனும் வேதத்துக்குச் சிறந்த பொருளாக இருப்பவனும், காண்பார் காட்சிக்கு இனியனவானும் ஆகிய இறைவனைப் பாடி உள்ளம் இளகிக் கட்டுவிட்டு நின்றுருகு

தலாலே யாம் அதைச் செய்தற்கு இயலாதவரானோம். ஆதலால் நீ கண்துயின்று பொழுதை வீணாக்காது வந்தவரைக் கணக்கிட்டுத் தொகை குறைந்தால் துயிலுதி; எம்பாவையே!

மால் அறியா நான் முகனும் காணா மலையினை நாம்
போல் அறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

திருமால் காணாத அடியினையும், பிரமன் காணாத முடியினையும் கொண்ட மலையானவனை நாங்கள் தாம் போலும் அறிந்து கொள்வோம் என்றித் தொடக்கத் தனவாய பொய்யுரைகளைப் பேசும் பாலொடு ஊறுகின்ற தேன்போன்ற பேச்சுக்களை வெளிப்படுத்தும் வாயினையுடைய வஞ்சகியே, கடைவாயிற் கதவைத் திறவாயோ? மண்ணுலகத்தாரும் விண்ணுலகத்தாரும் ஏனைய உலகத்தாரும் அறிந்து கொள்ளுதற்கரிய தன்மையோனது திருக்கோலமும் (வலியவந்து காதலூட்டி) நம்மை ஆண்டு கொண்டருளி நம்மில் அமைந்த குறைபாடுகளை நீக்கி வரும் சிறப்பும் ஆகிய இவற்றைப் பாடிச் சிவனே சிவனே என்று உரத்து ஓலமிடுதலைச் செய்தாலும் அங்ஙனம் ஓலமிடும் குறிப்பியல்பினை உணராதிருக்கின்றாய்; அதுவுமன்றி மயிர்ச்சாந்து பூசிய கூந்தலையுடையாளாகிய தலைமகளது இயல்பினையும் நீ உணர்ந்து கொள்ளமாட்டாய் எம்பாவையே, இங்ஙனமிருக்கின்ற இஃதென்ன பாவம்.

மானே நீ நென்னலை நாளை வந்(து) உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்(து) எம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

மான் போன்ற விழியுடையவளே, நேற்று 'உங்களை நாளைக்கு நானே துயில் உணர்த்துவேன்' என்று எமக்குக் கூறிவிட்டுச் சென்ற திசையை நீ நாணாது கூறுதி; இப்போதும் அவன் வந்து எழுப்புவதற்கு விடியவில்லையோ? அஃதிருக்க, வானுலகும் நிலவுலகும் பிறவுலகும் அறியவொண்ணாத அரிய பெருமான் நம்பொருட்டாகத் தானே வலியவந்து முகமலர்ந்து இனியவை கூறித் தண்ணளிசெய்து எம்மை யாட்கொண்டு கொடுத்தருளும் பெருமை பொருந்திய நீண்ட கழலை யணிந்த திருவடிகளைப் புகழ்ந்து பாடிவந்த எம்பொருட்டேனும் நின்வாயைத் திறந்தாயுமல்லை; உடல் உருகினாயுமல்லை' அங்ஙனம் இருப்பது உனக்கே பொருந்தும்! எங்கட்கும் ஏனையோர்க்கும் அவ்வவர் தங் கோனைப் பாடுதி. எம்பாவாய், இதனை நீ ஏற்று உணர்க.

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறவாய்
தென்னா என்னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

அம்மா, உன்னுடைய விளையாடல்களுள்ளே எழுந்து வந்து எம்மொடு கூடியும் துயில்போல வாளாவிருக்கும் விளையாடல்களாகிய இத்தகையனவும் சிலவே உள்ளனபோலும். முப்பத்துமூவர் எனப் பலவகைப்பட்ட தேவர்களாலும் நினைத்தற்கு அரியவனும், ஒப்பற்ற ஒரு முதல்வனும், பெரிய மிகுபுகழ் உடையானும் ஆகிய சிவபிரானுக்குரிய வெற்றியின் அடையாளங்களாகிய ஊது கொம்பு முதலாயின இசைக்க அதனைக் காதிற் கேட்ட அளவிலே அவ்வோசையைச் சிவன் என்றே பேதமறக்கொண்டு அவனைப் புகழ்ந்து சொல்லற்கு வாயைத் திறக்கும் இயல்புடையாய். யாம் அவன் புகழைப் பாட வேண்டித் ''தென்னா'' என்று தொடங்கற்கு முன் நீ ஆற்றாயாகித் தீயிற் சேர்ந்த மெழுகினை ஒப்ப உருகும் இயல்பும் உடையாய். எனக்கு உரிமை உடையானே எனக்கு அரசன், எனக்கு இனிய அமுதமாயினன் ' என்று யாமனைவரும் தனித்தனியே சொன்னோம். மென்மையற்ற வன்னெஞ்சினையுடைய அறிவிலிகள் போல் வாளா கிடக்கின்றாய்; பின்பும் துயில் செய்கின்றனையோ? உன்னுடைய நித்திரையின் இயல்பு எத்தன்மையதாகும்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகுஎங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழ்இல் பரஞ்சோதி கேழ்இல் பரங்கருணை
கேழ்இல் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈது என்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய். 8

கோழி கூவவும், அதன் கூவுதலைக்கேட்டு ஏனைய பறவைகள் எங்கும் பறவை ஓசை எழுப்பி நின்றன; இசைவாணர் ஏழிசையை இயம்பவும், அதன் பின்னே சங்கூதுவோர் சங்கொலிகள் எங்கும் இயம்பி நிற்கும். ஒப்பற்ற மேலாகிய அவனுடைய மேனி ஒளியையும், அவனுடைய ஒப்பற்ற திருவருளையும், அதனாலாம் ஒப்பற்ற சிறந்த பயன்களையும் நாம் அனைவரும் புகழ்ந்து பாடுதலைச் செய்தோம். அதனைக் கேட்டிலை போலும். இங்ஙனம் எம்முடன் வந்து நின்றும் நீ உறங்கும் இவ்வுறக்கம் எவ்வகைப்பட்ட உறக்கமாகும்? வாய் திறந்து பேசாய். நமக்கு அரசனாகும் இறைவனுக்கு அன்புடைமையாகும் வழியும் இவ்வழியாகுமோ? ஊழிக்காலங்களுக்கும் முதல்வனாக நிலைபெற்ற ஒப்பற்றவனாய், அம்மையை இடப்பங்கிலே கொண்டவனை இனியேனும் பாடுவோமாக. எம் பாவையே, இதனை ஏற்று உணர்க.

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீர்அடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய். 9

எமக்குரிய வேந்தே, காலம் இடம் ஆற்றல் என்னும் இவை முதலாய வற்றால் முற்பட்ட பழையனவாகிய பொருளுக்கும் அங்ஙனமே முற்பட்ட பழைய பொருளானவனே, காலம் முதலாயவற்றால் பிற்பட்ட புதுமைப் பொருளுக்கும் அங்ஙனமே பிற்பட்ட புதுமைப்பொருளாக உள்ளவனே, இத்தகைய உன்னைத் தலைமகனாகப் பெற்ற மிகுபுகழ் பெற்ற யாம், இது முதலாக உனக்கடியவராகிய அவர் தாள்களையே பணிந்து வருவோம். நின் பாங்கராகிய அவர் தமக்கு யாம் பாங்காகி நின்று வருவோம். எமக்கு அத்தகையவர்களே கணவருமாவர். அவர் விரும்பிச் சொல்லிய இயல்பிலே யாமும் விருப்பங் கொண்டு அதனையே பணிவாக ஏற்றுப் பணிசெய்து வருவோம். இவ்வகையினையே எமக்கு அருள் புரிவாயேல், எவ்வகைத்தாகிய குறைவுபாடும் இல்லேமாவோம். எம்பாவையே!

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்து அரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் 10

குற்றமற்ற அழித்தல் தொழிலை உடையானது திருக்கோயில் தொழும் பிற்கு உரிமை பூண்ட திருக்கூட்டத்தினராய பெண்பிள்ளைகாள், சொல்லின் தொடர்பினைக் கழிதலையுடைய பாதமலர்களோ கீழ் உலகங்கள் ஏழினுக்கும் கீழ்ப்பட்டனவாகும். ஆத்திப் பேரரும்பினாலாய மாலையை அணிந்த திருமுடியும் எல்லாப் பொருள்களும் முடிந்து நிற்கும் முடியாயது. உமையம்மையை இடப் பாகத்தே கொண்ட திருமேனி ஒன்றுமேயுடையனல்லன். வேதத்தை முதலாகக் கொண்டு விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் ஆகிய எல்லாரும் புகழ்ந்து கூறினும் தனது புகழ் அங்ஙனம் புகழ்ந்து பயிலக்கெடாத ஒப்பற்ற துணைவன். அன்பர் உள்ளத்தே உள்ளவன். அவனுடைய ஊர் யாது? பேர் யாது? அவனுக்கு உறவினர் யார்? அவனுக்கு அயலவர் யாவர்? அவனைப் பாடும் இயல்பு யாது எனக் கூறுமின்.

மொய் ஆர் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
　　கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
　　செய்யா வெண்ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மைஆர் தடங்கண் மடந்தை மணவாளா
　　ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்த்தொழிந்தோம்
　　எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

தலைவனே! நிறைந்த நெருப்புப் போன்ற செந்நிறத் திருமேனியனே!! வெளிதாகிய திருநீறு பூசியோனே!!! எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள எளிதாக அமைந்த எங்கள் செல்வனே! சிறிய இடையையும் மையுண்ட பெரிய கண்ணையும் உடைய உமையம்மை கணவனே!! ஐயனே! பூக்கள் முதலாயின நெருங்கி நிறைந்து அகன்று இயல்பாகத் தோன்றிய நீர்நிலையில் புகுந்து கையால் ''முகேர்'' என்னும் ஒலியுண்டாக முழுகி முழுகி உன் திருவடிகளைப்பாடி உன் மரபடியோமாக நாங்கள் வாழ்வடைந்தோம். அழகாக அடிமைகொண்டு வரும் அன்புக்காதல் திருவிளையாட்டால் உய்தி எய்தும் அன்பர்கள் உறுதிப்பயன் எய்தும் வகைகள் எல்லாம் யாங்களும் பெற்று ஈடேறிவிட்டோம்; எங்களை இங்ஙனமே இனிமேலும் வருத்தாமல் காத்துவருவாயாக; எம்பாவையே.

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
　　தீர்த்தன் நற் றில்லைச் சிற் றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
　　காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
　　ஆர்ப்பரவம் செய்ய அணி குழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான் பொற்பாதம்
　　ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய். 12

பிணித்த பிறவித் துன்பம் கெட்டொழியுமாறு நாம் மகிழ்ந்து முழுகும் தூய நீருடையானும், நல்ல தில்லைக்கண்ணுள்ள ஞானமாகிய அம்பலத்திலே தீயினைக் கையிலேந்தி நடனம் புரிகின்ற கூத்தனும், இந்த நிலவுலகத்தையும் அந்த வானுலகத்தையும் உயிர்க்கூட்டமாகிய எல்லோமையும் தோற்றுவித்தும் நிலைபெறச்செய்தும் ஒடுக்கியும் விளையாடுவோனுமாகிய இறைவனுடைய செய்தியைப் புகழ்ந்து பேசும் பேச்சுக்களையும் பேசி, வளையல்கள் ஒலிக்கவும், நீண்ட மேகலைகள் ஆரவாரஞ் செய்யவும், அழகிய கூந்தலின்மேல் வண்டுகள் ஆரவாரிக்கவும், பூக்கள் விளங்காநின்ற பொய்கையிலே நீராடி நம்மை அடிமையாக உடைய சிவபெருமானுடைய பொன்போன்ற திருவடியை வணங்கி, அதன்பின் சுனையின் கண்ணுள்ள கரிய நீரிலே மூழ்குவோமாக, எம்பாவையே!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
　　அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
　　எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த

பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

பசிய கருங்குவளை மலர்களையுடைமையானும், செம்மைத்தாகிய தாமரையினது பேரரும்புகளை உடைமையானும், தன்னிடத்தே பறவைக் கூட்டங்களை உடைமையானும், கூந்தற் பின்னலாகிய அரவத்தையுடைமையாலும், உயிரின் அழுக்கைக் கழுவுவோர்கள் வந்து அடைதலினாலும் எம்பிராட்டியையும், எங்கள் பெருமானாகிய சிவபெருமானையும் ஒப்பத் தோற்றம் பெற்ற பெருகிவருகின்ற ஆழ்ந்த நீர்நிலையிலே தமது வளையல்கள் ஒலிக்கவும், காற்சிலம்பு அவ்வளையொடு மயங்கி ஒலிக்கவும், கொங்கைகள் பூரிக்கவும், தாமரைப் பூப்படர்ந்த அழகிய நீருட் பாய்ந்து ஆடுவாயாக; எம்பாவாய்!

காதார் குழைஆடப் பைம்பூண் கலன்ஆடக்
கோதை குழல்ஆட வண்டின் குழாம்ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம்பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மா பாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

காதிற் பொருந்திய தோடு ஆடவும், அணியப்பட்ட பசிய பொன்னால் ஆகிய அணிகலன்கள் ஆடவும், மாலையும் கூந்தலும் ஆடவும், வண்டுக் கூட்டங்கள் ஆடவும், குளிர்ந்த நீருள்ளே மூழ்கித் தில்லைச் சிற்றம்பலத்தைப் பாடியும், மறைநூலின் உட்பொருளைப் பாடியும், இறைவன் அப்பொருளாமாற்றைப் பாடியும், சோதியாய் நிற்கும் கூறுபாட்டினைப் பாடியும், அவனுடைய சென்னியிலே சிறப்பாக அணியப்பட்ட கொன்றை மாலையைப் பாடியும், எல்லாவற்றுக்கும் முதல்வனாகிய அவனுடைய ஆற்றலைப் பாடியும் எல்லாவற்றுக்கும் அவனே முடிவாக நிற்கும் நிலையைப் பாடியும் நம்மை மலங்களினின்று வேறுபடுத்தி வளர்த்து மேம்படச் செய்த பெய்யப்பட்ட வளையலை அணிந்த அன்னையின் திருவடி இயல்பைப் பாடியும் தலைவியே நீ நீராடுதி, யாமும் உன்னுடன் நீராடுவோம்; எம்பாவாய்!

ஓர் ஒருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர் ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவாநெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வார்உருவப் பூண்முலையீர் வாயார நாம் பாடி
ஏர்உருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 15

கச்சுக் கட்டிய கலன் அணிந்த முலையுடையீராவீர், இடையிடையே ஒவ்வொரு முறை எம்பெருமான் என்றென்று நம் பெருமானுடைய சிறப்புக்களை ஒருபொழுதேனும் ஒழிவில்லாமல் சொல்வதில்வாயோயாதவளாகிச் சித்தம் உவத்தல் மிகும்படியாக ஒருபோதேனும் ஒழிவில்லாமல் கண்கள் நெடிய நீர்த் தாரையைச் சொரிய ஒருமுறை பூமியில் அவதாரம் செய்தாற் போன்றவளாகிய தலைமகள் தான் விண்ணவர்களைப் பணிதல் செய்யாதவளாய்ப் (பேரரசனாகிய தலைவன் மாட்டுக் காதற் பித்துடையளாய் இருக்கின்றாள்) பேரரசனாகிய தலைவன் பொருட்டு இவ்வாறு பித்துக் கொண்டிருக்கும் ஒருவராகின்ற விதமுடையவர்களும் வேறு யாரொருவர்? இவ்வண்ணமே அடிமை கொள்ளுகின்ற திறமைப்பாடுடைய தலைவனது திருவடிகளை நாங்கள் வாயாரப் பாடி, தலைவியே! சிறந்து தோன்றும் பொலிவு பொருந்திய நீருட்பாய்ந்தாடுதி!! எம்பாவாய்!

முன் இக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்துஎம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

முகிலே, முன்னர் இக்கடல் நீரைத் தொகுத்து வான்மேலெழுந்து, எம்மைப் பொருளாகவுடைய அன்னையின் திருமேனி போல நீலநிறம் விளங்கப்பெற்று, எம்மை அடிமையாகவுடையாளது சிற்றிடைபோல மின்னுதலைச் செய்து பொலிவு பெற்று, எம்பிராட்டியின் திருவடியின்மேல் விளங்கும் பொன்னாலாகிய அழகிய சிலம்பு ஒலிப்பதுபோல இடித்து, அவளுடைய அழகிய புருவம்போலத் திருவில்லை வளைத்து, அன்னையிற் பிரிதலில்லாத எம் தலைவனாகிய இறைவன் தன்னுடைய மெய்யன்பர்கட்கு நினைந்து, அவ்வம்மை நமக்கு முன்னப் பொழிகின்ற இனிய அருள்போல மழை பொழியாய்; எம்பாவையே!

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 17

மணத்தினையுட் கொண்ட கூந்தலையுடையவளே, சிவந்த கண்களையுடைய திருமாலிடத்தும், திசைக்கொன்றாக நான்கு திசைக்கும் நான்கு முகங்களையுடைய அயனிடத்தும், விண்ணுலகத்தாரிடத்தும், பிறவுலகத்துள்ளாரிடத்தும் இல்லாத

ஒப்பற்ற இன்பமானது நம்மிடத்ததாக நம்மைச் சீராட்டி, இவ்வுலகத்து நம்முடைய வீடுகள் தோறும் எழுந்தருளித் தமது செந்தாமரை மலர் போன்ற அழகிய திருவடியை எமக்குத் தந்தருளும் தொண்டினையுடையானும், தண்ணளி நோக்காகிய அழகிய கண்களையுடையானும், அடியோங்களாகிய நமக்குக் கிடைத்தற்கரிய அமுதம் போன்றவனுமாகிய எங்கள் பெருமை வாய்ந்தவனை (செய்ந் நன்றி யறிந்து போற்றுதலால் நமக்கு அமைந்த) நன்மை விளங்குமாறு பாடித் தன்னுள்ளாடினார்க்குப் பொலிவினைச் செய்யும் நீரிலே பாய்ந்து ஆடுவாயாக; எம்பாவையே!

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய். 18

பெண்ணே, திருவண்ணாமலைக் கண்ணுறையும் இறைவனுடைய திருவடித் தாமரைக்கட் சென்று வணங்கும் வானவருடைய முடிக்கண் இழைத்துள்ள இரத்தினக் கூட்டங்கள், இறைவனுடைய திருவடி ஒளி முன்னர்த் தமக்கு அமைந்த சிறப்பொளி விளக்கம் இழந்தாற்போல உலகிற்கெல்லாம் கண்ணாக அமைந்த ஞாயிற்றின் கதிர்க்கு வந்து இருள் மறையவும், நட்சத்திரக் கூட்டங்கள் தம்முடைய தண்ணொளி மழுங்கி அவ்வொளியோடு தாமும் தோற்றம் பெறுவாய் அகலவும் ஆண்மையைத் தன்னுள்ளே கரந்து கொள்ளும் பெண்ணாகியும், பெண்மையைத் தன்னுள்ளே கரந்து கொள்ளும் ஆணாகியும், அவ்விரண்டனையும் தன்னுட் கரந்துகொள்ளும் அலியாகவும், அம்மூன்றனுக்கும் இடனாகிய வானகமாகியும், மண்ணகமாகியும், ஆண் முதலாய இவையனைத்தும் வேறாகத் தான் அவற்றின் வேறாகியும், காணும் கண்ணுக்கு நிரம்பிய அமுதவடிவாகியும் நிலைபெற்றவனுடைய திருவடியைப் பாடி இந்தப் பொலிவினையுடைய நீரிலே பாய்ந்தாடுவாயாக; எம்பாவையே!

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்குஅப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம்கேள்
எம்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எம்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்குஇப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்குஎழிலென் ஞாயிறு எமக்குஏலோர் எம்பாவாய். 19

எங்கள் பெருமானே, ''உன்னுடைய கையில் உள்ள பிள்ளை உனக்கே அடைக்கலப் பொருளாகும்'' என்னும் பழமொழியை எமக்கு நிகழ்ந்த அச்சத்தால் புதுப்பிக்கும் யாம், உமக்கு ஒரு விண்ணப்பம் செய்கின்றோம்! மற்றதனை நீ கேட்டருள்வாயாக. எம்முடைய முலைகள் நின்னுடைய அன்பர் அல்லாதாருடைய தோள்களைத் தழுவாதொழிக. எம் கைகள் எவ்வகைப்பட்ட பணிகளையும் உனக்கன்றிச் செய்யாதொழிவனவாக. இரவும் பகலும் எங்கள் கண்கள் நின்னைக் காணுதலன்றி வேறொன்றனையும் காணாது ஒழிவனவாகுக. இவ்வுலகத்திலே பிறந்த எமக்கு இவ்வியல்பினையே நீ அருள் செய்வாயாகில், எமக்குப் பகலவன் கிழக்குத் திக்கிலன்றி எத்திசையில் உதயம் செய்தாலும் ஆவதென்ன?; எம்பாவையே!

போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லா உயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய். 20

இறைவனே, நின் மலரனைய திருவடிகள் எவ்வகைத் தோற்றங்கட்கும் ஆதியாகவுள்ளன. ஆகலின் அவற்றை நீ காத்தருள்வாயாக. அவ்வாறே செந்நிறம் பொருந்திய தளிரனைய நின் திருவடிகள் தோற்றங்கள் யாவைக்கும் அந்தமாகவுமுள்ளன. ஆதலின் அவற்றை நீ காத்தருள்வாயாக. அங்ஙனம் காக்கப்படுதற்குரியனவும் பலவகைப்பட்ட உயிர்களுக்குப் பிறப்பிடமாகவுள்ளனவும் ஆகிய நின் பொன்போன்ற திருவடிகளுக்கு வணக்கம். அங்ஙனம் தோன்றிய உயிர்கட்கெல்லாம் ஏற்ற பெற்றியறிந்து போகங்களை அருளும் பொலிவினையுடைய கழல்களை அணிந்த திருவடிகளுக்கு வணக்கம். பலவகைப்பட்டுத் தோன்றிப் போகம் நுகர்ந்து இறுதிப்பட்டு ஒடுங்குவதற்குக் காரணமாய் அமைந்த இணைந்த திருவடிகளுக்கு வணக்கம். இத்தகைய தோற்ற ஒடுக்கங்கட்குக் காரணமாய செந்தாமரை போன்ற திருவடிகள் அரி அயன் என்பார்க்கும் அறிதற்கரியன. ஆதலின் அவற்றிற்கும் வணக்கம். அவ்வாறாய அருமை சான்ற பொன்போன்ற நின் மலரடிகள் யான் உய்யும் பொருட்டு எளிவந்து ஆட்கொண்டருளினவாகலின் அவற்றிற்கு வணக்கம். இவ்வகையாகப் பிறவியின் பயனை நுகர்வதற்குக் காரணமாக அமைந்த மார்கழி நீர்க்கும் வணக்கம். எம்பாவையே, இவ்வணக்கத்தை ஏற்றுக்கொண்டு எனக்கு அருளுவதற்கு ஓர்வாயாக.

---

**அன்பர்களே,**

**கோயிலுக்கு திருவெம்பாவை விழாவிற்கு வரும் போது இதனையும் கொண்டு வருக.**

**யாம் பெற்ற இன்பம் பெறுக! இவ்வையகம்!!**
**சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்.**

உ
சிவமயம்

# காரை அபிவிருத்திச் சபை, கொழும்பு.

## நடப்பு வருட ஆட்சிக் குழு – 1970

காப்பாளர்கள் :

திரு. வே. தில்லைநாதன், B. A. வழக்குரைஞர்
தங்கோடை, காரைநகர்.

திரு. ச. க. பொன்னம்பலம், வழக்கறிஞர்
23/8, ஸ்கோபில்ட் வீதி, கொழும்பு-8.

திரு. ஆ. ச. ஆறுமுகம்
50, புதுச் செட்டித் தெரு, கொழும்பு-13.

தலைவர் :

திரு. வே. சிவகுரு, B. Sc. (Hons.)
அத்தியட்சர்
கல்வி வெளியீட்டுப் பகுதி, கொழும்பு-7.

உப-தலைவர்கள் :

திரு. ந. க. பி. விஜயசிங்கம்
கணக்காளர், சுகாதாரப் பகுதி
335, டீன்ஸ் ரோட், மருதானை, கொழும்பு-10.

திரு. ஆ. ச. ச. இராசரத்தினம்
பங்காளர் ஆ. ச. சங்கரப்பிள்ளை பிரதர்ஸ்,
கொழும்பு - 11.

பொதுச் செயலாளர் :

திரு. க. க. சுப்பிரமணியம்
சுங்க விலை வரி மதிப்பாளர், கொழும்பு.

உதவிச் செயலாளர்கள் :

திரு. ஐ. தி. சம்பந்தன்
மொழி பெயர்ப்பாளர், துறைமுக (சரக்குக்)
கூட்டுத்தாபனம், கொழும்பு-1.

திரு. நா. பொன்னையா
கணக்குப் பரிசோதனை திணைக்களம், கொழும்பு.

பொருளாளர் :

திரு. த. நல்லதம்பி
சுங்கக் கட்டணப் பகுதி, கொழும்பு-3.

உதவிப் பொருளாளர் :

திரு. அ. பத்மநாதன்
சந்தைப் படுத்தும் திணைக்களம், கொழும்பு-3.

ஆட்சிக்குழு :

திரு. சு. குலசேகரம்
நில அளவைப் பகுதி, புத்தளம்.

திரு. அ. கந்தையா
இளைப்பாறிய பிரதம அப்போதிக்கரி
745/6, பேஸ்லைன் வீதி, கொழும்பு-9.

திரு. பொ. வன்னியசிங்கம்
கணக்குப் பரிசோதகர், அஞ்சற் பகுதி,
கொழும்பு-1.

திரு. ஆ. திருநாவுக்கரசு
49, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-12.

திரு. பொ. இராசேஸ்வரன்
அஞ்சல் தந்திப் பரிசோதகர்
புதிய மத்திய தந்திக் கந்தோர், கொழும்பு-1.

திரு. ஆ. பாலசுப்பிரமணியம்
சிரேட்ட உதவிச் செயலாளர்
வர்த்தக அமைச்சு, கொழும்பு-2.

திரு. ஆ. அரசரத்தினம்
கட்டட வேலைப்பகுதி, கொழும்பு-1.

திரு. ப. விமலச்சந்திரன்
வழக்குரைஞர், 69/8, கொட்டா ரோட்,
கொழும்பு-8.

திரு. ச. சு. ஆறுமுகம்
424, மின்சார வீதி, திருகோணமலை.

கௌரவ கணக்குப் பரிசோதகர்கள் :

திரு. சு. வேலாயுதபிள்ளை
கணக்காளர்
பொலிஸ் போக்குவரத்து கந்தோர், கொழும்பு5.

திரு. வே. தர்மலிங்கம்
கணக்காளர்
உணவுக்கந்தோர், கொழும்பு-2.

*With the best Compliments*
*from*

**NIZAM CLEARING AGENCY,**
233/6, MAIN STREET,
COLOMBO-4.

*With the best Compliments*
*from*

**GEEKAY LTD.,**
33, BANKSHALL STREET,
COLOMBO-11.

எல்லாவித ஒஸ்டின், மொறீஸ்,
(B. M. C.) கார், லொறி உதிரிப்
பாகங்களுக்கு கொழும்பு நகரில்
தலைசிறந்த இடங்களில் ஒன்று :-

**பதுளை ஆட்டோமோட்டீவ்ஸ்,**
181, பஞ்சிகாவத்தை றோட்,
மருதானை.

போன் : 32578

ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள்.

மாணிக்கவாசகர் மடாலய அன்னதான
சபையினர் ஆண்டுதோறும் திரு
வெம்பாவை காலத்திலும்,
அண்மையில் கும்பாபி
ஷேகத்தின் போதும்
சிவன் அடியார்களுக்குப்
புரிந்தசேவை பாராட்டுக்குரியது.
அவர்களின் தொண்டு நீடித்து நடைபெற
சுந்தரேசப்பெருமான் துணை புரிவாராக.

காரை ஒளி

கலை, இலக்கிய

பொருளாதார இதழ்

ஆண்டுச் சந்தா ரூபா 1/50

தனிப் பிரதி சதம் 50

மலரும் காலங்கள்:

புத்தாண்டு, நவராத்திரி, பொங்கல்.

காரை அபிவிருத்திச் சபை அங்கத்தவர்களுக்கு "காரை ஒளி" இலவசமாக அனுப்பப்படும்.

With best Compliments

from a

Well Wisher

With the best Compliments of

The Maharaja Organisation Ltd.

# நன்றி

வரலாற்றுப் பெருமை பெற்று விளங்கும் ஈழத்துச் சிதம்பரம் பல இலட்சம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு 10-7-70ல் மகா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது. சைவ உலகமே மெச்சத்தக்க வகையில் இவ்வைபவம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இக் கும்பாபிஷேகத்தையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவில்லையென ஒரு பெருங்குறை நிலவி வந்தது. ஈழத்துச் சிதம்பரத்தின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டுழைத்து வரும் காரை அபிவிருத்திச் சபையினர் இக்குறைபாட்டைக் கருத்தில் கொண்டு, மண்டலாபிஷேகத்தை யொட்டியேனும் மலர் ஒன்று வெளியிடவேண்டுமென்று தீர்மானித்தனர். தில்லைச்சிவனின் திருவருளால் இப்பணிகள் யாவும் தங்குதடையின்றி கைகூடின.

மலரைச் சிறப்புடன் வெளியிடுதற்கு வேண்டிய கருத்துக்களையும் கட்டுரைகளையும் பல அறிஞர்கள் தந்து உதவியுள்ளார்கள். கட்டுரைகளை கட்டுரையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு, வேண்டிய உதவிகள் புரிந்த சிவத்திரு. க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்கள் ஆற்றிய சேவை மகத்தானது.

இம்மலரில் இடம்பெறும் படங்களை திரு. எஸ். ஆர். செல்லத்துரை அவர்கள் தந்து உதவியுள்ளார்கள்.

மலர் சிறப்புடன் வெளியிட பெரு உள்ளத்தோடு விளம்பரம் உதவியவர்த்தகப் பெருமக்களைப் பாராட்ட கடமைப்பட்டுள்ளோம்.

இம்மலரை குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டு உதவிய குமரன் அச்சகத்தாரின் தூய பணி மெச்சத்தக்கது.

இம்மலர் புதுப் பொலிவுடன் வெளிவர பல்துறையிலும் தோற்றுத் துணையாய் துணைபுரிந்த பல அன்பர்களின் பேருதவிகளை என்றும் மறக்க முடியாது.

இம்மலர் பெருமையுடன் வெளிவர உதவி புரிந்த யாவர்க்கும் நன்றி உரித்தாகுக.

— ஆட்சிக்குழு.

With the Best Compliments


from

# THE KUMARAN PRESS

PRINTERS PUBLISHERS & STATIONERS

**201, DAM STREET,**
**COLOMBO-12.**

Phone: **21388**



உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே.

மனிதருந் தேவரு மாயாமுனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமளமே கொன்றைவார் சடைமேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதியும் படைத்த
புனிதரு நீயுமென் புந்தியென் நாளும் பொருந்துகவே.

## எஸ். ஆர். செல்லத்துரை அவர்களால்

ஈழத்துச் சிதம்பரத்திற்கு (காரைநகர் சிவன்கோவில்).
உபயமாக வழங்கப்பட்ட

# பிரதோஷநாயகர்



முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
    மூர்த்தியவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
    பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
    அகன்றாள் அகலிடத்தே ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தந்நாமங் கெட்டாள்
    தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
    அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
    புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையேயாய சிவபதம் அளித்த
    செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
    எங்கெழுந் தருளுவது இனியே




ANTON WICKREMASINGHE LTD.

குமரன் அச்சகம், 201, டாம் வீதி, கொழும்பு-12.